அமுதசுரபி ● ஜூலை – 1992 விலை : ரூ. 5

எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி என்றென்றும் வாழியவே – பாரதியார்

● ஆங்கிரஸ – ஆடி ● மலர் : 45 ● இதழ் : 3 ● ஆசிரியர் : கலைமாமணி விக்கிரமன்

● பதிப்பாளர் : ஏ.வி.எஸ். ராஜா ● கௌரவ இலக்கிய ஆலோசகர் : என்.வி. சுப்பிரமணியன் ஐ.ஆர்.டி.எஸ்.

● மேலட்டையில் : வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்திலுள்ள ரத்தினகிரி முருகன் கோயில், பால முருகனடிமை, வேலூர் கோட்டை, முத்து மண்டபம், லம்பாடி பெண்கள், வேலூர் பஜார் தெரு.

● வண்ணப்படம் : "விடிவெள்ளி" ஆறுமுகம். ● இதழ் ஆப்செட் அமைப்பு : சிவகுமார்


வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்ட இலக்கியச் சிறப்பிதழ்

வேலூரைத் தலைநகராகக் கொண்ட வடஆர்க்காடு – அம்பேத்கர் மாவட்ட இலக்கியச் சிறப்பிதழ் தயாரிக்கும் எண்ணம் தோன்றியபோது பத்துப் பன்னிரண்டு பக்கங்கள் அதற்காக ஒதுக்கினால் போதும் என்று எண்ணினோம்.

வேலூர் நகரிலும் அருகிலுள்ள ஊர்களிலுமுள்ள எழுத்தாளர்கள், கவிஞர்கள் படைப்பிலக்கியங்களைச் சேகரித்துச் சிறப்பிதழை உருவாக்கும் பணியை எழுத்தாளர் நீலவன் அவர்களிடம் ஒப்படைத்தோம்.

சில நாள்கள் கழித்து திரு நீலவன் அவர்கள் ஒரு பட்டியலைத் தந்தார்கள். பிரமித்துப் போனோம். இவ்வளவு கவிஞர்களா? கதாசிரியர்களா? சிறு சிறு தகவல்கள் எண்ணிக்கை ஏராளம், ஏராளம்.

நீங்கள் இப்போது அளிக்கும் தகவல்களைத் தொகுத்தால் அரசாங்கம் தயாரிக்கும் மாவட்டக் 'கெஜட்'டை விடப் பெரிய அளவில் உருவாகும் போலிருக்கிறதே என்றோம். அவர் சிறு புன்னகை பூத்தார். அதன் பொருள், 'ஆமாம், ஏராளமான தகவல்கள். எதை எழுதுவது



திரு நீலவன்

எதை விட்டு விடுவது என்று கடுமையாக உழைத்தார் தெரியவில்லையே" என்பதே. பாரதிப் பணிச் செல்வர் திரு

நீலவன். அவருடைய பாரதிப் பற்றை இப்போது முழுமையும் உணர்ந்தோம். மூத்த எழுத்தாளர்கள், இளம் எழுத்தாளர்கள் என்று அவர் ஒவ்வொருவரையும் அணுகிச் சேகரித்த, இலக்கியச் சுடர்களை இந்த இதழில் காண்கிறீர்கள்.

மணிமாலை என்ற சின்னஞ் சிறு குறிப்புகளில் புதைந்துள்ள செய்திகள் ஒரு நூலாக எழுதுமளவுக்கு முக்கியமானவை.

வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்ட இலக்கியச் சிறப்பிதழ் அடுத்த இதழிலும் தொடர்கிறது.

மாவட்ட தொழில் வளர்ச்சியைப் பற்றி அதிகம் தொடவில்லை. எழுத்துலகச் சிற்பிகளின் எழுத்தோவியங்கள் சில மட்டுமே இடம் பெற்றுள்ளன.

இலக்கியச் சிறப்பிதழை உருவாக்கித் தந்த திரு நீலவன் அவர்களுக்கும், அவருக்கு உறுதுணையாக இருந்த அன்பர்களுக்கு, குறிப்பாகப் புலவர் தாமரைக் கண்ணன் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வ.ஆ.அ. மாவட்டத்தின் இலக்கியச் சிறப்பை, மண் வளத்தை, மனித நேயத்தை அறிந்துக்கொள்ள இந்தச் சிறப்பிதழ் ஒரு நுழைவாசல்.

ஃ



மறக்க முடியாத மகாராஜபுரம்

புகழின் உச்ச நிலைக்கு வந்த மகாராஜ புரத்தின் மறைவு இசை உலகிற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு.

மகாராஜபுரம் என்ற சிறு கிராமத்திற்குப் பெருமை அளித்தவர் சங்கீத கலாநிதி மகா ராஜபுரம் விசுவநாத அய்யர்.

அந்தச் சிற்றூரின் பெயர் சங்கீத வரலாற்றில் அழியாது இருக்கச் செய்தவர், அவரது திருக் குமரன் மகாராஜபுரம் சந்தானம் என்று சொன் னால் மிகையாகாது.

கடுமையான உழைப்பால் 1948ஆம் ஆண்டு தொடங்கி நாற்பது, நாற்பத்தி நான்கு ஆண்டு களில் இசை உலகில் ரசிகர்கள் இதய அரி யணையில் அமர்ந்த சங்கீத கலாநிதி இப்படி நம்மை மீளாத் துயரில் ஆழ்த்திவிட்டுப் போவ தற்காகவா உயர்ந்து உயர்ந்து உயர்ந்துகொண்டே போனார்? கொடுமை; கொடுமை!

திரை இசைப் பாடல்களின் கை ஓங்கத் தொடங்கியவுடன் கர்நாடக இசைக்கு மக்க ளிடையே வரவேற்பு இல்லை என்ற தவறான கருத்தை உடைத்து எறிந்தவர் மகாராஜபுரம் சந்தானம்.

அவர் கச்சேரிக்கு ஏராளமான ரசிகர்கள் கூடினர். 'கேட் கலெக்ஷன்' என்று சொல்லப் படும், நிகழ்ச்சி அன்று காசு கொடுத்து டிக்கட் பெற்றுச் செல்பவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வந்தது.

டிசம்பர் பருவ இசை விழாக்களின்போது அவருடைய கச்சேரியை ஏற்பாடு செய்ய சபை நிர்வாகிகள் போட்டிப்போட்டனர்.

அவரது குரலில் உள்ள நயம், கம்பீரம், தெளிவு, கற்பனை இவற்றை விவரிக்க வார்த்தைகள் போதா.

இசை மேதையை இழந்துத் தவிக்கும் ரசி கர்களுக்கு, ஆறுதல் வார்த்தைகளை யார் எப் படிச் சொல்ல முடியும்?

சங்கீத வாணி தன் அருமைப் புதல்வனை இழந்துவிட்டாள்.

அகால மரணமடையச் செய்து துயரத்தில் ஆழ்ந்திருக்கும் இசை தேவதையை நோக்கி நாம் வேண்டுவதெல்லாம்:

"தாயே! காலதேவனிடம் சொல்லி வையுங்கள் மேதைகளை எங்களிடமிருந்து இப்படி பூப் பறிப்பதுபோல் பறித்துவிடாதீர்கள்" என்று.



தமிழக அரசின் ஓராண்டுச் சாதனை

புரட்சித் தலைவி செல்வி. ஜெ.ஜெயலலிதா அவர்கள், முதலமைச்சராகப் பொறுப் பேற்று முதல் ஆண்டு நிறைவு பெறுகிறது. முன்னுரிமை தரவேண்டிய பல சிக்கலான பிரச்சனைகளுக்கும், சில திட்டங்களுக்கும் முன்னுரிமை யளித்து, இயன்றவரை அனைத்துத் தரப்பு மக்களின் நல்லாதரவைப் பெற முதல்வர் எடுத்துக் கொண்டுள்ள சிரத் தையை ஒருவராலும் குறைத்து மதிப்பிட முடியாது

இந்திய ஜனநாயக வர லாற்றில், மிகப்பெரிய அளவில் மக்களின் பேராதரவைப் பெற்ற அரசியல் தலைவர் செல்வி. ஜெ.ஜெயலலிதா அவர் கள்தான் என்பது அங்கீகரிக் கப்பட்ட உண்மை. மகிழ்ச்சி யளிக்கும் பெரும்பான்மையைப் பெற்று கட்சியின் தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

ஆட்சிக்கு வந்த வுடன் மலிவு விலைச் சாரா யத்தை முதலில் ஒழித்தார், முதல்வர். இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு முன்னூறு கோடி வரை நஷ்டம் என்று தெரிந்தும், ஏழைக் குடும்பங் களின் நல்வாழ்வைப் பெரிதாக மதிப்பிட்டு, இந்த நல்ல காரி யத்தை முதலில் செய்தார், முதல்வர். தாய்க்குலம் மகிழ்ந் தது. பாராட்டிற்று. முதல் வருக்கு நல் வாழ்த்து கூறிற்று.

முதல்வரின் நிர்வாகத் திறமைக்குச் சான்று கூறும் வகையில் சட்டம் ஒழுங்கு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

தொழில் வளர்ச்சியில் தமிழகம் முதல் மாநிலமாகக் காமராஜர் காலத்தில் இருந்து வந்தது. நாளடைவில் மிகவும் பின்னடைந்து போய்விட்டது. எனவே முதல்வரின் கவனம் தொழிவளர்ச்சியின் பக்கம் திரும்பிற்று. தொழிலதிபர் களை அழைத்து அவர்களுடன் கலந்து பேசினார் முதல்வர். தமிழகத்தில் வந்து சேர வேண்டிய பல உரிமங்கள் டில்லியில் முடங்கிக் கிடப்ப தாகத் தெரிய வந்தது. உடனே மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு, பல தொழிற் கூடங்கள் தொடங்க உரிமங்கள் பெற்றுக் கொடுத்தார், முதல் வர். இவற்றுள் குறிப்பாகச் சொல்ல வேண்டியது நேப்கோ நிறுவனம், சென்னைக்கருகில்

உள்ள மணலியில் தொடங்க உள்ள 'மணவேதி' தொழிற் சாலையைச் சொல்ல வேண் டும். சுமார் இரண்டாயிரம் கோடி ரூபாயில் நேரடியாக வும், மறைமுகமாகவும் சுமார் எழுபதி னாயிரம் பேர்கள் வேலை வாய்ப்புப் பெறக் கூடிய மிகப் பிரம்மாண்டமான தொழிற் சாலை இது. கடந்த முப்பது ஆண்டுகளாகத் தமிழகத்திற்கு இப்படியொரு கனரகத் தொழிற்சாலை கிடைக்கவில்லை.

தொழிலாளர் நலன் பாது காக்கப்படாத சூழ்நிலையில் ஆட்சிப் பொறுப்பு ஏற்றி ருந்தார், முதல்வர். மூன்று ஆண்டுகளாக மூடிக்கிடந்த ஸ்டாண்டர்ட் மோட்டார்ஸ் தொழிற்சாலையால் மூவா யிரம் குடும்பங்கள் திண் டாடிக் கொண்டிருந்தன. நூறு ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கி வந்த பக்கிங்காம் கர்னாடிக் ஆலை திடீரென்று மூடப்பட்டு விட்டதால், எட்டா யிரத்துக்கு மேற்பட்ட குடும்பங் கள் பரிதவித்துக் கொண்டிருந் தன. இந்த இரண்டு தொழிற் சாலைகளையும் திறந்து மீண்டும் இயங்கச் செய்து, தனது சாதனை முத்திரை யைப் பதித்தார், முதல்வர்.

மக்களே முதல்வரை நேரடி யாகச் சந்தித்துக் கோரிக்கை மனுக்கள் அளிக்க முதல்வர் வசதிகள் செய்து கொடுத்தார். ஆயிரக் கணக்கான ஏழை மக்களின் கோரிக்கைகளை அதே இடத்தில் விசாரித்து உரிய நடவடிக்கைகளுக்கு அனுப்பி வைத்தார். இதனால் ஆயிரக்கணக்கான ஏழை மக்கள் பலனடைந்தார்கள்.

தமிழகத்தின் தொன்மை யான பெருமைகளுக்குக் கட் டியம் கூறும் வகையில் அமைந்துள்ள ஆலயங்கள் கேட்பாரற்று, சிதலமடைந்து காணப்படுவதைப் பார்த்த முதல்வர், ஆலயப் பராமரிப்புக் கென்று நிதி திரட்டும் திட் டத்தை அறிவித்தார். தனது சொந்தப் பணத்திலிருந்து ஒரு லட்சத்து எட்டு ரூபாய் நிதி வழங்கி இந்தத் திட்டத்தைத் தன் பொன்னான கரத்தால் தொடங்கி வைத்தார். இன்று கோடியைத் தாண்டிவிட்டது இந்த நிதி. இந்த நிதியைக் கொண்டு பல கோயில்களில் புனருத்தாரணப் பணி மேற் கொள்ள இருக்கிறார்கள்.

ஆனால் வெற்றிகரமாக முடிந்த ஒரு ஆண்டு ஆட்சியின் மூலம், சுபிட்சம் நிறைந்த, சிறந்த எதிர்காலம், தமிழக மக்ளுக்காகக் காத்திருக்கிறது என்ற நம்பிக்கை நமக்கு ஏற்பட்டிருப்பது உண்மை.

எனவே முதல்வரை வாழ்த்தி, பாராட்டி ஒத் துழைக்க நாமும் துணை நிற் போம்.

— சிங்கார வேலன்



சென்னை பாரதிராஜா மருத்துவமனையில் செயற்கை கருத்தரிப்பு மையம் (INFERTILITY CENTRE) செயல்படத் தொடங்கி யுள்ளது. பாலு ஜுவல்லர்ஸ் அதிபர் திரு பாலசுப்ரமணியம் அவர்கள் இம் மையத்தை 21.6.92 அன்று திறந்து வைத் தார்.

சிறுதொழில் செய்த பெரிய பிரார்த்தனை



1960 ஆம் ஆண்டு தொடங்கி சுமார் 10 வருஷம் உலகெங்கும் ஹிப்பி என்ற சொல் பிரபலமாயிற்று. கல்லூரி மாணவர்கள் பட்டத்தை உதறி எறிந்து உலகை உய்விக்க இளம் மாணவர்கள் சமூகத்தின் எதிர்காலத்தைத் தங்கள் உள்ளங்களில் தாங்கி, புரட்சிகரமாகச் செயல்பட்டனர். சமூகம் அழுகிவிட்டது. அதன் சட்டங்கள் மக்கள் வாழ்வைச் சிதைக்கின்றன. பெரும் தொழில் முதலைகள் மக்களைச் சுரண்டுகின்றனர். அரசியல் தலைவர்கள் அவர்களுக்கு ஆதரவு. அரசியல் அமைப்பே இதை வலியுறுத்துகிறது. சமூகத்தின் எல்லா அமைப்புகளும் இந்தப் பழைய போக்குக்கு உறுதுணையாயிருக்கின்றது. அத்தனையும் எதிர்க்க வேண்டும். அனைத்தையும் உடைக்க வேண்டும் என்ற இலட்சியத்துடன் கல்லூரியை விட்டு வெளியேறி காட்டில் குடி புகுந்தனர். சமூகம் வகுத்த உடையை உதறித் தள்ளினர். அழகாகத் தலை வாரினாலும் சமூகத்திற்குப் பணிவதாகும் என்பதால் முடியும், தாடியும் வளர்த்தனர். திருமணம் என்பது சமூக அமைப்பு என்பதால் அதை எதிர்க்க விவாகரத்தைப் பிரபலப்படுத்தினர். வியட்நாம் போரை எதிர்த்தனர். வியாபாரத்தின் மூலம் பணம் சம்பாதிப்பது தவறு என்று வியாபாரம் செய்ய மறுத்தனர்.

அவர்களுக்கெல்லாம் இன்று 40 முதல் 45 வரை வயதாகிறது. இலட்சியம் பெரியது. அதைக் கடைப்பிடிக்கும் வழிமுறைகள் சிறியன. சிறிய மனத்துடன், சின்ன வழிகளால் பெரிய இலட்சியத்தைப் பின்பற்றினால், இலட்சியம் நிறைவேறாது. நமக்கு அஸ்திவாரமான வாழ்வும் சீர்குலையும். அப்படி வெளிவந்த இலட்சக்கணக்கானவர்கள், மீண்டும் படிப்பைப் பூர்த்தி செய்து, தொழிலை மேற்கொண்டனர். தீவிரவாதிகள் படிப்பை முடிக்கவில்லை. புத்தமதம், அபி, இந்துமதம், T.M., மகரிஷி, கிருஷ்ணார்ப்பணம் என்பவற்றை நாடினர். வருமானத்திற்காக Metaphysical Books, Handicrafts, கீழ்நாட்டு மதங்களைப் பற்றிய புத்தகங்கள், ஊதுவத்தி, கையால் செய்த பொருள்கள் ஆகியவற்றை விற்கும் கடைகளை ஆரம்பித்தனர். அப்படிப்பட்டவர்கள் பல ஆயிரம் பேர் அன்னையிடம் வந்தனர். ஆரோவில் நகரத்தில் சேர்ந்தனர். நம்முடைய சொஸைட்டிக்கும் ஏராளமான பேர் வந்தனர். மூவர் நம்முடன் தங்கிவிட்டார்கள். இவர்கள் மானேஜ்மண்ட் பற்றிப் புத்தகங்கள் எழுதினர். தங்கள் நாட்டில் மேற்சொன்னதுபோல் சிறு வியாபாரம் ஆரம்பித்தனர். அதுபோன்ற நிறுவனத்தில் ஒரு குறிப்பிட்ட சமயம் பிரார்த்தனை செய்த நிகழ்ச்சியை எழுதவே இக் கட்டுரையில் முற்படுகிறேன்.

இந்தக் கம்பெனி 1975இல் சிறு முதலுடன் ஆரம்பிக்கப்பட்டு, பெருமுதல் பெற்று, பெரு நஷ்டமடைந்து, சிறு அளவில் ஆரம்பித்த மூவருடைய செலவைச் சமாளிக்கும் வகை சில வருஷங்களில் சிறு இலாபமும், மற்ற வருஷங்களில் சிறு நஷ்டமும் வரும் வகையாகச் செயல்பட்டு வருகிறது. இருவர் திருமணமாகாதவர். ஒருவர் திருமணம் செய்து கொண்டும் சாதனையை மேற்கொண்டதால் பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடிப்பவர். அமெரிக்காவில் இன்று 1 மில்லியன் டாலர் செலாவணிக் கம்பெனிகளுக்கு இலாபம் என்று கையில் நிற்காது. இலாபத்தைப் பார்க்க 3 அல்லது 4 மில்லியன் டாலர் வியாபாரம் செய்யவேண்டும். இவர் இந்த 15 ஆண்டுகளில் அரை மில்லியனை எட்டவில்லை. Soapstone மாக்கல்லால் செய்த பொருள்கள் , ஊதுவத்தி, Tapestry சுவரில் மாட்டும் கம்பளம் இவர்கள் விற்கும் பொருள்கள். இவர்களுக்கு வரும் 'ஆர்டர்' 40 டாலர், 100 டாலர், என்றிருக்கும். 1000 டாலர் ஆர்டர் பெரிய ஆர்டராகும். இதை நடத்த இரண்டு சேல்ஸ்மென், ஆபீஸ் மானேஜர், முதலாளி. ஆபீஸ்

'கர்மயோகி'

மானேஜர் சம்பளம் வருஷத்திற்கு 20,000 டாலர். மூன்று மாத வியாபாரம் அதை மட்டுமே சம்பாதிக்கும். இவர்களுடைய சேல்ஸ்மென் 1 மாதத்தில் 10,000 மைல் காரில் செல்வார். கொஞ்சம் ஊதுவத்தியும், கொஞ்சம் மாக் கல்லும் விற்கும், Tapestry ஒன்று விற்பார். வருஷத்தில் மொத்தமாக 1000 கம்பளம் விற்க முடிவதில்லை. இப்படியே இருக்கும் பொழுது, Metaphysical book stores இந்திய ஆன்மீகப் புத்தகங்களை விற்கும் முதலாளிகள் சங்கம், ஒரு மகாநாடு நடத்த முயன்றது. இந்தச் சிறு கம்பெனி முதலாளியை அங்கு பேச அழைத் தனர். இவர் மானேஜ்மெண்ட் புத்தகம் எழுதிய வர். ஆனால் 15 வருஷத்திற்கு முன் அன்னை யைத் தீவிரமாக ஏற்றுக் கொண்டவர், ஓரிரு வருஷத்தில் அதைப் பின்பற்ற மறுத்தார். மானேஜ்மெண்ட் புத்தகத்தை அன்னை தத்து வப்படி எழுதினார். அதனால் தன் (Clients) வாடிக்கைக்காரர்கள் பயன் அடைவதைப் பார்த்தும் முழுவதும் நம்ப மறுத்தார். இந்த மகாநாடு அமெரிக்காவில் 5 இடங்களில் நடந்தது. 10 முதல் 50 பேர் வந்திருந்தனர். இவர்களெல்லாம் ஹிப்பியாக ஆரம்பித்து இப் பொழுது வியாபாரம் செய்பவர்கள். சாதகர், அன்னையைப் பற்றியும், மானேஜ்மெண்ட் பற்றி யும் நீண்ட பல சொற்பொழிவுகளை ஆற்றிய பின் மறுநாளிலிருந்து தொடர்ந்து செய்திகள் வர ஆரம்பித்தன.

என் வியாபாரம் இந்த மாதம் இரண்டரை மடங்காயிற்று. இதுவரை இல்லாத தெளிவு எனக்கு ஏற்பட்டது. அத்துடன் அதிக வரு மானம் வருகிறது.

மகாநாடு முடிந்த அடுத்த நாள் வியாபாரம் 80% உயர்ந்தது.

என் வாழ்நாளில் அறியாதவற்றை உங்களிட மிருந்து அறிந்தேன்.

வருகின்ற ஆர்டர்களைப் பூர்த்தி செய்யவே முடியவில்லை.

என் கணவரின் வாழ்வில் உங்கள் சொற் பொழிவு அடிப்படையான மாறுதலை ஏற்படுத் தியது.

10 நாட்களில் செய்த 30 சொற்பொழிவின் விளைவாகச் சுமார் நூறு பேர் வாழ்க்கையில் தான் எழுதிய புத்தகமும், அன்னைக்குச் செய்த பிரார்த்தனையும் பெரு மாறுதலை ஏற்படுத்திய பின், இனியும் பிரார்த்திக்க மாட்டேன் என்ற பிடிவாதத்தை வைத்திருக்கக் கூடாது என்று முடிவு செய்து பிரார்த்தனை செய்ய ஆரம் பித்தார்.

டேப்பிஸ்ட்ரிக்கு ஓர் எக்ஸிபிஷன் வந்தது. இதுவரை எக்ஸிபிஷனில் நம் செலவு திரும்பி வருவதில்லை. 5 நாளில் ஆயிரம் டாலர் விற்ற தில்லை. பிரார்த்தனையுடன் இதை ஆரம் பித்தார். எக்ஸிபிஷனுக்குப் போய் வந்தால், அதைத் தொடர்ந்து ஆர்டர் வருவதில்லை. நாமே கடைகளுக்குப் போய் ஆர்டர் வாங்க வேண்டும். இந்த எக்ஸிபிஷனில் 6500 டாலருக்கு விற்றது. தொடர்ந்து பலரும் போனில் கூப்பிடுகிறார்கள். ஒருவர் 100 டேப்பிஸ்ட்ரி வேண்டுமென்றார். அடுத்தவர் 550 சப்ளை செய்ய முடியுமா எனக் கேட்டார். எல்லாமாக 1050 டேப்பிஸ்ட்ரிக்கு வழி புறப்பட்டது. உடனே இவர் இந்தியாவுக்கு வந்தார். சப்ளையைத் தயார் செய்வதே இனி வேலை.

சோப்ஸ்டோன்; (Soapstone) ஆர்டர்கள் 100 டாலருக்குக் குறைவாகவே வரும். 1000 டாலர் ஆர்டர் என்பது வருஷத்தில் ஒருமுறை கிடைக் கும். இப்பொழுது 20,000 டாலருக்கு ஆர்டர் கிடைத்தது. சப்ளைக்காக இவர் இந்தியாவுக்கு ஆர்டர் கொடுத்தபின், ஆர்டரை ரத்து செய்து விட்டார்கள். இந்த நிலையில் பிரார்த்தனையை மட்டுமே நம்புவது என்று முடிவு செய்தார். மனத்துள் பெரிய போராட்டம். பிரார்த்தனை பெரியது. ஆர்டர் அசையவில்லை. 7 நாள் கழித்து மீண்டும் ஆர்டர் 10,000 டாலர் அளவில் உயர்வு பெற்றது. 30 நாளைக்குப் பின் முழு ஆர்டரும் திரும்பக் கிடைக்கும் என்ற நிலை ஏற்பட்டது. எதுவும் எழுத்தில் இல்லை. பிரார்த்தனையைத் தொடர்ந்தார். ஆர்டர் 10,000 அளவில் பூர்த்தியாயிற்று. மீதிக்கு எழுத்தில் ஆர்டர் கிடைத்தது. இந்த இருபது ஆயிரம் டாலர் ஆர்டர் மீண்டும், மீண்டும் வரலாம் என்ற சூசகம் ஏற்பட்டது. இதற்குள் இவர் இந்தியாவிலிருந்து திரும்பி வந்தார். கனடாவிலிருந்து இவர் நண்பர் ஒருவர் 1200 கோடி லிட்டர் செண்ட் செய்யும் ஸ்பிரிட் இந்தியாவிலிருந்து வாங்கித் தர முடியுமா எனக் கேட்டார். வாங்கித் தருபவருக்கு லிட்டருக்கு 1 செண்ட் (அமெரிக்க பைசா) கமிஷன் வந்தாலும், 125,000 டாலர் வரும். பிரார்த்தனையின் பலனைக் கண்டு பிரமித்து நிற்கும்பொழுது கண்ணாடி ஒட்டிய கல்லுக்கு அதே போன்ற செய்தி ஒன்று வந்தது. இது நாள் தான் பிரார்த்தனையைப் புறக்கணித் ததின் தவறையும், இன்று அதன் பலனையும் கண்டு மகிழ்ந்தார்.

25 ஆண்டுகளுக்கு முன் 'அமுதசுரபி' ஜூலை 67

திருஞான சம்பந்தருக்கு உமையாள் பாலூட்டுகின்றாரா? அல்லது 'அமுதசுரபி' இதழ் வாசகர்களுக்கு அமுதத்தை ஊட்டுகின்றதா? 1967 ஆம் வருடத்திய ஜூலை மாத இதழில் ஸுபா வரைந்துள்ள அட்டைப்பட ஓவியம் உமா தேவி ஞானசம்பந்தருக்குப் பாலூட்டும் காட்சி. அதைக் காணும்போது நாமே குழந்தை யாகி அன்னையின் ஞானப் பாலுக்கு நிற்க மாட்டோமா என்ற ஏக்கத்தை உள்ளத்தில் ஏற்படுத்துகின்றது. இந்த அரிய காட்சிக்கு உரிய விளக்கம் இதழின் உள்ளே 'பார்வதி தந்த பாலமுதம்' எனத் தலைப்பிட்டு இடம் பெற்றுள்ளது. அங்கே செந்தமிழ் அமுதத்தைச் சேக்கிழார் திருவாக்கில் சுவைத்து மகிழ்கிறோம்! "வாழ நினை மனிதா" எனும் கீர்த்தனையைக் கவிஞர் மு. வரதராஜன் வழங்கி உள்ளார். கருத்துச் செறிவுடைய பாடல்.

க.பஞ்சாபகேசன் எழுதியுள்ள 'நான், நீ, யாவும் ஐயப்பனே';என்.வி.ஆர். ஸ்வாமி எழுதியுள்ள 'பட்டி வழிபட்ட பட்டீச்சரம்' ஆகிய கட்டுரைகள் இதழைப் பக்திமணம் கமழச் செய்கின்றன.

குழந்தைகளுக்கு நாப்கின் தைப்பதை எளிமையாகக் கற்றுத் தந்துள்ளார் ஆர். லட்சுமி.

சாண்டில்யனின் 'பல்லவ திலகம்' வழக்கம் போல் மணி முடி தரித்துப் பவனி வருகிறான். புவை எஸ். ஆறுமுகம் எழுதி இருக்கும் 'சாலையிலே இரண்டு மரம்' தொய்வில்லாமல் நிமிர்ந்து நிற்கிறது. பள்ளி ஆசிரியர்களுக்கான சிறப்புச் சிறுகதைகள், 'மனிதனுக்குச் சாவு வேண்டும்', 'அடிமரம்' இரண்டும் தரம் வாய்ந்தவை. மு. அய்யாக்கண்ணு, வீரை பி. சங்கரன் ஆகிய இருவரும் பாராட்டுக்குரிய கதைகளைப் படைத்துப் பாராட்டுப் பெற்றுள்ளனர்.

இந்திய ஒருமைப்பாட்டை வளர்க்கிறது 'துரிஞ்சி மரத் தொட்டில்கள்'. ஜவ்வாது மலைச்சாரலில் பிறந்தவர்களுக்கும் கங்கைக் கரையில் பிறந்தவர்களுக்கும் இடையே பிறக்கும் சகோதர பாசத்தை மிக உணர்ச்சிகரமாக எழுதியுள்ளார் வையவன்.

புதுமைக் கருத்துக்குப் புதுமைச் சித்தன் எழுதியுள்ள பூ, மஞ்சள், குங்குமம். காமாட்சியின் அருளைக் கருணையுடன் கூறுகிறது. சி.ஈ.எஸ். பெருமாள் எழுதியுள்ள 'அவள் அருள்'. உயிர் நட்பு முறிவதால் ஏற்படும் கேடுகளை மிகத் தெளிவாக உணர்த்துகிறது திருவரங்கம் அமிழ்தனின் 'மணிஓசை' என்ற கதை.

'கோபம் குடி கெடுக்கும். நிதானம் குடி காக்கும்' என்பதனை மிக மிக நாசுக்காக உணர்த்தியுள்ளார் விந்தன். 'வீரம் என்பது கொலையல்ல' என்ற விந்தனின் சிறுகதை படித்துச் சுவைக்க மட்டுமல்ல! படித்துச் சிந்திக்கவும் - பயன் பெறவும் படைக்கப் பெற்ற அருமையான வார்ப்பு. இடை இடையே சிற்சில பக்கங்களில் இடம் பெற்றிருக்கும் செய்திகள் துணுக்குகள்கூட வெகு கவனத்துடன் வெளியாகியிருக்கும் பான்மை உண்மையாகவே உள்ளார்ந்து போற்றத் தக்கது. 'வளரும் இசைப் புலவர்கள்' தொடர் அறிமுகக் கட்டுரையில் கடலூர் சுப்பிமணியமும் மதுரை வெங்கடேசனும் இடம் பெற்றுள்ளனர்.

மனிதனுக்கு மகிழ்ச்சி தரும் கலை பரதம். இதை வளர்த்தவர் புதுவைக் கலை உலகிற்குப் பெரும் தொண்டாற்றியவர் திருமதி சின்னாஸ். இவரைப் பற்றிய கட்டுரை வளர்ந்து வரும் நடனமணிகளுக்குச் சிறந்த வழிகாட்டலாக அப்போது விளங்கி இருக்கும். பதினைந்து பக்கங்களுக்கு மேல் விளம்பரங்கள் இடம் பெற்றிருப்பதைப் பார்க்கும் போது, வணிகத் துறையில் 'அமுதசுரபி'யின் செல்வாக்கு ஓங்கி உயர்ந்திருந்ததைக் கணிக்க முடிகிறது.

60 காசுகளுக்கு அடேங்கப்பா கண்ணுக்கு விருந்து வளமும், கருத்துக்கு அறிவு நலமும் எத்தனை? எத்தனை?

— க. விஜயலட்சுமி

கற்பனை எப்போது வரும்?

பெர்னாட்ஷா : – சிறந்த கற்பனை வளம் சுரக்க இவர் சிறிது தூரம் பஸ்ஸில் பிரயாணம் செய்து விட்டு வந்துதான் எழுதுவதற்கு அமர்வார்.

எட்கார் வாலஸ் : மர்மக்கதை மன்னர் எட்கார் வாலஸ் தனது கற்பனை தடைபடாமல் இருக்க தேநீர் அருந்திக் கொண்டே இருப்பாராம்.

மார்க் ட்வெயின் : வேகவைத்த முட்டையைத் தின்றுகொண்டே இருந்தால்தான் மார்க் டிவெயினுக்கு கற்பனை சுரக்கும்.

தமிழில் தவறுகளை அறிவோம்

மூத்து கண்ணப்பர்

(ஒற்று மிகுதல்)

சில வேற்றுமை உருபுகளுக்குப் பின் மிகும் (க்,ச்,த்,ப்).

முதலில் வேற்றுமை உருபுகளைப் பற்றி அறிந்து கொள்வோம் (நினைவு படுத்திக் கொள்வோம்). வேற்றுமை (Case) என்றால் வேறுபாடு என்பது பொருள். அதாவது இயல்பாக உள்ள பெயர்ச் சொல்லோடு ஓர் எழுத்தோ, ஒரு சிறு சொல்லோ (இடைச்சொல்) சேர்ந்தால் முதலில் உணர்த்திய பொருள் மாறுபட்டுவிடும்; வேறாய் விடும். அவ்வாறு வேறுபடுத்துவதற்குக் காரணமாய் நிற்கும் அவ்வெழுத்து அல்லது சிறு சொல்லுக்கு வேற்றுமை உருபு ((Casal sign)) என்பது பெயர்.

(எ.டு) 1. கண்ணன் வென்றான்.

கண்ணனை வென்றான்.

முதல் வாக்கியத்தில் கண்ணன் வெற்றி பெற்றான் என்பது பொருள். இரண்டாவது வாக்கியத்தில் கண்ணன் தோற்றுப் போனான் என்று பொருள் மாறிவிட்டதல்லவா? எதிர் மாறான பொருளை அல்லவா கொடுத்து விட்டது? அப்படி மாறான, வேறுபாடான பொருளை உணர்த்துவதற்குக் காரணமாய் இருந்தது எது? கண்ணன்+ஐ = கண்ணனை 'ஐ' என்னும் ஒரு எழுத்து. அதுதான் வேற்றுமை உருபு (Casal sign)

(எ.டு). 2. கண்ணன் பார்த்தான்.

கண்ணனால் பார்த்தான்.

முதல் வாக்கியத்தில் கண்ணன், அவனே ஒன்றைப் பார்க்கிறான். இரண்டாம் வாக்கியத்தில் வேறொருவன் ஒன்றைப் பார்த்தான்; அவன் பார்ப்பதற்குக் கண்ணன் துணை நின்றான். அதாவது கண்ணன் பார்க்கவில்லை; அவன் உதவியால் வேறொருவன் பார்த்தான் என்று பொருள் மாறிவிடுகிறதல்லவா?

இவ்வாறு பொருள் மாறுவதற்குக் காரணமாய் இருந்தது 'கண்ணன் +ஆல் = கண்ணனால்'. 'ஆல்'ஒருசிறு சொல். அந்த 'ஆல்' என்பது தான் வேற்றுமை உருபு.

வேற்றுமை வகைகள் : வேற்றுமை எட்டு வகைப்படும்.

1. முதல் வேற்றுமை (Nominative case) இதற்கு உருபே இல்லை.

(எ.டு) வேலன் வந்தான். இந்த வாக்கியத்தில் 'வேலன்' எழுவாய், 'வந்தான்' பயனிலை, 'வேலன் என்னும் பெயர்ச் சொல்லோடு எந்த உருபும் சேரவில்லை. வெறும் 'எழுவாய்'. அதனால் இது எழுவாய் வேற்றுமை என்றும் கூறப்படும். எழுவாய் வேற்றுமையே முதல் வேற்றுமை.

2. இரண்டாம் வேற்றுமை (Objective case) உருபு 'ஐ' (எ.டு) வேலனை (வேலன் + ஐ)

3. மூன்றாம் வேற்றுமை உருபுகள் : (Instrumental case)

'ஆல்', 'ஆன்', 'ஒடு', 'ஓடு', 'உடன்'.

(எ.டு)

வாளால் வென்றான் – ஆல்

வாளான் வென்றான் – ஆன்

வாளொடு சென்றான் – ஒடு

வாளோடு சென்றான் – ஓடு

வாளுடன் சென்றான் – உடன்

4. நான்காம் வேற்றுமை உருபு : (Dative case) 'கு'

(எ.டு) வேலனுக்கு வணக்கம்.

5. ஐந்தாம் வேற்றுமை உருபுகள் : (Ablative case) 'இல்', 'இன்', 'நின்று', 'இருந்து'.

(எ.டு) வேலனில் விநாயகன் பெரியவன் – 'இல்'

மயிலையின் கிழக்குக் கடல் – 'இன்'

மயிலையினின்று – 'நின்று'

மயிலையினிருந்து – 'இருந்து'

6. ஆறாம் வேற்றுமை உருபுகள் :

'அது', 'ஆது', 'அ', 'உடைய' : (Possessive case or genitive case)

(எ.டு) எனது கை 'அது'.

எனாது பொருள் (என்னுடைய பொருள்) 'அது'

என் கண்கள் – (என்னுடைய கண்கள்)'அ'

என்னுடைய கை 'உடைய'

7. ஏழாம் வேற்றுமை உருபுகள் : Locative case)

'கண்', 'இல்', 'உள்', 'இடம்', 'கீழ்', 'மேல்', 'முன்', 'பின்', 'பால்', 'இடை' (இடப் பொருளைக் குறிக்கும்)

(எ.டு)

முதற்கண் – 'கண்'

முதலில் – 'இல்'

நூலுள் – 'உள்'

வேலனிடம் – 'இடம்'

திருவடிக்கீழ் – 'கீழ்'

தோள்மேல் – 'மேல்'

வேலன் முன் – 'முன்'

கண்ணன்பின் – 'பின்'

வேலன்பால் – 'பால்'

மண்ணிடை – இடை

8. எட்டாம் வேற்றுமை உருபு :

இதற்கு உருபு ஏதும் இல்லை. கூப்பிடு பொருளில் வரும். பெயர்ச் சொல் அழைக்கும் பொருளில் வந்தால் அதுவே எட்டாம் வேற்றுமை அல்லது விளி வேற்றுமை எனப்படும். விளித்தல் என்றாலும் அழைத்தல் தானே.

(எ.டு)வேலா!

கண்ணா!

இப்போது வேற்றுமை உருபுக்குப்பின் க்,ச்,த்,ப் இவை மிகுவதைக் காணலாம்.

19. இரண்டாம் வேற்றுமை உருபு (ஐ)க்குப் பின் மிகும்

(எ.டு) யானையைப் பார் – யானை+ஐ = யானையை இங்கே 'ஐ' என்பது இரண்டாம் வேற்றுமை உருபு அதனால் 'ப்' மிகுந்தது.

யானை+பார் = 'யானை பார்' – இங்கே மிக வில்லை. ஏன்? இதில் உள்ள 'னை' இரண்டாம் வேற்றுமை உருபான 'ஐ' அன்று. யானை என்பது ஒரு பெயர்ச் சொல். இதில் உள்ள 'னை'யை 'ன்+ஐ'=னை என்று அதாவது 'யான்+ஐ' என்று பிரிக்க முடியாது. அது ஒரு தனிச் சொல் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். 'ஐ' என்பது ஒரு பெயர்ச் சொல்லில் வேற்று உருபாக வந்தால்தான் மிகும் என்பதை மறத்தல் கூடாது.

20. நான்காம் வேற்றுமை உருபுக்குப் பின் மிகும்.

நான்காம் வேற்றுமை உருபு 'கு' என்பது நினைவிருக்கிறதா?

(எ.டு) மேகலைக்குத் தந்தை கோவலன் –மேகலை+கு =மேகலைக்கு.

21. ஆறாம் வேற்றுமைத் தொகையில் மிகும்

(எ.டு) குருவி+கூடு= குருவிக்கூடு. தொகை என்றால் தொக்கி நிற்பது, அதாவது மறைந்து நிற்பது என்று முன்னே அறிந்தோம் அல்லவா? 'குருவிக்கூடு' என்னும் தொடரில் எது மறைந் திருக்கிறது. இதனை விரித்துப் படித்தால் 'குருவியினது கூடு' அல்லது 'குருவியினுடைய கூடு' என வரும் அல்லவா? 'அது', 'உடைய' என்பன ஆறாம் வேற்றுமை உருபுகள். நினை விருக்கிறதா? எனவே 'குருவிக் கூடு' என்னும் தொடரில் 'அது' அல்லது 'உடைய' என்னும் சொல் மறைந்து இருப்பதால் அது ஆறாம் வேற்றுமைத் தொகையாகிறது.

முக்கியக் குறிப்பு

ஆறாம் வேற்றுமைத் தொகையில் முக்கிய மாகக் கவனிக்க வேண்டியது ஒன்று உள்ளது. அதாவது நிலை மொழி அஃறிணையாய் இருந்தால் மட்டும்தான் வல்லெழுத்து மிகும். நிலை மொழி உயிரெழுத்தாய் இருந்தால் மிகக்கூடாது. இதை நன்றாகக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

(எ.டு) வள்ளி+கிழங்கு = வள்ளிக்கிழங்கு.

வள்ளி+திருமணம் = வள்ளி திருமணம்.

மேலே உள்ள இரண்டு சொற்றொடர்களில் முந்தையதில் 'க்' மிகுந்துள்ளது. பிந்தையதில் மிகவில்லை. ஏன்? முந்தையதில் 'வள்ளி என்னும் நிலை மொழி 'கொடி' என்னும் அஃறிணைப் பொருளைக் குறிக்கிறது. அ னால் அதில் மிகுகின்றது. இரண்டாவதில உள்ள 'வள்ளி' என்னும் சொல் 'வள்ளி' என்னும் பெயருடைய ஒரு பெண்ணைக் குறிப்பதால் அது உயர்திணை அல்லவா? ஆதலால் அங்கு மிகக்கூடாது.

ஆறாம் வேற்றுமைத் தொகையில் நிலை மொழி உயர்திணையாய் இருந்தால் மட்டுமே

மிகும். அஃறிணையாயின் மிகாது. உயர் திணையில் மிகா என்பதற்கு இன்னும் சில எடுத்துக் காட்டுகளைக் காண்போம்.

(எ.டு) அவ்வை+குறள் =அவ்வைகுறள்.

துறவி+குடில் = துறவி குடில்

பொன்னி+கணவன் = பொன்னி கணவன்.

(முண்டகக்) கண்ணி+கோயில் = (முண்டகக்) கண்ணி கோயில்

ஆறாம் வேற்றுமைத் தொகையில் நிலை மொழி உயர்திணையாயின் வல்லெழுத்து மிகக்கூடாது என்பது பலருக்குத் தெரியாமல் தவறு செய்கிறார்கள். இங்கே விழிப்புடன் இருத்தல் வேண்டும்.

வேற்றுமையைப் பற்றித் தெரிந்து கொள்ளும் போது சில முக்கியச் செய்தியையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

வெளிப்படையாகத் தெரிகிறது. அதனால் இரண்டாவது உள்ளது இரண்டாம் வேற்றுமை விரியாகும்.

வேற்றுமை உருபு மட்டும் மறைந்து (தொக்கி) நிற்குமானால் அது வேற்றுமைத் தொகை நிலைத் தொடர் ஆகும். சிற்சில தொடர்களில் வேற்றுமை உருபோடு இன்னொரு சொல்லும் மறைந்து நிற்கும். அச்சொல்லுக்குப் பயன் என்று பெயர்.

(எ.டு)மோர்க்குடம்.

இதைப் பிரித்துப் படித்தால் 'மோரை உடைய குடம்' என வரும் அல்லவா? 'மோரை' என்பதில் 'ஐ' என்பதுதான் இரண்டாம் வேற்றுமை உருபு. ஆனால் அதனை அடுத்து 'உடைய' என்னும் இன்னொரு சொல்லும் வருகின்றதே. அதற்குத் தான் 'பயன்' என்று

மழையும் பிழையும்

'சோ' என்று மழை பெய்து கொண்டிருந்தது. கடமை உணர்வோடு நடுவழியில் போய்க் கொண்டிருந்த நான், மழை நின்றவுடன் போகலாமே என எண்ணி, ஒரு பெரிய மரத்தின்கீழ் கொஞ்சம் ஒதுங்கினேன். துளிகூட மழை என்மீது விழவில்லை.

மழையும் பெய்து ஓய்ந்தது. ஆனாலும் மரத்தை விட்டு நகர மனம் இல்லை எனக்கு. 'இன்னும் கொஞ்ச நேரம் இருந்து விட்டுத்தான் போவோமே! என நினைத்து, வாளா இருந்தேன்.

இப்போது மரத்தின் கிளைகளிலிருந்தும் இலைகளிலிருந்தும் மழைநீர் சொட்டுச் சொட்டெனச் சொட்டிக் கொண்டு இருந்தது என்மேல். அண்ணாந்து மேலே பார்த்தேன். "ஓய்வு என்பது சோம்பலாக மாறிவிடக் கூடாது; ஓடியே போ, உன் கடமை மீது" எனக் காற்றில் குரல் கொண்டு, மென்மையாக அறிவுறுத்தியது, அந்த நெடுமரம்.

— தமிழழகன்

நிலைமொழியும் வருமொழியும் சேர்வது 'புணர்ச்சி' எனப்படும் அல்லவா? இப்படி இரு சொற்கள் சேரும்போது இடையில் வேற்றுமை உருபுகள் மறைந்து (தொக்கி) இருந்தால் அதைத் 'தொகை' என்று அறிந்தோம். வேற்றுமை உருபு இடையில் மறைந்து நில்லா மல் வெளிப்படையாகத் தெரிய நிற்குமானால் அது 'விரி' எனப்படும்.

உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை :

(எ.டு) மோர் குடித்தான் - இது இரண்டாம் வேற்றுமைத் தொகை.

மோரைக் குடித்தான் இது இரண்டாம் வேற்றுமை விரி. ஏன்? இரண்டாம் தொடரில் இரண்டாம் வேற்றுமை உருபான 'ஐ' (ர்+ஐ=ரை)

பெயர். ஆதலால் இந்தத் தொடரில் 'ஐ' என்னும் இரண்டாம் வேற்றுமை உருபும், 'உடைய' என்னும் பயனாகிய சொல்லும் மறைந்து நிற்பதால் இது இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை நிலைத் தொடர் என வழங்கப்படும்.

22. இவ்வாறு 2,3,4,7 ஆகிய வேற்றுமைகளின் உருபும் பயனும் உடன் தொக்க தொகை நிலைத் தொடர்களில் வல்லெழுத்துகள் (க்,ச்,த்,ப்) மிகும்.

(எ.டு) 1. நீர்க்குடம். இதனை விரித்துப் படித்தால் 'நீரை உடைய குடம்' என வரும். இதில் 'ஐ' (ரீர்+ஐ) இரண்டாம் வேற்றுமை உருபு. 'உடைய' பயன். எனவே இது இரண்டாம்

வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை நிலைத் தொடராம்.

2. வெள்ளிக்காப்பு. 'வெள்ளியால் செய்யப் பட்ட காப்பு'. இதில் 'ஆல்' மூன்றாம் வேற்றுமை உருபு. 'செய்யப்பட்ட' என்பது பயன். எனவே இது மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை நிலைத் தொடராம்.

3. கோழித் தீனி. 'கோழிக்குப் போடும் தீனி'. இதில் 'கு' நான்காம் வேற்றுமை உருபு. 'போடும்' என்பது பயன். எனவே இது நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை நிலைத் தொடராம்.

4. மலைப்பாம்பு. 'மலைக்கண் வாழ்கின்ற பாம்பு'. இதில் 'கண்' ஏழாம் வேற்றுமை உருபு. 'வாழ்கின்ற' என்பது பயன். எனவே இத்தொடர் நிலைத்தொடராம்.

ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை

மேலே எடுத்துக் காட்டியவற்றால் 2,3,4,7 ஆம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை நிலைத் தொடர்களில் க்,ச்,த்,ப் மிகும் என்பதை உணர்ந்தோம்.

23. இரு பெயரொட்டுப் பண்புத் தொகையில் மிகும்.

இங்கு இன்னொரு முக்கியச் செய்தியையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

இரு சொற்கள் இணையும் போது (புணர்ச்சி) இடையில் வேற்றுமை உருபுகள் (2,3,4,5,6,7 ஆகிய வேற்றுமை உருபுகள்) இடையில் மறைந் திருந்தால் அவை அவ்வவ் வேற்றுமைத் தொகை என்று முன்னர் அறிந்தோம். அவ் வாறு இரு சொற்கள் புணரும்போது வேற்றுமை உருபுகள் அல்லாத பிற சொற்களும் இடையில் மறைந்து (தொக்கி) நிற்கும். அவை பண்புத் தொகை, உவமைத் தொகை, வினைத்தொகை, உம்மைத் தொகை, அன்மொழித் தொகை முதலியன. அவற்றை இப்போது அறிவோம்.

1. பண்புத் தொகை :

பண்பு என்பது குணம், நிறம், தன்மை முதலியவற்றைக் குறிக்கும். இரு சொற்களுக்கு இடையில் பண்பைக் குறிக்கும் சொல் மறைந் திருந்தால் அது பண்புத் தொகை எனப்படும்.

(எ-டு) நற்குணம் = நன்மை + குணம்.

கருங்கூந்தல் = கருமை + கூந்தல்.

இவை முறையே 'நன்மையாகிய குணம்', கருமையாகிய கூந்தல் விரியும். 'மை', 'ஆகிய' என்பன மேற்காணும் இரு தொடர்களிலும் மறைந்து (தொக்கி) உள்ளமையால் இவை பண்புத் தொகையாம்.

2. இரு பெயரொட்டுப் பண்புத் தொகை :

ஒரு தொடரில் உள்ள இரு சொற்களில் ஒன்று பொதுப் பெயராகவும், மற்றொன்று சிறப்புப் பெயராகவும் இருக்கும்.

(எ-டு) **பொதிகைக் குன்று** இத்தொடரில் உள்ள 'குன்று' என்னும் வருமொழி பொதுச் சொல். அதாவது ஒரு (சிறு) மலையைப் பொதுவாகக் குறிக்கும் சொல். ஆனால் 'பொதிகை' என்பதோ (வருமொழி) குறிப்பிட்ட ஒரு (சிறு) மலையைக் குறிக்கும் சொல். சிறப்பாக ஒரு மலையைக் குறிப்பதால் இது சிறப்புச் சொல். எனவே ஒரு பொதுச் சொல்லும் ஒரு சிறப்புச் சொல்லும் இணைவதால் இது இரு பெயரொட்டு. இவ் விரண்டு சொற்களின் இடையில் 'ஆகிய' (பொதிகை ஆகிய) என்னும் சொல் மறைந் திருப்பதால் இது இரு பெயரொட்டுப் பண்புத் தொகையாம். இத்தொடரின் இடையில் 'க்' மிகுந்துள்ளது அல்லவா? இவ்வாறே பிற இரு பெயரொட்டுப் பண்புத் தொகைகளிலும் '**மிகும்**'.

'மாலைப் பொழுது', 'சாரைப் பாம்பு' இவை மேலும் சில எடுத்துக் காட்டுகளாம். இத் தொடர்களில் பொதுப் பெயரும், சிறப்புப் பெயரும் இணைந்து வருகின்றன அல்லவா? ஆதலால் இவை இருபெயரொட்டுப் பண்புத் தொகை. எனவே வல்லெழுத்து மிகுந்துள்ளது.

24. உவமைத் தொகையில் மிகும்

(எ.டு) **தாமரைக் கண்.** இத்தொடரில் 'தாமரை' 'கண்' என்னும் இரு சொற்கள் உள்ளன. இதனை விரித்துப் படித்தால் 'தாமரை போன்ற கண்' என வரும் அல்லவா? 'போன்ற' என்னும் உவமையைக் குறிக்கும் சொல் இடையில் மறைந்து (தொக்கி) நிற்பதால் இது உவமைத் தொகை எனப்படும்.

புலிப் பாய்ச்சல் – புலியைப் போன்ற பாய்ச்சல். இத்தொடரில் 'போன்ற' என்னும் சொல் மறைந்துள்ளமையால் உவமைத் தொகையாகும். ஆதலால் வல்லெழுத்து மிகுந்துள்ளது. ⚬⚬

வேகம் + விவேகம் = மாவட்ட ஆட்சித் தலைவர்

ஐம்பதாயிரம் பேரை அறிவொளி இயக்கத்தில் ஈடுபடுத்தி இந்த ஆண்டிற்குள் அறிவொளி வீசும் மாவட்டமாக வடார்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தை ஆக்கிவிடுவதில் அதி தீவிரம் காட்டிக் கொண்டிருக்கிறார் மாவட்ட ஆட்சித் தலைவர் சு. ராமசுந்தரம்.

இடையில் சிறுசேமிப்புக் குறியீட்டை எட்டச் செய்யும் பணி வேறு அவரைச் சுறுசுறுப்பின் எல்லைக்கே கொண்டு போய்விட்டது.

இங்குதான் அந்நியச் செலாவணியை அள்ளித்தரும் கற்பகத் தருவான பெரிய, நடுத்தர 1047க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் உள்ளனவே, அவற்றின் முதலாளிகள் ஒரு சிட்டிகை நேரத்தில் சிறுசேமிப்பைப் பெரு சேமிப்பாக்கி விடலாமே என்று கண்களினாலேயே குறிப்பிடுகிறோம்.

"பத்தாண்டுகளாய் குறியீட்டை எட்டாமலிருப்பதை அந்த முதலாளிகள் நன்றாகவே அறிவர். மனமிருந்தால்தானே மார்க்கம்..."


"தோல் பதனிடும் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் பணிவரைமுறைப் பலன்களைப் பெறாமலேயே வாழ்க்கையில் முன்னேறாமல் அப்படியே இருக்கிறார்களே, நீங்கள் தலையிட்டு ஆவன செய்யலாமே?"

"முதலாளிகளுக்கு ஆலோசனைதான் கூறலாம். தொழிலாளர்களுக்கு ஆவன செய்வதில் ஆழ்ந்த அக்கறையை அவர்கள்தானே காட்ட வேண்டும்:"

கோவைக்கு இணையாக விளைச்சலில் முத்திரை பதிக்கும் இங்கு கரும்பு, நெல், வாழை போன்றவற்றை மேலும் விளைவிக்க ஆக்க பூர்வமான வேளாண்மை உதவிகளை விவசாயிகளுக்குச் செய்கிறாராம்.

வேலை வாய்ப்புகளைக் கூட்டியிருக்கிறாராம். நெடுஞ்சாலை, நகரச் சாலை உள்ளிட்ட வசதிகளைச் செம்மைப்படுத்தி உத்தரவிட்டிருக்கிறாராம்.

வேலூர் கோட்டைக்கு வடக்குப் பக்கத்திலுள்ள சூரிய குளம் இப்போது சூழ்ந்த குடிசைகளுக்கு மத்தியில் அழுக்குத் தண்ணீரைக் கொண்டிருக்கிறது. அதிலுள்ள குப்பைகளை அப்புறப்படுத்தித் தூர் எடுத்து ஆழமாக்கி நல்ல நீரைப் பாய்ச்சி உல்லாசப் படகுகள் விடப்போகிறோம். அகழியிலும் இதே மாதிரி செய்யப் போகிறோமென்று உற்சாகத்துடன் கூறுகிறார். இளைஞர்களிடையே தன்னம்பிக்கை வரவேண்டும். போட்டித் தேர்வுகளில் பங்கேற்கும் முயற்சி வேண்டும். வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவது, புதுப்பிப்பது போன்றவை வெறும் எழுத்துப் பயிற்சி என்றே எண்ணி செயலூக்கம் வளர்த்துக் கொள்ளத் துணிய வேண்டும் என்று இளைஞர்களின் மீது தனக்கிருக்கும் அக்கறையை வெளிப்படுத்தும்போது அவர்களுக்கு இச்சமுதாயத்தின் மீது உள்ள ப்ரதீயையும் பிட்டுப் பிட்டு வைக்கிறார்.



சு. ராமசுந்தரம்

மாவட்டத்திலேயே மிகப் பெரிய கலையரங்கமாய் வேலூர் அரும்பொருட்காட்சியகத்திற்குப் பக்கத்தில் (கீழே காம்பளக்ஸ்) ஒன்று அமையப் போகிறது என்று அவர் குறிப்பிடும்போது ஏற்கனவே அங்கே இருந்த சங்கீத சபா நம் முன்னே நிற்கிறது. நிலம் அரசுக்குச் சொந்தமானதால் கலையரங்கம் எழப் பொது மக்களின் பேருதவியைப் பெற முயன்று கொண்டிருக்கிறார்.

பின்தங்கிய மக்களுக்கு இலவச வீடுகள் கட்டித்தருதல், கடன்கள் தருதல் போன்ற பல்வேறு திட்டங்களை அரசு இம்மாவட்டத்தில் தீவிரப் படுத்தியுள்ளது. கலப்புத் திருமணம் செய்து கொண்டவர் இவர்.

அவருடைய பாட்டனார் பாஸ்கரத் தொண்டைமான் முப்பதாண்டுகளுக்கு முன்னர்



வி.எம். முனிசாமி

தியாகி

எண்பது வயதிலும் தமிழ்நாடு சலவையாளர் மத்திய சங்கத்தின் பொதுச் செயலாளராய்ப் பணியாற்றும் இவர், 16 வயதிலேயே ஜெயப்பிரகாஷ், லோகியா, ஆசப் அலி, முத்துராமலிங்கத் தேவர் ஆகியோரோடு தொடர்பு கொண்டு தீவிர விடுதலைப் போராட்டங்களில் குதித்தவர். 1930–40 வரை காவல் துறையின் பயங்கரங்களைச் சந்தித்தவர்.

இவருடைய தந்தை முதல் உலகப் போரில் ஈடுபட்டவர்.

ப.ஜீவானந்தம், பி.ராமமூர்த்தி போன்றவர்களின் தலைமறைவுக் காலங்களில் அதிகம் உதவியவர்.

1930 ஆம் ஆண்டில் ஆங்கிலேயரை எதிர்த்து நாடகத்தில் நடித்ததால் 3 ஆண்டுகள் சிறைச் சாலையில் வாடியவர்.

1940க்குப் பின்னர் அகிம்சா வாதியாகி, இன்றுவரை கதரை மட்டுமே உடுத்தும் அசல் காந்தி யவாதியாய் எளிமையோடு வாழ்ந்து வருகிறார் இவர்.



வி. இராசகோபாலன்

தியாகி


தில்லையாடி வள்ளியம்மை பிறந்த ஊரில் வெங்கட்ராமய்யர் – அலமேலு தம்பதிக்குப் பிறந்தவர். தேச பக்தர். காந்தியவாதி. விடுதலை வீரர். சிறைவாசம் அனுபவித்தவர். மூதறிஞர் ராஜாஜி, இந்திரா, காமராஜர், ராஜீவ், ஆர்.வி. போன்றோர்க்கு மிகவும் நெருக்கமானவர்.

தற்போது அரக்கோண்த்தில் வாழ்ந்து அரிய சேவைகள் பல ஆற்றி வருகிறார். ஸ்ரீரங்கம் ஆண்டவன் சுவாமிகள் இவருக்கு 'அரக்கோணம் பீஷ்ம பிதாமகர்' என்ற பட்டம் அளித்திருக்கிறார். கல்வித் துறைக்கும், கூட்டுறவுத் துறைக்கும் இவர் செய்த தொண்டுகள் நினைவில் நிற்கக் கூடியவை.

'தியாகிகளின் நினைவுத்தூண்' ஒன்றைச் சமீபத்தில் குடியரசுத் தலைவர் ஆர்.வி. அவர்களைக் கொண்டு அரக்கோணத்தில் திறக்கச் செய்தார் இவர்.

மாவட்ட விடுதலை வீரர்களின் வரலாற்றை நூலாக்கியுள்ளார்.

மணிமாலை



எம்.எஸ். தியாகராஜன்

மதிப்புரையாளர்

அரக்கோணத்தில் பிறந்த இவர் தற்போது சென்னையில் தமிழ்நாடு மின்வாரியத்தில் பணியாற்றுகிறார்.

நல்ல நூல் மதிப்புரையாளரான இவர் கதைகள், கட்டுரைகள் எழுதியுள்ளார். இலக்கிய அமைப்புகளில் பொறுப்பு வகிக்கிறார்.

தமிழில் வெளியாகியுள்ள பெண் கவிஞர்களின் கவிதைத் தொகுப்புகளிலிருந்து சிறந்த கவிதைகளைத் தேர்ந்தெடுத்து 'தமிழகப் பெண் கவிஞர்கள்' எனும் தலைப்பில் ஒரு நூல் வெளியிடவிருக்கிறார்.

4 நூல்கள் எழுதியுள்ள இவர் தன் வீட்டு நூலகத்தில் 2000 அரிய நூல்களைச் சேகரித்து வைத்துள்ளார்.

இங்கு மாவட்ட ஆட்சித் தலைவராகவிருந்ததைக் கூறி அவரை நிமிர்ந்து நோக்குகிறோம்.

பாட்டனாரைப்போல் தான் இலக்கியச் சேவையில், அதிக பக்தியில் ஈடுபாடுற்றிருக்கவில்லை என்று கூறும் இவர், விழிப்புணர்ச்சி மிக்கதாய், தனியார்த் தவறுகள் நிகழாததாய், கல்வி சுகாதாரத்தில் மேம்பாடுற்றதாய், நல்ல பல திட்டங்கள் நிறைவேறி முன்னணியில் நிற்பதாய் இம் மாவட்டத்தைச் சோபிக்கச் செய்வதில் முழுகவனம் செலுத்துவதாய்ச் சூளுரைக்கிறார்.

—

பாதிமா ஆஸ்பத்திரி வாசலில் பஸ் நின்றது. தேவகி இறங்கினாள். மஞ்சு பின்னால் மெல்ல இறங்கினாள். முகத்தில் ஏதோ வாட்டம். நடையில் ஒரு மெது(வு). உள்ளே நுழையவே ஒரு தயக்கம். ஆஸ்பத்திரி பெரிய கேட் அருகிலே நின்றுவிட்டாள்.

"ஏன்? இப்படி தேவகி கேட்டாள்.

"ஒரே நர்வஸா இருக்குடி."

"துணிஞ்சி வந்தாச்சி. இங்கே வந்த பிறகு அது பம்மிப்போச்சா?"

"இங்கே கை வச்சிப் பாரேன். எப்படி திக்திக்னு அடிக்குது தெரியுமா?"

"பேசாமப் போயிடலாமா திரும்பி?"

"மூஞ்சைப் பாரு... ஒண்ணு செய். நீ முன்னே போயி வார்ட்லே பார்த்துட்டு வா. எம் வார்ட் பெட் நம்பர் 12...."

"யாரும் இல்லேன்னா நான் அங்கிருந்தே கை அசைக்கிறேன். வந்துடு நீ".

"சரி..."

மஞ்சு வெளியே நிற்க அவள் உள்ளே போனாள்.

மாடியிலிருந்து தேவகி கை அசைத்தாள்.

இவள் அவளைக் கீழே வரச் சொல்லிக் கையசைத்தாள்.

அவள் வந்தாள். "இதானே உன்னண்டை..." என்று முறைத்தாள். "யாருமில்லே வார்டிலே... வா".

"தூங்கறாரா?"

"அப்படித் தெரியலே. கண் பக்கம் பெரிய கட்டு போட்டு இருக்கு".

"ஐயோ பாவம்!"

பிள்ளை வீட்டார் மஞ்சுவை வந்து பார்த்து விட்டுப் போனார்கள்.

பெண்ணுக்குப் பிள்ளையையும், பிள்ளைக்குப் பெண்ணையும் பிடித்துப் போய்விட்டது.

அடுத்த வாரமே ஒரு நல்ல நாளில் நிச்சயதார்த்தம் செய்து கொண்டனர்.

மாப்பிள்ளை ஒரே போடு போட்டுவிட்டான். "வீடு கிடைத்தானவுடன்தான் கல்யாணம்" என்றான். அது வரையில் புத்திசாலிதான்!

பெங்களூரில் வீடு கிடைப்பது குதிரைக் கொம்பாயிற்றே!

ஒரே சவாலாக வீடு பார்த்து அலைந்தான். ஜெய்நகரில் ஒன்று அமைந்தது. அவனுக்கு வெகுவாகப் பிடித்து விட்டது. முன்பணம் செலுத்திவிட்டான். தானே அந்தச் சுபச்சேதி சொல்ல மஞ்சு வீட்டுக்கு வந்தான். அவன் ஸ்கூட்டர் மீது வேன் ஒன்று மோத.

இதோ அவன் பாதிமா ஆஸ்பத்திரியில்!

"ஒரு விக்கினமுமில்லாமல் ஒவ்வொண்ணும் நடந்து வந்தபோதே இது ஏதோ தீம்புக்குத்தான் என்று எனக்கு அப்பவே ஒரு சந்தேகம்" என்று மாப்பிள்ளையின் அம்மா புலம்பினாள்.

"இனி அந்தப் பெண் வேண்டாம்..."என்றார் அப்பா.

"ரம்பை மாதிரி அழகான பெண் அப்பா" என்று பிள்ளைக்கு அக்கா பேசினாள்.

மஞ்சு வீட்டில்...

"ஆரம்பமே அபசகுனம்! இந்தக் கல்யாணமே வேண்டாம்" என்றார் அப்பா.

அம்மா, "பெண்ணை அங்கே எவ்வளவு பேசுவாங்க தெரியுமா?" என்றாள்.





மஞ்சு, நீயே என் கண்...!

அமரர் இதயன்

மோகத்தைக் கொன்று விடு!

வேலூர் ம. நாராயணன்



மோகத்தைக் கொன்று விடு - திரைப்பட
மோகத்தைக் கொன்று விடு!

நிகழும் உலகில் வடிவம் வெளிச்சம்
நிழல்கள் மட்டுமே இருட்டு! - ஆனால்
திகழும் திரையில் நிழல்கள் வெளிச்சம்
திரையின் மறைவில் இருட்டு! (மோகத்தைக்...)

அன்னை கண்ணகி அருந்ததி போலே
அகிலம் போற்ற நடிப்பாள் - இரவில்
சின்னத் தனங்கள் யாவும் செய்வாள்
செல்வம் சேர்க்கத் துடிப்பாள்! (மோகத்தைக்...)

பாசம் நேசம் பண்பின் மேன்மை
பாருக் குணர்த்த நடிப்பான் - அந்த
வேசம் கலைத்து வீடு வந்ததும்
வேளைக் கொருத்தி பிடிப்பான்! (மோகத்தைக்...)

பார்த்திபன் - அதுதான் மாப்பிள்ளை பெயர் - ஆஸ்பத்திரியில் சேர்ந்து ஐந்து நாட்களாகிவிட்டன.

மஞ்சு தோழி தேவகியின் துணையுடன் அன்று ஆஸ்பத்திரிக்கு வந்திருந்தாள்.

டென்ஷனை எல்லாம் சமாளித்துக் கொண்டு, மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு வார்டுக்குள் நுழைந்தாள். படுக்கை அருகில் யாருமில்லை. இவள் அருகே சென்று நின்றாள்.

இடது கண்ணில் அவனுக்குப் பெரிய கட்டு போட்டிருந்தது. வலது கண் திறந்து வைத்திருந்தது. அவன் அதை மூடிக் கொண்டிருந்தான். இரண்டு கைகளையும் கட்டிலில் கட்டிப் போட்டிருந்தது. ஆடாமல் அசையாமல் படுத்திருந்தான்.

இரு நிமிடங்கள் ஓடின. அவன் கண் திறந்தான், எதிரில் மஞ்சு! இரண்டொரு கணம் வைத்த விழி வாங்காமல் பார்த்தான். "நீ வந்துட்டே! எனக்குத் தெரியும் அது" என்றான். அவன் உதடுதான் அசைந்தது. சப்தமே காணோம். ஆனால் அவள், அவன் சொன்னதைக் கேட்டாள். உடனே கைக்குட்டையை வாயில் திணித்து வெடித்து வந்த துக்கத்தை அடக்கி அடக்கி விசும்பலாக வெளியிட்டாள்.

அவன் வலது உள்ளங்கை, கட்டியிருந்த வாக்கிலேயே படுக்கையில் தட்டி, அவளை அமரும்படி சைகையால் சொன்னது.

அவள் ஒரு ஓரமாக அமர்ந்து கண்ணீர் வடித்தாள்.

அவன் 'வேண்டாம்' என்றான். உதடுகள்தான் அவ்விதம் அசைந்தன.

வெளியிலிருந்து உள்ளே வந்த அவனது அப்பா மஞ்சுவைக் கண்டு கொண்டார். நெருங்கி அவர் வரவேயில்லை. அவள் மாலை மாலையாக வடிக்கும் கண்ணீரை அவர் அங்கிருந்தே பார்த்துக் கொண்டார். அவர் மனம் ஏதோ ஆயிற்று!

இரண்டொரு நிமிடங்களில் மஞ்சுவும் வெளியே தேவகியுடன் வந்து விட்டாள். அவரைப் பார்த்ததும் சற்று அதிர்ச்சியுற்றாள். என்றாலும் நமஸ்காரம் செய்தாள்.

அப்பாவும், "உன்னிடம் அவன் பேசினானா? இதுவரை வார்த்தை பேசவில்லை. டாக்டர்களும் அவன் பேசக்கூடாது என்று மிகவும் கண்டிப்பான உத்தரவு போட்டிருந்தனர். பேசினால் முகத்தில் நரம்புகள் அதிர்ச்சி காணுமாம். ஆபரேஷன் பண்ண கண்ணுக்கு அந்த அதிர்ச்சி அபாயமாம்... அவனும் பேசவேயில்லை..."

"என்னிடம் பேசினார் அவர்" என்றாள் மஞ்சு.

"அடிபட்ட பிறகு இதுதான் அவன் பேசின முதல் பேச்சு என்ன சொன்னான்?"

"நீ வருவே என்று தெரியும்" என்றார்.''

அப்பா மனது நெகிழ்ந்தது.

"வா அப்படி உட்காரலாம்..."

மூவரும் வராந்தாவில் ஒரு சோபாவில் அமர்ந்தனர்.

→

"என்ன ஆயிற்று அவருக்கு?" தேவகி கேட்டாள்.

"என்ன சொல்வது? கண்ணைத் தோண்டி விட்டார்கள். ஐ பேங்கில் வாங்கி வேறு ஒண்ணைப் பொருத்தி விட்டார்கள். எல்லாம் மடமட வென்று நடந்தது - விபத்து போலவே. கட்டு பிரிக்க இருபது நாள் ஆகுமாம்".

"பார்வை கிடைச்சுடுமா?"

"அது கட்டு பிரிச்ச பிறகு தான் சொல்ல முடியுமாம்".

"அவரை நான் மனசாலே வரிச்சுட்டேன். அப்புறம் இந்த விபத்தை வச்சி, என் ஆசைக்கு ஒரு நெகடிவ் முடிச்சு போட்டுக்க நான் விரும்பலே. நான் 'பெஸிமிஸ்ட்' அல்ல..."

"சொல்லும்மா! இதிலே உனக்கு நான் என்ன உதவி பண்ணணும்?"

"அவருக்குச் சேவை செய்யணும் நான். நீங்க அனுமதிக்கணும், அதுக்கு!"

"செய்! நான் இந்தக் கல்யாணம் நடக்கக் கூடாது - நிறுத்திவிடணும் இதை... என்று தான் இருந்தேன். உன் அப்பாவும் இருந்தார். இப்ப என் மனசு மாறிப் போச்சு... உன் அப்பா மனசுதான்..."

"நீங்க ஒரு பிள்ளைக்கு அப்பா என்கிற மாதிரி, அவரும் ஒரு பெண்ணுக்கு அப்பா தான்! அவர் என் முடிவுக்குக் குறுக்கே நிற்க மாட்டார்..."

தினமும் பகல் நேரத்தில் மஞ்சு வார்டுக்கு வந்து விடுவாள். சரியாகக் காலை எட்டு மணிக்கு டாண் என்று ஆஜராகி விடுவாள். அதுவரை நைட் டூட்டி பார்த்த பார்த்திபனின் அப்பா விடை பெற்றுக் கொள்வார். மீண்டும் மாலை ஐந்து மணிக்கு வந்து அவர் இவளை ரிலீவ் பண்ணுவார்...

முதலில் இவளை ஆஸ்பத்திரிக்குப் போகக் கூடாது என்று பெற்றவர்கள் தடுத்துப் பார்த்தனர். அவர்களிடம் மஞ்சு அழுது அடம் பிடித்தாள். பையனுடைய அப்பாவிடம் பேசின மாதிரி, இங்கேயும் தன்



ஆசாபாசங்களை வெளிப்படையாகவே தெரிவித்துப் பேசினான்.

"இன்னிக்கு எப்படி இருக்கார் மாப்பிள்ளை? தூங்கினாராமா?" இப்படி விசாரிக்கத் தொடங்கி விட்டனர். இவள் அங்கு போய் வருகிற தீவிரம் அவர்களை இவ்வளவுக்கு மாற்றி வைத்தது.

ஒரு நாள் இவளுடைய அப்பா அம்மாவே போய் பார்த்திபனைப் பார்த்துவிட்டு வந்தனர்.

அவர்களிடம் அவன் என்ன சொன்னான்?

"உங்கள் மஞ்சுவே இல்லை என்றால்... நான் அவ்வளவு தான்..."

மஞ்சு பார்த்திபனுக்குச் செய்கிற சேவையின் ஆழத்தில் அவளுடைய காதலை இரண்டு வீட்டாரும் கண்டனர். 'இந்த ஜோடியைப் பிரிப்பது மகா பாவம்!' என்றே அவர்கள் மனம் நெகிழ்ந்தனர்.

"மஞ்சு... எனக்குப் பார்வை வந்துவிடுமா? வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி... நீதான் என் கண்..."

மஞ்சு அவன் மார்பில் புதைந்து கொண்டு அழுதாள். மெல்லத் தலையை நிமிர்த்தி "ஜெய் நகர் வீட்டுக்காரர் வந்திருக்கிறார். கூப்பிடவா?" என்றுகேட்டாள்.

பார்த்திபன் கொடுத்த அட்வான்ஸைத் திருப்பிவிட அவர் வந்தார். "நம்ம மனே அதிர்ஷ்டமல்லா நிம்கே..." என்றார்.

"மஞ்சு நீ என்ன சொல்றே?"

"அதே வீடுதான் வேணும்".

"எனக்கு நேர்ந்த விபத்தையே நீ பாராட்டாதவள். இந்த வீட்டினுடைய ராசியையா பார்க்கப் போகிறாய்?"

"என்ரீ சுவாமி... நமகே மனே பேகே பேக்கு! கீப் மை அட்வான்ஸ், வி டோண்ட் வாண்ட் இட் பேக்..."

"மிவிரு இப்பருக்கே குட்லக்".

அந்த நாள் வந்தது...

இருட்டறையில் வைத்து கட்டுப் பிரித்தார்கள்.

வெளிச்சம் கண்ணுக்குப் பழக்கமானதும் டாக்டர் கேட்டார், "எவ்வளவு இது?"

"இரண்டு".

இன்னும் சற்று தூரப்போய், "இது எவ்வளவு?"

"மூன்று..."

"இது யாரிது?"

"மஞ்சு!"

"ஓ.கே."

மஞ்சுவுக்கு இதயம் பூரித்தது.

ஃ

◆ ஏலகிரியில் நிலாவூர் இருக்கிறது. தை மாதம் முழு நிலவு தினத்தன்று இவ்வூரில் பெண்கள் 'நிலா விழா' கொண்டாடுகிறார்கள். விடிகாலை குளித்து, உடுத்தி, தானியத்தைக் கொண்டு வந்து பொது இடத்தில் உரலிலிட்டுக் குத்தி அரிசியாக்கிப் புதுப் பானையிலிட்டுப் பொங்குகிறார்கள்.

பின்னர் கூடிக் கும்மியடித்து நிலாப் பாட்டுப்பாடி இரவெல்லாம் இன்புறுகின்றனர்.

◆ திருப்பத்தூருக்கருகில் ஏலகிரிக்குத் தென்மேற்கில் உள்ளது ஜலகம்பாறை அருவி. பாறைகளுக்கிடையே பளிங்குக் கோடுகளாய் விழும் அருவியின் பாங்கே பாங்கு!

மணிமாலை



ஆர். ஜீவரத்தினம்

அரைடிரவுசர் போட்ட உயர் பள்ளி மாணவராயிருந்த காலத்திலேயே வேலூருக்கடுத்துள்ள ஊசூர்க் காட்டில் ஆங்கில அரசால் கொண்டு போய் விடப்பட்டவர் இவர் - நாட்டுக்கு விடுதலைக் கோரியதால்.

'வெள்ளையனே வெளியேறு' என்று வீறுகொண்டெழுந்த வீரர் இவர். 1962-1967 வரை வேலூர் சட்டமன்ற உறுப்பினராயிருந்த இவர், 30 ஆண்டுகளாக அகில இந்திய காங்கிரஸ் மேல்மட்டக்குழு உறுப்பினருங்கூட.

1985 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1989 இல் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். தற்போதும் அரக்கோணம் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராகத் தொடர்கிறார்.

பல்வேறு பாராளுமன்றக் குழுக்களில் அங்கம் வகிக்கிறார்.

இராணிப்பேட்டை பெல் நிறுவனம், செய்யாறு சர்க்கரை ஆலை, அரக்கோணம் இரயில்வே கூடுதல் ஓர்க்ஷாப்கள், டெலிகமியூனிகேஷன் கேபிள் பாக்டரி போன்ற பலவும் இவரது அயராத முயற்சியின் சின்னங்கள்.

கென்யா, நைஜீரியா, மத்திய ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் சுற்றுப் பயணம் செய்துள்ள இவர், தொகுதி மக்களிடையே மிகவும் செல்வாக்கைச் சம்பாதித்து வைத்திருக்கிறார்.

பதினாறும் எண்பத்தாறும்



பதினாறு வயதிலேயே சித்திரக் கவிகள் பாடியவர். எண்பத்தாறு வயதிலும் அலைகடல் தாண்டி அற்புதமாய் இறையைப் பரப்பும் அருள்மொழியரசு, திருமுருக கிருபானந்தவாரியார்.

வேலூருக்கு அருகிலுள்ள பாலாற்றங்கரையோரக் கிராமமான காங்கீஸ்வரர் கோயில் கொண்டிருக்கும் காங்கேய நல்லூரில் அவதரித்த இப்புண்ணியர் மேனியெங்கும் முருகப் பெருமானை வைத்திருக்கிறார்.

தந்தையார் சிவஸ்ரீ மல்லையதாச பாகவதருக்கு ஒன்பது வயதில் பின்பாட்டுப் பாடத் தொடங்கியவரான இவர், பள்ளிப் படிகள் மிதிக்காத ஒரு பல்கலைக்கழகம்.

அவரது உடம்பைப் போலவே உள்ளம். அவரது பண்பைப் போலவே பாண்டித்தியம். அவரது கருணையைப் போலவே கடமைப்பணி.

புராண, இதிகாசங்களைப் புரிகின்ற விதத்தில் பிட்டுப் பிட்டு வைத்து பழமையையும், புதுமையையும் புகுத்தி ஆன்மநேய ஒருமைப்பாட்டிற்காகத் தொண்டாற்றும் வாரியார் தனக்கு வருகின்ற செல்வத்தையெல்லாம் இறைப் பணிக்கு வாரி வழங்குகிறார்.

காங்கேய நல்லூரிலுள்ள அவரது பெயரால் அமைந்த அரசினர் மேனிலைப் பள்ளிக்கு 6 லட்சம் ரூபாய் நன்கொடை வழங்கியுள்ளார்.

ஞானப்பழமான இவர் முதுகு வளைந்த நிலையிலும் மண்ணிலும் விண்ணிலும் பறந்து பரமனைத் தன் சொற்பொழிவுகளால் புகழ்ந்து மகிழ்கிறார்; மகிழ்விக்கிறார்!



ஏ. ஜெயமோகன்

நாடாளுமன்ற உறுப்பினர்

மிகவும் சுறுசுறுப்பான இளைஞரான இவர் திருப்பத்தூர் நாடாளுமன்ற உறுப்பினர். வழக்கறிஞராய்ப் பரிணமித்தவர். வாணியம்பாடியைச் சேர்ந்த இவர் இம்மாவட்டத்தில் காங்கிரஸ் இயக்கத்தில் பொறுப்பான பதவிகள் வகித்தவர்.

இதுவரை மும்முறை நாடாளுமன்ற உறுப்பினராக இவர்தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

அகில இந்திய இளம் விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர். நாடாளுமன்ற தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் நலம் காக்கும் குறைகள் கேட்கும் குழுவில் உறுப்பினர்.

ரஷ்யா, வடகொரியா போன்ற நாடுகளில் சுற்றுப் பயணம் செய்தவர்.

பலமுறை இரத்ததானம் செய்தவர்.

நூல்கள் படித்தல், கிரிக்கெட் ஆடுதல் போன்றவற்றில் அதிக ஈடுபாடு கொண்டவரான இவர் 1989லிருந்து தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் பொதுச் செயலாளராக உள்ளார்.

◆ பொன்னையாற்றின் மேற்குக் கரையில் உள்ளது திருவல்லம். சிவன் வில்வநாதர், கோயில், பாடல் பெற்றது. முற்காலச் சோழர் பாணி. வேறெந்தச் சிவன் கோயிலுக்கும் இல்லாத சிறப்பு நந்தியின் பின்புறம் கருவறையை நோக்கியும், முகம் கிழக்கு நோக்கியும் அமைந்துள்ளதே!

◆ பள்ளிகொண்டாவில் உத்தர அரங்கநாதர் கோயில் உள்ளது. கிழக்குப் பார்க்கும் இராஜகோபுரம், ஓம் எனும் அமைப்பில் கருவறை. தென் திசையில் தலைவைத்துக் கிழக்கு நோக்கிப் பள்ளி கொண்டுள்ளார் அரங்கநாதர். இக்கோயிலில் பிற்கால ஓவியங்கள் உள்ளன.



கபீர்

டாக்டர் அ. பத்மநாபன், இ.ஆ.ப. (ஓய்வு
முன்னாள் தலைமைச் செயலாளர்,
தமிழக ஆளுநரின் ஆலோசகர்)

"நானும் நீயும் குருதியால் ஒன்றே
நிகழ்ந்திடும் நமது வாழ்க்கையும் ஒன்றே,
பேருல கிதுதான் பிறந்ததோர் தாயிடம்
பிரிந்து நாம் சிதைதல் பேதமை அன்றோ!
யாவரும் வந்ததாம் நாடும் ஒன்றே,
ஒருதுறை இறங்கிக் கலந்தனம் அன்றோ!
தீமைகள் மலிந்து பேதம் பெருகி,
பிரிவுகள் பலவாய் நின்றது அந்தோ!"

சாதி, சமயப் பிரிவுகளால் மனிதர் பிரிந்து உழல்வதை எதிர்த்துக் கபீர் எழுப்பிய குரலே மேலே உள்ள கவிதையாக வெளிப்பட்டுள்ளது. தமது காலத்தில் சமயத் துறையில் நிலவிய கேடுகளையும் குறைகளையும் எதிர்த்து நின்ற புகழாளர்களிடையே கபீர் தனிச் சிறப்புக்குரிய வராக விளங்குகின்றார். அவர்தம் பாடல்கள் சாதியத்தையும், வெற்று ஆரவாரச் சடங்குகளை யும், பழைமை வாதத்தையும் சாடும் தன்மை யில் அமைந்தவை. வைதீகப் பிராமணீயம், இஸ்லாம் ஆகிய இரு சமயங்களிலும் நிலவிய மாயாவாதத்தை எதிர்த்து இடையறாது போரிட்ட அவர், கி.பி. 1448க்கும் கி.பி.1518க்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தார் என்பர். அவர் இந்து தாய்க்குப் பிறந்தவர் என்றும், நீரு என்னும் இஸ்லாமிய நெசவாளரும் நீமா என்னும் அவரது மனைவியும் அவரை எடுத்து வளர்த்தனர் என்றும் கூறுவர். வைதீக இந்து சமயத்திற்கும் பண்பாட்டிற்கும் கோட்டையாக விளங்கியதும், தற்போது வாரணாசி என வழங்கப்படுவதுமான பனாரஸில் கபீரின் குடும்பத்தினர் வறுமையிலும் தங்களுக்கு எதிரான சூழலிலும் வாழ்ந்தனர். பௌத்தம் வீழ்ந்து, வைதீக சமயம் தலை தூக்கி வந்த காலம் அது. இந்து சமயத்திற்கு எதிராக இருந்த முஸ்லிம் ஆட்சியாளர்களின் ஆதரவை இஸ்லாம் பெற்றிருந்தது. வைதீக இந்து குருமார்களும், இஸ்லாமிய மௌல்விகளும் கபீரை வெறுத்தனர்; அக்காலத்தில் ஆட்சிப் பீடத்திலிருந்த சிக்கந்தர் லோடியிடம் கபீரை எதிர்த்து முறையிட்டனர். இதன் விளைவாகக் கபீர் பின்னர் பனாரஸிலிருந்து வெளியேற் றப்பட்டார்.

கபீர் தமது இளமையிலேயே, தனித் தெய்வ வழிபாட்டில் நம்பிக்கை கொண்டவரான இராமானந்தர் என்னும் வைணவத் துறவியின் சீடரானார். சாதி, குலம், சமூகநிலை என்னும் வேறுபாடுகள் அனைத்தையும் கடந்து தமது சொந்த பக்தியினாலேயே ஒருவர் இறை வனின் பேரருட்பேற்றிற்கும், முக்திக்கும் ஆளாகிட இயலும் என்னும் கொள்கையினர் இராமானந்தர். அவரது சீடர்களுள் முடி திருத்தும் தொழிலாளியான சேனர், ஜாட் விவசாயி தானர், செருப்பு தைக்கும் தொழி லாளியான இரவிதாசர், முசுலீம் நெசவாளி யான கபீர் ஆகியோர் அடங்குவர். கபீர் இவர்களுள் தலை சிறந்தவராக விளங்கினார். இராமானந்தர் தமது கட்டுப்பாடுகள் அற்ற சமயக் கோட்பாடுகளைப் போதித்து, ஏழை எளியவர், சமூகத்தில் கீழ்நிலையிலிருந்த மக்கள் ஆகியோரிடம் பரிவு கொள்ளும் மனப் போக்குடையவராகக் கபீரை உருவாக்கினார். மேலும், ஷேக் தாகி என்னும் சூபி மார்க்கத் துறவியின் தொடர்பும் கபீருக்குக் கிடைத்தது. கபீர் பெற்றிருந்த இந்து, இசுலாம் ஆகிய இரு சமய அறிவும், தொடர்பும் வைதீகத்தையும்

மூதறிஞர் இராஜாஜியால் 1930 ஆம் ஆண்டில் 'விளம்பரமில்லாக் காந்தியத் தொண்டன்' என்று புகழப்பட்டவர் வாலாஜா வட்டம், கடப்பேரி கிராமத்தைச் சேர்ந்த ஜமதக்னி.

இவர் கள்ளுக்கடை மறியலில் தீவிரம் காட்டியவர். அதனால் ஆத்திரமுற்ற கள்ளுக் கடைக்காரன் இவருடைய பின் கழுத்தில் கத்தியால் குத்தி மூன்று அங்குல ஆழத்துக்குக் காயம் ஏற்படுத்தி விட்டான்.'

மறுநாள் காவல் துறையினர் அவனை ஜமதக்னி முன் நிறுத்திக் கேட்டனர். "இவன் என்னைக் குத்தவில்லை. வேறு யாரோ... இவனை விட்டு விடுங்கள்" என்று கூலிக்காக மாரடித்த அந்தக் குற்றவாளியைக் கருணையுடன் காட்டிக் கொடுக்கவில்லை.

இன்னா செய்தார்க்கும் இனியவே செய்த இனிய விடுதலை வீரர் ஜமதக்னி.

இவர் பன்மொழிப் புலவர். வால்மீகி இராமாயணம், ரகுவம்சம், காமன் மகள் போன்ற பல நூல்களை மொழிபெயர்த்துள்ளார். இவருடைய நூலொன்று சாகித்ய அகாடமி பரிசு பெற்றிருக்கிறது.

★

உயர் வகுப்பினர் ஆதிகத்தையும் எதிர்த்து நின்று போரிடுவதற்கு உதவின. இசுலாம், இந்து சமயம் ஆகியவற்றில் நிலவிய குறைபாடுகளை எடுத்துரைப்பதற்குரிய மனவுரமும், சுதந்திர உணர்வும் அவருக்கு இருந்தது. இவ்விரு சமயங்களிலும் படிந்திருந்த சடங்குகள், கண்மூடி வழக்கங்கள் ஆகியவற்றையும், சமய நூல்களின் ஆதிக்கத்தையும் கபீர் வெறுத்தார். இவ்விரு சமயத்தவரிடமும் சொல்லுக்கும் செயலுக்குமிடையே கண்கூடாக நிலவிய முரண்பாடுகளைக் குறிப்பிட்டுப் பின்வருமாறு பாடினார்.

"ஏகாதசியில் இந்துக்கள் விரதம்
ஏற்றிடும் உணவோ பாலும் பட்சணமும்,
துறந்தனர் தானிய உணவு, ஆயினும்
துறந்திலர் மனத்துறு ஆசைகள்; மறுநாள்
விலங்குயிர் கொன்று ஊன்வகை உண்பர்;
துருக்கியர் விரதமும் பிரார்த்தனை நேரமும்
உரக்கக் கூவிடும் இறைவனின் பெயர்களும்
சுவர்க்கச் சுகங்களைத் தந்திடக் கூடுமோ?
தேடுவர் மாலையில் பறவையின் இறைச்சி!"

உருவ வழிபாட்டினை மறுத்து,

"கல்லைத் தொழுவதால் கடவுளைக் காண்பரேல்,
மலையினைத் தொழுதிட மனங்களித்
திடுவேன்;
மனிதருக் குணவாம் மாவினை அரைத்திடும்
கல்லே இக்கல்லினும் சிறந்தது அன்றோ?"

யோகியரின் சித்துக்களை எதிர்த்தும், அவர்களின் பழக்கங்களைக் கண்டித்தும் அவர் பாடியவை :

"தலைமுடி மழித்தும், நீள்முடி வளர்த்துத்
தோளில் படர்ந்து தொங்கிட வைத்தும்
யோகியர் என்றே செருக்குடன் செல்வர்;
ஆணவ உருவாய் அசைந்திடும் இவர் போல்,
யோகியர் பிறரைக் கண்டிலேன் சோதரா!"

வருண வேறுபாட்டினையும், சாதி வழக்கத்தையும் முழுமையாக வெறுத்தொதுக்கிப் பாடியதைப் பின்வரும் பாடல் காட்டுகின்றது.

"பிராமணத் தாய்க்குப் பிறந்த தனாலே
பிராமண ராகிட இயன்றிடு மாயின்
பிறவழியதிலேன் பிறந்திட வேண்டும்;
துருக்கிய ருக்குப் பிறந்த தனாலே
துருக்கிய ரென்றாகிட இயன்றிடு மாயின்
கருவிலேன் சுன்னத் புரிந்திட லாகா?
கருநிறப் பசுவும் மஞ்சள் பசுவும்
கறந்திடும் பாலின் நிறம் திரிந்திடுமோ?"

தீண்டாமை வழக்கத்தைத் தீவிரமாக எதிர்த்த கபீர், அநீதியும் தீயதுமான அந்த வழக்கத்தை நிலை நிறுத்த முனைந்தோரை எதிர்த்து,

"பிறருமைத் தொடுவதால் தீட்டெனப்
பிராமணர் நீவிர் கூறுவீராயின்
பெருகிய செருக்கால் பயன் விளைந்திடுமோ?
ஆணவம் கெடுத்துச் செருக்கினை அழிக்கும்
இறைவன் அச்செருக்கைச் சகித்திடு வாரோ?
எளியவர் தம்மை வதைத்திடல் விடுப்பீர்,
ஏழையர் வெளியிடும் ஏக்கம் பெருமூச்சு
இரும்பையும் உருக்கிடும் கனலாய் மாறுமே!"

இந்து, முஸ்லிம்களின் வெளி வேஷத்தையும், மூட நம்பிக்கைகளையும் கண்டித்தாராயினும், கபீர் தாமே ஒரு தத்துவத்தையோ, புது நெறியையோ புகுத்த விரும்பவில்லை. இறைவன் ஒருவனே என்பதையும், மனிதர் அனைவரின்

ஒருமையையும் வலியுறுத்திய அவர், வேற்றுமைகளையும் சமூகப் பாகுபாடுகளையும் வளர்த்திடும் சமய நிறுவனங்கள் பயனற்றவை எனக் கருதினார். அவரது கருத்துகள் துணிவும், தனித்தன்மையும் வாய்ந்தவை. இறைவனுக்கும், சமயங்களுக்கும் இடையே சமயப் பண்டிதர்களும், மௌல்விகளும் மட்டுமே ஆதிக்கக் காவலர்கள் என்பதை ஏற்க மறுத்த அவர், கல்விச் செருக்கினால் வந்த வெற்றுரைகளையும், நூல்களையும் வெறுத்தார். எளிமையும் மக்களுக்கு நேராகவும் புரியவல்ல அவரது உரைகள் அறிஞர்களுக்கும் சமூக உயர்நிலையினருக்காகவும் என்று அமையாமல் படிப்பறியாத பாமரர்களுக்கெனவே வெளிப் பட்டன. படிப்பறிவு பெறாத அவரே, தமது பாடலொன்றில் பின்வருமாறு கூறியுள்ளதைக் காணலாம்.

"ஏடறியேன் எழுத்தறியேன்
எழுதுகோல் தொட்டறியேன்
நால்வகையாம் பருவத்தின்
நலமனைத்தும் தெரிந்திடவே
நாவாலே கபீரன் உரை
நவின்றனவே ஆமன்றோ!
நூலறிவில் தேர்ந்ததில்லை
எதிர்வாதம் அறிந்ததில்லை!"

மக்களுடன் நெருங்கிப் பழகி, தமது சொந்த அனுபவத்தால் மக்களிடையே அன்பு, கருணை, சகோதர நேயம் ஆகியவற்றைப் பரப்பியவர் கபீர். வேதங்களையும், சமய நூல்களையும் சான்று காட்டி மக்களுக்கு அறிவுரை புகன்ற பிறரிடமிருந்து இந்த வகையில் கபீரின் அணுகுமுறை வேறுபட்டது. இதனைச் செறிவு மிக்க பின்வரும் வரிகள் புலப்படுத்துகின்றன.

"தாளில் எழுதித் திகழ்வதைக் காண்பீர்!
கண்ணால் கண்டதை விளக்குவேன் யானே!
பண்டிதர் கூற்றும் முல்லா விளக்கமும்
பேருரை அவற்றால் பயன் கண்டறியேன்!
தூய என் மனத்தால் தேவனைக் கண்டேன்;
கபீரன் தன்னுள்ளே துருவித் துருவி
நேயனாம் இறைவனைக் கண்டிட முயன்று
நானே கண்டேன் என்னுளே அவனை!"

இறைவன் திருமுன் இந்து என்றும், முஸ்லீம் என்றும் வேறுபாடில்லை என்பதை வலியுறுத்திய கபீர் சமுதாயத்தில் நிலவிய மூடத் தனத்தையும், மத வெறியையும் எதிர்ப்பதற்குத் துணிந்து அசைவிலா நெஞ்சுரம் மிக்கவராக



விளங்கியதைப் பின்வரும் அறிவிப்பு வெளிப் படுத்துகின்றது.

"சந்தைச் சதுக்கத்தில் சுடர் விளக்கினை ஏந்தி
கபீரன் நிற்கின்றான்"

இந்த அறிவிப்பு அவர் ஒரு புரட்சியாளராக விளங்கியதைக் காட்டும். சமத்துவத்தையும், சகோதர நேயத்தையும் அடித்தளமாகக் கொண்டமைந்த புதியதொரு சமுதாயத்தைப் படைப்பதற்கும் சமூகத் தீமைகளைத் துடைத் தொழிக்க முயன்றதையும் காணலாம்.

பனாரஸ் நகரை விடுத்து, மகர் என்னுமிடத் திற்குச் செல்வதற்குக் கபீர் விரும்பியபோது, பக்தர்கள் அவரைத் தடுத்தனர். பனாரஸில் இருந்தாலே முக்தி கிடைக்குமென்றும், மகரில் கிடைக்காது என்றும் அவர்கள் எடுத்துரைத் தனர். அவர்கள் கூற்றுப்படி மகரில் இறந்தால் கழுதையாகப் பிறக்க நேருமாயின்,

மழலை! —ஜோஸ். ஸ்தனிஸ்லாஸ்

அந்த
நிலா
நடந்து போனால்
நவக்கிரகங்கள் அல்லவா
நடம் பயில்கின்றன.



தாளம் தப்பாமல்
பாதம் பெயர்ந்து
நடந்து போகும்
அழகின் மிடுக்கு
அமுத அடுக்கு.

அப்பப்பா...
கண்களா... கண்கள்
ஜோடிச் சூரியன்
ஜொலித்த மாதிரி.

பார்த்த பார்வையிலேயே
பனியாய் நெஞ்சுருகும்.

"மகரில் மரித்தால் கழுதையாதல் கூடுமேல்
இராமனிடத்தில் நம்பிக்கை இழந்தீர் என்பதே யாகும்!
வாரணாசி ஆனாலென் மகரின் கட்டாந்தரை ஆகிலென்,
என் இதயத்தில் இராமன் இருந்திடும் போது?
வாராணாசியில் கபீர்தன் உடலை நீத்திட நேரின்
இராமனுக் கதனால் நேர்ந்திடும் சிறப்பென்?"

என வினவினார்.

பொறுமையை வலியுறுத்தும் பின்வரும் வரிகள் அழகானவை:

"முட்களை உன் மேல் தூவிடு வோர்க்கும்
மலர்களை நீவிர் தூவிட வேண்டும்;
மலர்களை நீவிர் கொய்வீர்! அவரோ,
முட்களை நாடித் துயருறல் நேரும்!"

கபீர் இறுதியில் வாரணாசியை விடுத்து மகரில் வாழ்ந்தபோது மறைந்தார். அவரது உடலைத் தகனம் செய்வதற்கு இந்துக்களும், புதைப்பதற்கு முஸ்லீம்களும் தங்களிடம் ஒப்படைக்க வேண்டுமெனப் போட்டியிடத் தொடங்கினர். அவரது உடலின் மீது போர்த்தி இருந்த வெள்ளைப் போர்வையை நீக்கிப் பார்த்தபோது, அங்கு சடலம் இல்லாமல் மலர்க்குவியலே இருந்தது. அந்த மலர்களை இரு தரப்பாரும் பங்கிட்டுக் கொண்டு தத்தம் சமய நெறிப்படி இறுதிக் கிரியைகளைச் செய்தனர் என்பர். தமது வாழ்விலும், இறப்பிலும் இருபெரும் சமய மக்களிடையே கபீர், சகோதர நேயத்தின் வடிவாக விளங்கியதைக் காணலாம்.

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்தியச் சமுதாயத்தைச் சீர்த்திருத்து வதற்காகத் தமது எதிர்ப்பையும் மறுப்பையும் தெரிவித்து வந்துள்ள புத்தர் மற்றும் இந்தியப் பண்பாட்டின் ஞானியர் வழியில் வந்த கபீர், மரபு வழியில் செல்லாதவராக விளங்கிய வராவார். அவர் தம் போதனைகளின் கருத்தைப் பின்வருமாறு தொகுத்துரைக்கலாம்:

1. மதம், மதக்கோட்பாடு, சாதீயம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட அனைத்து வகைப் பிரிவு, பேதங் களையும் தீண்டாமை வழக்கத்தையும் முழுமையாக வெறுத்தொதுக்குதல்,

2. சமய குருமார்கள், முல்லாக்கள் ஆகியோருக்குப் புனிதமானவர்கள் எனக் கொண்டு சமயச் சடங்குகளைச் செய்வ தற்குத் தனி அந்தஸ்து, அதிகாரம் அளிப்பதை மறுத்தல்.

3. கண்மூடி வழக்கங்களையும், சமய நூல்களின் மேலாதிக்கத்தையும் ஏற்க மறுத்தார்.

4. ஏழை, எளிய பாமர மக்க ளோடு தொடர்போ, கலந்துறவாடலோ அற்றதாய் அமைந்த போலி கௌர வத்தை வளர்க்கும் வெறும் புத்தக அறிவு பயனற்றது.

5. இந்து, முஸ்லிம்களிடையே நிலவிய வேற்றுமைகளையும், முரண்பாடுகளை யும் ஒப்ப மறுத்தார்.

6. எந்தச் சமயத்திற்கும் சாதகமான முன்னுரிமை அளிக்காமை.

7. உருவ வழிபாடு, ஆண்டவனின் அவதாரங்களைப் பற்றிய புராணங்கள், கண்மூடி வழக்கங்கள், சடங்குகள்,

சமயத்தின் பெயரால் சமயப் பிரிவுகளை வளர்த்தல் ஆகியவற்றைக் கண்டித்தல்.

தம் வாழ்நாள் முழுவதும் துணி நெய்யும் தொழிலை மேற்கொண்டு நெசவாளியாக வாழ்ந்த கபீர், நற்குணங்களும் சீர்திருத்த நோக்கும் தவறாதவராக விளங்கினார்.

பாமர மக்களிடையே கபீர், ஞானக்கவிஞராக வாழ்ந்து இன்றளவும் வட இந்தியாவில் எளிய மக்கள் பாடி மகிழத்தக்க அளவில் பரவியுள்ள உருக்கமான பாடல்களைப் பாடிப் பரப்பினார். இதனால் அவர் ஒரு மக்கள் கவிஞர் எனலும் பொருத்தமே. மனிதரனைவரின் ஒருமைப்பாடு, அகிம்சை, அன்பு, கருணை, பொறுமை, உண்மை, ஒரே கடவுள் கொள்கை ஆகியவற்றை வலியுறுத்திய காரணத்தால் அவர் வாழ்ந்து மறைந்து ஐந்நூறு ஆண்டுகள் கழிந்த பின்பும் மக்கள் பெருமதிப்புடன் நினைத்துப் போற்றத் தக்கவரானார்.

கபீர் முறையாக ஒரு சமயப் பிரிவையோ தமக்கென்று சீடர் கூட்டத்தையோ உருவாக்கினார் என்பதற்குச் சான்றுகள் ஏதுமில்லையெனினும் 'கபீர் மார்க்கத்தினர்' என்போர் நாட்டில் இருப்பதைக் காணலாம். பெருந்தொகையினரான இந்த மார்க்கத்தினர், தாம் கபீரின் போதனைகளின் வழி நடப்போர் எனக் கூறுவர். சீக்கிய சமயத்தை உருவாக்கிய குருநானக் தேவர் பெரிதும் கபீரின் கொள்கை வழிப்பட்டவராவார். சீக்கியரின் சமய நூலான ஆதிகிரந்தம் கபீரின் பாடல்கள் பலவற்றைக் கொண்டுள்ளது. பிற சமயப் பிரிவுகளிலும் கபீரின் கருத்துச் செல்வாக்கு படிந்திருப்பினும், சமத்துவம், அன்பு, வகுப்பு ஒற்றுமை, சாதி சமயம், சமயப்பிரிவு வேறுபாடுகள் கடந்த சகோதர நேயம் ஆகியவற்றைப் பற்றிய அமரத்துவம் வாய்ந்த அவரது கருத்துகள் நமக்கு இருளகற்றி ஒளி காட்டுவனவாக விளங்குவது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக வகுப்புக் கலவரங்கள், சாதி முரண்பாடுகள், தாழ்த்தப்பட்ட மற்றும் மலை வாழ் மக்கள், நலிவுற்ற பிரிவினருக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகள் பெருகி, சமூகத்தில் அறநெறியும் ஆன்மீகப் பண்புகளும் அருகி வரும் காலக்கட்டத்தை நாடு கடந்து கொண்டிருக்கும் தற்காலத்தில் நமக்கு அவை நன்னெறி காட்டி ஊக்கமளிப்பதாகும். ❖

இரத்தினகிரி

பாலமுருகனடிமை
அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில்,
இரத்தினகிரி, கீழ்மின்னல் - 632 517.
வேலூர் அம்பேத்கர் மாவட்டம், தமிழ்நாடு.

அருளாசி.

"அமுதசுரபி" - வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டச் சிறப்பிதழ் கொணர இருப்பதனையறிந்து மகிழ்கிறேன். "தொண்டை நாடு சான்றோருடைத்து" என்பர் ஆன்றோர்.

அத்தகைய தொண்டை நாட்டின் பெருமையையும் தமிழும், சமயமும், சமுதாயமும் தழைத்தோங்கப் பாடுபட்ட தோன்றல்களின் சிறப்பையும் மற்றும் பல்வேறு அரசியல், கலை, இலக்கியச் சிறப்பையும் புலப்படுத்தும் வகையில் வெளிவரும் "அமுதசுரபி" வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டச் சிறப்பிதழ் பல்லாற்றானும் சிறக்கவும், அமுதசுரபி நெடிது வளரவும் எல்லாம் வல்ல குன்றுறை குமரன் அருள் நினைந்து வாழ்த்தும்

கம்பன் கண்ட மானுடன்



கே.என். இராமச்சந்திரன்

தமிழகத்தை ஆண்டு வந்த சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் மண்ணாசை, பெண்ணாசை காரணமாக அடிக்கடி தங்களுக்குள் போரிட்டுப் பாமர மக்களைத் தங்கள் சுயரலத்திற்காகப் பலியாக்கி ஆட்சி செய்த காலத்தில் வாழ்ந்தவர் கம்பர் பெருமான். அவர் அந்த மன்னர்களின் தவறுதலான போக்கின் காரணமாக ஏற்படும் விளைவுகளைக் கண்டு வேதனைப்பட்டார். கற்றறிந்த புலவர்கள் உள்ளத்திலும் பொறாமை உணர்வுகள் ஏற்பட்டதால் நல்ல கருத்துகள் மக்களுக்குப் போகாமல் தடுத்து வந்த அவலத்தை அவரால் ஏற்க முடியவில்லை. வால்மீகியால் படைக்கப்பட்ட இராம காவியத்தைத் தென்னாட்டு மக்களுக்கும் அக்காலத்தில் ஆட்சி செய்த மன்னர்களுக்கும் பொருந்தக் கூடியதாய்ப் படைக்க எண்ணினார்.

அவர்தம் சிந்தனைகள், உணர்வுகள் ஒன்று சேர்ந்து இராம காவியமானது.

கம்ப இராமாயணத்தில் மனித நேயம், சகோதர பாசம், ஆட்சி முறை, அமைச்சர்கள் தகுதி, பொறுப்புள்ள கடமை உணர்வு, ஆன்மிக வளர்ச்சி, இல்லற தர்மம், தனிமனித ஒழுக்கம் போன்ற பல அரிய பெரிய கருத்துகள் மிகத் தெளிவாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. ஆன்மநேய ஒருமைப்பாடு உயர்த்தப்பட்டுள்ளது. மனிதனும் தெய்வமாகலாம் என்ற வள்ளுவர் பெருமான் கூற்றின்படி இராமனை மனித உருவத்தில் பலவித நற்குணச் சிறப்புகளோடு காண்பிக்கிறார்.

முடிசூட்டுவதாகத் தந்தை அறிவித்தபோதும் மறுநாள் ஆட்சியைத் துறந்து கானகம் செல்ல வேண்டுமெனத் தாயார் பணித்த போதும் எந்தவித மன மாற்றங்களும் இன்றி, இன்ப துன்பத்தைச் சமமாக ஏற்றுக் கொள்ளக்கூடிய மனப் பக்குவத்தை, சாந்த நிலையை வெளிப்படுத்துகிறார் இராமன். வனவாச காலத்தில் வேடுவ குலத்தைச் சேர்ந்த குகனையும், வானர குலத்தில் பிறந்த சுக்ரீவனையும், அரக்கர் குலத்தினனான விபீடனனையும் சகோதர உறவுக்கும், பறவை இனத்தைச் சேர்ந்த ஜடாயுவைத் தந்தை உறவுக்கும் அமைத்துக் காட்டி உலக மக்கள் வாழ வேண்டி மனித, ஆன்ம நேய வழியை மிகத் தெளிவாகப் படைத்து உணர்த்துகிறார் கம்பர். பிறன்மனை நயந்த பெண்ணாசையின் காரணமாகத் தன் குலத்தையே அழித்துக் கொண்ட இலங்கேஸ்வரன் இராவணனின் மாட்சியையும், வீழ்ச்சியையும் விவரித்து மனிதர்களை நெறிப்படுத்துகிறார். கம்பன் தான் விரும்பிய மனித நேயத்தை மானிட உயர்வை, மனித தர்மத்தை, சகோதர பாச உணர்வை, ஒருமைப்பாட்டை மிகத் தெள்ளத் தெளியக் காவியத்தில் புகுத்தினார். கம்பன் கண்ட மானுடனான இராமன் அனைவரையும் உடன்பிறந்தோராக ஏற்பவன், நேசக்கரம் நீட்டுபவன், சீலத்தோடு வாழ்பவன், ஒழுக்கத்தைக் கடைப் பிடிப்பவன், தன்நிலை மாறாதவன், யாரிடமும் பகை கொள்ளாதவன், உலகில் போரே ஏற்படக் கூடாது என்கிற சித்தாந்தத்தை உடையவன்! ❖

கல்லாமையின் இல்லாமை

—ப.வே. பார்த்தசாரதி



கற்றாரே கண்ணுடையர்
மற்றெல்லாம் புண்ணுடையர்!
சொற்செல்வன் வள்ளுவனே
சொன்னசொல் ஆயிரம்பொன்!

என்றாலும் கைநாட்டே
எண்ணற்ற பேரென்பேன்!
எண்ணாமல் பெற்றெடுத்தால்
இழிநிலைதான் அதனாலே!

அறிவொளி இயக்கம் கண்டிடுவோம்!
அறியாமை இருளை அகற்றிடுவோம்!
கல்லாமை யில்லாமை யாக்கிடுவோம்!

வீரமா முனிவரின் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்

டாக்டர்
ம.வி. சுதாகர்



தொல்காப்பியர் காலத்திலும் அதற்குப் பிறகு நன்னூலார் வரையிலும் ஏன் அதற்குப் பிறகும்கூடத்தமிழ் எழுத்து வரிவடிவத்தில் சிக்கலிருப்பதை, இலக்கண ஆசிரியர்கள் உணர்ந்தபோதும் அவற்றைத் திருத்தி அமைக்க ஒருவரும் விரும்பாமல் அப்படியே விட்டிருந்தனர்.

அதாவது உயிரெழுத்துகளில் எகரம் ஒகரம் ஆகிய இரண்டெழுத்துகளில் குறில் நெடில் வேறுபாட்டினைக் குறிக்கவும் தெளிவான அடையாள வரிவடிவமின்றி எழுதி வந்தனர்.

எகரம் ஒகரம் இரண்டின் மீதும் மேலே புள்ளியிட்டு எழுதினால் அவற்றைக் குறிலாகவும் புள்ளியின்றி எழுதுவதை நெடிலாகவும் கருதிப் பயின்று வந்தனர்.

(சான்று)

எ ஒ - குறில்

எ. ஒ - நெடில்

"மெய்யினியற்கை புள்ளியொடு நிலையல்"

"எகர ஒகரத் தியற்கையு மற்றே"

- என்று தொல்காப்பியம் எழுத்ததிகாரம் 15,16 ஆம் சூத்திரங்கள் கூறுகின்றன.

நன்னூலாரும் இதனை அடியொற்றியே,

"தொல்லை வடிவின எல்லா வெழுத்துமாண்

டெய்து மெகர வொகர மெய்புள்ளி"

- என்று தனது நன்னூல் எழுத்ததிகாரம் 43ஆம் சூத்திரத்தில் எழுதியுள்ளாரே தவிர, எழுதுவதில் இவ்வெழுத்துகளின் வரிவடிவங்களில் ஏற்படும் தொல்லையினைக் குறித்துக் கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

பழங்காலத்தில் ஓலைச் சுவடிகளில் எழுதுகின்றபோது புள்ளியிட்டெழுதுவது பெரும் பிரச்னையாக இருந்தபடியாலும் இயல்பான மறதியாலும் எகர, ஒகரம் எழுதுவோர் குறிலுக்கும் நெடிலுக்கும் வேறுபாடு தரும் புள்ளியினைக் குறிக்காமல் பல சமயங்களில் குறிலாக வருமிடத்திலும்கூட எ,ஒ என்றே எழுதி வந்தனர்.

இதனால் குறில் நெடில் மயக்கம் ஏற்பட்டு விரைந்து படிப்பதில் தொல்லை வந்தது எனில் மிகையாகாது.

சான்றாக எரி, ஒதி என்னும் சொற்களை எழுதுகையில் எகர ஒகரங்களின் மேல் புள்ளியிடாமல் எழுதப்படுவதால் அச்சொற்களை ஏரி, ஓதி என்பதாக இலக்கண முறைப்படிப் படித்தாக வேண்டிய நிலை ஏற்பட்டது.

எரி – நெருப்பு, ஒதி – ஒதிய மரம், புள்ளியிடாப் பான்மையினால் எரி – ஏரியாகவும், ஒதி – ஓதி என்னும் கூந்தல் பெயராகவும் மாறி அமையும் ஆபத்து உண்டானது.

குழப்பம் தீர எ ஏ எனவும், ஒ ஓ எனவும், குறில் நெடில் வேறுபாடு தெளிவாகத் தெரியும்படியாக இவ்வெழுத்துகளில் வரிவடிவமாற்றம் அமைத்துக் கொடுத்தவர் வீரமாமுனிவரேயாவார்.

அவற்றைப் போலவே எ, ஒ ஆகிய உயிரெழுத்துகளுடன் சேர்ந்து பிறக்கும் மெய் எழுத்துகளையும் மேலே புள்ளி வைத்தால் குறிலாகவும், புள்ளி வைக்காமல் எழுதினால் நெடிலாகவும் எண்ணி வந்தார்கள்.

சான்று:

செ் : சொ் – குறில்.

செ : சொ – நெடில்.

இவ்வுயிர் மெய் எழுத்துகளிலும் வரிவடிவத்தில் பழைய குழப்பமே நிலவி வந்தமையால்,


செ – சே எனவும்

சொ – சோ எனவும்

புள்ளிக்குப் பதிலாகக் குறிலை அப்படியே எழுதியும் நெடிலுக்குக் கொம்பெழுத்தை மேல்நோக்கிச் சுழித்தெழுதும் வழக்கத்தையும் வீரமாமுனிவர் புதியதாக வடிவமைத்துக் கொடுத்து இப் பிரச்னைகளுக்கு முற்றுப் புள்ளி வைத்தார்.

இதயக் கேள்வி

பால. இரமணி



இதயமே...
உனக்கொரு கேள்வி!

மானுடத்தின்
உறைவிடமாய்ப்
பதுங்கியிருக்கும்
புதையலே நீ!

உனக்குள்
எத்துணை
ரகசியங்கள்...?
அவற்றை மறைக்கும்
அவசியங்கள்!

மானுடம்—
இத்தனைக்கும்
நீ இல்லாத மாதிரியே
இயங்கி வருகிறதே...!
எப்படி அது
சாத்தியம்?

நம் மனிதர்கள்
உன்னையும்
மூளையையும்
உதறிவிட்டல்லவா
உயிர் வாழ்கிறார்கள்!
வெறும்பணம்...
பெரும்புகழ்...
இந்த
இரண்டின்முன்
நீஏன்
காணாமல் போகிறாய்?
வாய்மை
நேர்மை
பெருமை
இவற்றை
ஒதுக்கித் தள்ளும்
மானுடத்துள்
வெறும்
பெயருக்காய்க்
குடியிருக்கும்
இதயமே!
உனக்கொரு கேள்வி!
நீ
வெளி உறுப்பாய்
ஆனால்தான்
உன் உயிர்ப்பு
உலகுக்குத் தெரியும்..!
தெரிவாயா இதயமே?

	செவ்		கேது
			சூ, புத சுக்
சனி-வ	கிரகநிலை		குரு
ராகு			

ஆங்கீரஸ வருஷம் ஆடி மாதம் 1ஆம் தேதி முதல் 31ஆம் தேதி வரை

16-7-1992 முதல் 15-8-1992 வரை

உங்கள் ராசி பலன்...

பாலஜோசியர்

வித்வான் வே. லட்சுமணன்

கிரக பாதசாரம் :

சூரியன் - புனர்பூசம் 4 சந்திரன் - திருவோணம் 1 செவ்வாய் - கிருத்திகை 1 புதன் - ஆயில்யம் 2 குரு - பூரம் 2 சுக்கிரன் - பூசம் 2 சனி - திருவோணம் 4 (வக்ரி) ராகு - மூலம் 2 கேது - மிருகசீரிஷம் 4.

கிரக மாறுதல் :

17-7-1992 முதல் ரிஷப - செவ்வாய். 20-7-1992 முதல் புதன் - வக்கிர ஆரம்பம். 2-8-1992 முதல் சிம்ம - சுக்கிரன். 13-8-1992 முதல் புதன் - வக்கிர நிவர்த்தி.

மேஷம் : (அசுவினி, பரணி, கிருத்திகை 1ஆம் பாதம் முடிய)

ராசிநாதன் ஆட்சி நிலை பெற்று, வியாழனின் பார்வையைப் பெறுவதால் உங்கள் மதிப்பும், அந்தஸ்தும் உயரவும், வாழ்வில் முன்னேற்றம் காணவும் சந்தர்ப்பங்கள் கூடிவரும். நல்லவர்கள் நண்பர்களாவார்கள். மனத்திற்கினிய சம்பவங்கள் வாழ்க்கையில் இடம் பெறும். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண்பார்கள். வியாபாரம் அபிவிருத்தி அடையும். கணவன், மனைவியர் உறவு நிலை திருப்திகரமாக இருந்து வரும். நிலம், மனை, வீடு, வாகனம் போன்ற ஸ்திரச்சொத்துக்களால் அனுகூலத்திற்கு இடம் உண்டு. மாணவர்கள் வெற்றி நடைபோடுவார்கள். வெளிநாட்டுத் தொடர்பு ஆக்கம் தரும். அலுவலகங்களில் பணியாற்றுபவர்கள் செழிப்பான பாதையைக் காண்பார்கள். கடல்வாணிபம் லாபம் தரும்.

கேளிக்கை, உல்லாசங்களில் ஈடுபாடு கூடும். எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், கணிதத்துறையாளர்கள், விஞ்ஞானிகள் ஆகியோர் தங்கள் நிலை உயரப் பெறுவார்கள். மக்களால் உங்களுக்கும், உங்களால் மக்களுக்கும் அனுகூலங்கள் உண்டாகும். பொருளாதாரநிலை திருப்தி தரும். எதிர்பாராத திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகளைப் பெறவும் சந்தர்ப்பம் கனிந்துவரும். 20ஆம் தேதி முதல் வியாபாரிகள் விழிப்புடன் காரியமாற்றுவது நல்லது. ஆகஸ்ட் 2ஆம் தேதி முதல் அனுகூலமான திருப்பங்களைக் காணலாம். ஸ்பெகுலேஷன், கொடுக்கல்-வாங்கல் இனங்களால் லாபம் கிடைக்கப் பெறுவீர்கள். குடும்ப நலனில் அக்கறை செலுத்தி வருவது நல்லது. பேச்சில் நிதானம் அவசியம் தேவை. ஜூலை 16,17, 18,19,25,26,27,29 ஆகஸ்ட் 2,3,4,9,12,13,15 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்குத்திசை அனுகூலமானது. கடக, சிம்ம ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3,6 எண்கள் அனுகூலமானவை.

ரிஷபம் : (கிருத்திகை 2ஆம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2ஆம் பாதம் முடிய)

விசேஷமான நன்மைகளை நீங்கள் இந்த நேரத்தில் பெற முடியாவண்ணம் குறுக்கீடுகளும், தடைகளும் உண்டாகும். பேச்சிலும், உணவு விஷயத்திலும் கட்டுப்பாடு தேவை. அலைச்சல் அதிகரிக்கும். நூதன நட்பு வேண்டாம். குடும்பத்தில் சிறுசிறு குழப்பங்கள் அவ்வப்போது தலைதூக்கும். பக்குவத்துடனும், நிதானத்துடனும் அவற்றைச் சமாளிப்பது நல்லது. நிலபுலங்கள் விஷயத்தில் தற்சமயம் பிரவேசிக்க வேண்டாம். பொருள் வரவைக் காட்டிலும் செலவுகள் சற்று அதிகரிக்கவே செய்யும். உடன்பிறந்தவர்கள் அளவோடு உதவ முன் வருவார்கள். தொழிலாளர்களுக்கும், உத்தியோகஸ்தர்களுக்கும் ஒரிரு பிரச்னைகள் உண்டாகும். 17 ஆம் தேதி முதல் எக்காரியத்திலும் நிதானத்துடன் ஈடுபடுவது நல்லது. அலட்சியப்போக்கு அடியோடு கூடாது. வியாபாரிகள் அகலக்கால் வைக்க வேண்டாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது.

அரசுப் பணியாளர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும் மாமூலான வளர்ச்சி பாதிக்கப்படாது. சினிமா, சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் தங்கள் தகுதிக்குரிய வளர்ச்சியைக் காண்பார்கள். திரவப்பொருட்கள் லாபம் தரும். உடன்பிறந்தவர்கள் அளவோடு உதவுவார்கள். எதிர்ப்புகள் என்பவை கட்டுக்குள் அடங்கியிருக்கும். ஆகஸ்ட் 2ஆம் தேதி முதல் நண்பர்களால் நலம் பெறச் சந்தர்ப்பம் கனிந்துவரும். நிலம், மனை,

வீடு, வாகனங்களாலும் ஓரளவு அனுகூலம் உண்டாகும். மாணவர்கள் தங்கள் தகுதிக்குரிய வளர்ச்சியைக் காண்பார்கள். பொன், வெள்ளி, இரத்தின வியாபாரிகள் ஆதாயம் கூடப் பெறுவார்கள். ஜூலை 16,17,18,19,21,25,26,27,29 ஆகஸ்ட் 2,3,4,7,13,15 தேதிகள் சிறப்பானவை. கீழ்த்திசை அனுகூலமானது. கடக ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,6 எண்கள் அளவோடு நலம் தரும்.

மிதுனம் : (மிருகசீரிஷம் 3ஆம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3ஆம் பாதம் முடிய)

ராசிநாதன் சுக்கிரனுடன் கூடி 2இல் இருப்பதால் உங்கள் வாக்குவன்மை கூடும். நண்பர்களும், உற்றார், உறவினர்களும் உதவ முன்வருவார்கள். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண்பார்கள். ஸ்பெகுலேஷன், கொடுக்கல்-வாங்கல் இனங்கள் ஆக்கம் தரும். மக்களால் ஓரிரு நன்மைகளை எதிர்பார்க்கலாம். வியாபாரம் அபிவிருத்தி அடையும். திரவப்பொருட்களால் ஆதாயத்திற்கு இடம் உண்டு. மாணவர்கள் மந்தநிலை விலகப் பெறுவார்கள். உடன்பிறந்தவர்களால் உங்களுக்கும், உங்களால் அவர்களுக்கும் ஓரிரு நன்மைகள் உண்டாகும். கடிதப்போக்குவரத்து நற்செய்தி கொண்டுவரும். 17ஆம் தேதி முதல் இயந்திரப் பணியாளர்களும், இஞ்சினீயர்களும் நலனில் அக்கறை செலுத்திவருவது நல்லது. பிறமொழி, மதக்காரர்களிடம் அதிகம் நெருக்கம் வேண்டாம். உங்கள் ஜனன கால ஜாதகப்படி தற்சமயம் யோக பலம் உள்ள தசை, புத்தி, அந்தரங்கள் நடைபெறுமானால் சங்கடங்கள் என்பவை குறைந்து ஓரிரு நற்பலன்கள் உண்டாகும். தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவதன் மூலம் மனஅமைதி பெற வாய்ப்புண்டாகும். நல்லவர்களின் தொடர்பை வலுப்படுத்திக் கொள்வது நல்லது. ஜூலை 18,19,21, 25,26,27,29 ஆகஸ்ட் 2,3,4,7,9,13,15 தேதிகள் சிறப்பானவை. தென் கிழக்குத் திசை அனுகூலமானது. கடக ராசிக்காரர்கள் உதவுவார்கள். 5,6 எண்கள் அனுகூலமானவை.

கடகம் : (புனர்பூசம் 4ஆம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)

குரு, செவ்வாய் ஆகியோரது பலம் காரணமாக உங்கள் வாக்குவன்மையும், செயல்திறமையும் பளிச்சென்று பிரகாசிக்கும். துணிவோடும், தன்னம்பிக்கையோடும் செயற்கரிய காரியங்களில் ஈடுபட்டு வெற்றி வாய்ப்பைப் பெறுவீர்கள். எதிரிகள் ஓடி ஒளிவார்கள். வழக்கு, வியாஜ்ஜியங்களில் அனுகூலமான போக்குத் தென்படும். செந்நிறப் பொருட்கள் லாபம் தரும். அறிவாற்றல் காரணமாக மற்றையோரின் நல்லெண்ணங்களுக்குப் பாத்திரமாவீர்கள். புகழும், மதிப்பும், அந்தஸ்தும் உயர்வடையும். சினிமா, சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச்

விழிப்புடன் இருப்பது அவசியம். மறைமுக எதிரிகளால் ஓரிரு தொல்லைகளுக்கு ஆட்பட நேரலாம். வீண்சண்டை, சச்சரவுகளில் ஈடுபடலாகாது.

உத்தியோகஸ்தர்களும், தொழிலாளர்களும் தங்கள் பொறுப்புகளைச் சரிவர ஆற்றிவருவது நல்லது. அலைச்சலைக் குறைத்துக் கொள்வது அவசியம். உடல்நலனில் அக்கறை தேவைப்படும். பொருளாதாரநிலை சீராக இருக்கும் என்றாலும் ஓரிரு திடீர்ச் செலவுகளுக்கும் காரணம் உண்டு. ஆகஸ்ட் 2ஆம் தேதி முதல் சினிமா, சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் ஓரிரு எதிர்ப்புகளைச் சந்திக்க வேண்டிவரும். மக்கள் சேர்ந்தவர்கள் வெற்றி நடைபோடுவார்கள். கடல் வாணிபம் லாபம் தரும். திரவப் பொருட்கள் லாபம் தரும். பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் தங்கள் எண்ணம் ஈடேறப் பெறுவார்கள்.

மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம், ஆன்மீகம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண்பார்கள். குடும்பத்தில் நற்காரியங்கள் நிகழ அடிகோலப்படும். கணவன், மனைவியர் உறவு நிலை சீராக இருந்து வரும். மக்கள்நலம் மகிழ்ச்சி தரும். மக்களால் அனுகூலம் பெறவும் சந்தர்ப்பம் கனிந்துவரும். பயணத்தால் ஓர் எண்ணம்

ஈடேறப்பெறுவீர்கள். வெளிநாட்டுத் தொடர்பு ஆக்கம் தரும். பெற்றோரால் நலம் பெற வாய்ப் புண்டு. வியாபாரிகள் தங்கள் திறமைக்குரிய வளர்ச் சியைக் காண்பார்கள். பணவரவு திருப்திகரமாக இருந்துவரும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல்-வாங்கல் இனங்கள் ஆக்கம் தரும். ஆகஸ்ட் 2ஆம் தேதி முதல் ரியல் எஸ்டேட் இனங்களால் அனுகூலம் உண் டாகும். கேளிக்கை, உல்லாசங்களில் ஈடுபாடு கூடும். நல்லவர்கள் உதவ முன்வருவார்கள். தொழிலாளர் கள் அதிகம் பாடுபடவேண்டிய அவசியம் உண்டு. ஜூலை 16,21,25,26,27,29 ஆகஸ்ட் 2,3,4,7,9,12 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தெற்குத்திசைகள் அனு கூலமானவை. சிம்ம, ரிஷப ராசிக்காரர்கள் உதவு வார்கள். 3,9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

சிம்மம் : (மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம் முடிய)

ராசிநாதன் விரயத்திலிருப்பதாலும், குரு ஜன் மத்தில் உலவுவதாலும் அலைச்சலும், உழைப்பும் அதிகரிக்கும். பொருளாதாரநிலை தொய்வடையும். எதிர்பாராத திடீர்ச்செலவுகளும், இழப்புகளும்கூட ஏற்படும். சிக்கனத்தைக் கையாள்வது நல்லது. குடும்பநலனில் அக்கறை செலுத்தவேண்டிவரும். அரசாங்கத்தாரால் ஓரிரு பிரச்னைகளைச் சந்திக்க நேரலாம். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்பை எண்ணிக் கைப்பொருளை வீணாக்க வேண்டாம். அரசியல் வாதிகளும், அரசுப்பணியாளர்களும், வியாபாரி களும், மாணவர்களும் தங்கள் கடமைகளைச் சரிவர ஆற்றிவந்தால் சோதனைகளுக்கு ஆளாகாமல் தப்பலாம். 17ஆம் தேதி முதல் செவ்வாய் தசம கேந்திரம் பெறுவதால் உங்கள் ஆற்றல் வெளிப் படும். எதிர்ப்புகளைக் கடந்து வாழ்வில் வெற்றி பெறுவீர்கள். வழக்கு, வியாஜ்ஜியங்களில் அனுகூல மான போக்குத் தென்படும்.

வேலை வாய்ப்புத் தேடி அலைபவர்கள் தகுந்த தொரு வேலை வாய்ப்பைப் பெறுவார்கள். ஏற் கனவே வேலையில் இருப்பவர்கள் தங்கள் நிலை உயரப் பெறுவார்கள். பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் செழிப்பான பாதையைக் காண்பார்கள். நிலபுலன் களால் அனுகூலத்திற்கு இடம் உண்டு. மாண வர்கள் தங்கள் திறமைக்குரிய வளர்ச்சியைப் பெறச் சந்தர்ப்பம் உருவாகும். கணவன், மனைவியரிடையே கனிப்புறவு கூடும். வெளிநாட்டுத் தொடர்பால் அனுகூலத்திற்கு இடம் உண்டு. கூட்டாகத் தொழில் செய்பவர்கள் ஏற்றம் பெறுவார்கள். மக்கள்நலம் சீர்பெறும். ஆகஸ்ட் 2ஆம் தேதி முதல் கலைத்துறை யினருக்கு வளர்ச்சி அதிகரிக்கும். ஓரிரு எண் ணங்கள் ஈடேறவும் வாய்ப்புக் கனிந்துவரும். தொழி லாளர்களும், விவசாயிகளும் தங்கள் நிலை உயரப் பெறுவார்கள். ஜூலை 16,17,18,19,25,26,27,29 ஆகஸ்ட் 2,3,4,7,9,13,15 தேதிகள் சிறப்பானவை. தென்திசை அனுகூலமானது. கும்ப, ரிஷப ராசிக்காரர்கள் உதவுவார்கள். 7,9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

கன்னி : (உத்திரம் 2ஆம் பாதம் முதல் ஹஸ்தம், சித்திரை 2ஆம் பாதம் முடிய)

10,11ஆம் இடங்களில் உள்ள கிரகங்கள் உங்கள் பராக்கிரமத்தை வெளிப்படுத்துவார்கள். அர சாங்கத்தாரால் ஓரிரு நன்மைகளை எதிர்பார்க்க லாம். நிறுவன, நிர்வாகத்துறைகளைச் சேர்ந்த வர்கள் தங்கள் நிலை உயரப் பெறுவார்கள். வியா பாரம் அபிவிருத்தி அடையும். திரவப் பொருட் களால் ஆதாயம் கிடைக்கப் பெறுவீர்கள். சினிமா எழுத்தாளர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் வர வேற்பு கூடும். நூதன நண்பர்கள் ஓரிருவர் உதவ முன்வருவார்கள். எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் துறை களைச் சேர்ந்தவர்களுக்கு ஆதாயம் கூடும். குடும்ப நலம் கவனிப்பின்பேரில் சீராக இருந்துவரும். பெற்றோருக்கும், மக்களுக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் தோன்றும். வெளிநாட்டுத் தொடர் பால் அளவோடு நலம் உண்டாகும். கூட்டாகத் தொழில் செய்பவர்கள் பங்குதாரர்களிடம் பக்குவ மாக நடந்து கொள்வது நல்லது.

கணிதம், விஞ்ஞானம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் முன்னணிக்கு உயருவார்கள். 17ஆம் தேதி முதல் உடன்பிறந்தவர்களால் ஓரிரு நன்மை களை எதிர்பார்க்கலாம். கடிதப்போக்குவரத்து நற்செய்தி கொண்டுவரும். நிலம், மனை, வீடு, வாகனங்களால் ஓரளவு அனுகூலம் உண்டாகும். அலுவலகங்களில் பணிபுரிபவர்கள், மருத்துவர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள் ஆகியோர் தங்கள் பொறுப்புணர்ந்து காரியமாற்றினால் முன்னேற்றம் காண முடியும். தெய்வப்பணிகளில் தொடர்ந்து ஈடுபடுவது நல்லது. பெரியவர்களின் மனம் குளிரும்படியான காரியங்களில் ஈடுபடுவதன் மூலம் அவர்களின் நல்லெண்ணங்களுக்குப் பாத்திரமாக முடியும். அதன்மூலம் உங்களுக்கு நன்மைகள் உண்டாகவும் சந்தர்ப்பம் கூடிவரும். ஜூலை 16,17,18,19,25,26,27,29 ஆகஸ்ட் 2,3,4,7,9,13,15 தேதிகள் சிறப்பானவை. கிழக்கும், வடக்கும் அனுகூலமான திசைகளாகும். மிதுன, கடக ராசிக்காரர்கள் உதவு வார்கள். 1,5,6,7 எண்கள் அனுகூலமானவை.

துலாம் : (சித்திரை 3ஆம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3ஆம் பாதம் முடிய)

குருபலம் கூடியிருப்பதால் உங்கள் அறிவாற் றலும், செயல்திறமையும் கூடும். நிறுவன, நிர்வாகத் துறைகளைச் சேர்ந்தவர்கள் செழிப்பான பாதையைக் காண்பார்கள். அரசு விவகாரங்கள் நற்பயன் அளிக்கும். வியாபாரிகள் முன்னேற்றமான சூழ்நிலையைக் காண்பார்கள். எலக்ட்ரானிக், கம்ப் யூட்டர் இனங்கள் லாபம் தரும். கடல்வாணிபம் செய்வோர் கூடுதலான ஆதாயம் கிடைக்கப் பெறு வார்கள். பொன்நிறப் பொருட்கள் லாபம் தரும். பயணத்தால் ஓர் எண்ணம் ஈடேறப் பெறுவீர்கள். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றிக் கொள் ளச் சந்தர்ப்பம் கூடிவரும். ஆசிரியர்கள், பேரா சிரியர்கள், மருத்துவர்கள், விஞ்ஞானிகள் ஆகியோர்

தங்கள் நிலை உயரப் பெறுவார்கள். எழுத்தாளர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் செழிப்பான பாதை புலப்படும்.

17ஆம் தேதி முதல் செவ்வாய் 8ஆமிடம் புகுவதாலும், சனி வக்கிர கதியில் 4இல் சஞ்சரிப்பதாலும் உடல்நலனில் அக்கறை செலுத்திவருவது நல்லது. பதற்றத்திற்கு இடம் தராமல் எக்காரியத்திலும் நிதானத்துடன் ஈடுபடுவதன் மூலம் விபத்தைத் தவிர்த்துக் கொள்ளமுடியும். சினிமா, சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் அகலக் கால் வைக்க வேண்டாம். கணவன், மனைவியரிடையே சிறுசிறு பிரச்னைகள் அவ்வப்போது எழும். பக்குவத்துடனும், விட்டுக் கொடுக்கும் மனோபாவத்துடனும் பழகிவந்தால் சோதனைகளுக்கு ஆட்படாமல் தப்பலாம். உடன்பிறந்தவர்களால் ஓரிரு பிரச்னைகளுக்கு ஆட்பட நேரும். பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. யாரிடத்திலும் வெளிப்படையாகப் பழகவேண்டாம். சனி, செவ்வாய் பிரீதியான காரியங்களில் ஈடுபட்டு வருவது நல்லது. ஜூலை 16,17,18,19,21,24,27,29 ஆகஸ்ட் 2,4,7,9,12,13,15 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்குத் திசை அனுகூலமானது. தனுசு, கடக, சிம்ம ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,3,4,5 எண்கள் அதிர்ஷ்டமானவை.

விருச்சிகம் : (விசாகம் 4ஆம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)

சனி பலம் காரணமாக உங்கள் பராக்கிரமம் கூடும். எதிர்ப்புகளைச் சமாளிக்கும் சக்தியைப் பெறுவீர்கள். கறுப்பு நிறப்பொருட்கள் லாபம் தரும். தொழிலாளர்களும், விவசாயிகளும், பொது நலப் பணியாளர்களும் தங்கள் நோக்கம் நிறைவேறப் பெறுவார்கள். வெளிநாட்டுத் தொடர்பு ஆதாயம் தரும். நிறுவன, நிர்வாகத்துறைகளைச் சேர்ந்தவர்கள் ஏற்றம் காண்பார்கள். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் செழிப்புப் பெறுவார்கள். திரவப் பொருட்கள் லாபம் தரும். எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் இனங்களைச் சேர்ந்தவர்கள் ஆக்கம் பெறுவார்கள். கேளிக்கை, உல்லாசங்களில் ஈடுபாடு கூடும். புதிய ஆடை, அணிமணிகளின் சேர்க்கை நிகழும். கணவன், மனைவியரிடையே களிப்புறவு கூடும். தரும காரியங்களில் ஈடுபாடு உண்டாகும்.

2இல் ராகுவும், 8இல் கேதுவும் சஞ்சரிப்பதால் பேச்சிலும், உணவு விஷயத்திலும் கட்டுப்பாடு தேவை. வீண்வம்பு, வழக்குகளில் பிரவேசிக்க வேண்டாம். நூதன நட்பு கூடாது. விஷ ஜந்துக்களால் உபத்திரவத்திற்கு இடமுண்டு; எச்சரிக்கை தேவை. 17ஆம் தேதி முதல் பொறியியல் துறைகளைச் சேர்ந்தவர்கள் விழிப்புடன் இருப்பது நல்லது. கூட்டுத் தொழிலில் கவனம் தேவை. ஆகஸ்ட் 2ஆம் தேதி முதல் கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் விழிப்புடன் செயலாற்றுவது அவசியம். பெண்களின் முன்னேற்றம் தடைப்படும். வாழ்க்கைத்துணைநலம் கவனிக்கப்பட வேண்டிவரும். குடும்பத்தில் சிறுசிறு குழப்பங்கள் அவ்வப்போது தலைகாட்டும் என்றாலும் அவற்றைச் சமாளித்து வருவீர்கள். வியாபாரிகள் விழிப்புடன் காரியமாற்றுவது நல்லது. ஜூலை 16,17,18,19,21,25,29 ஆகஸ்ட் 2,4,7,9,12,15 தேதிகள் சிறப்பானவை. மேற்குத்திசை அனுகூலமானது. மகர, கடக ராசிக்காரர்கள் உதவுவார்கள். 6,8 எண்கள் அதிர்ஷ்டமானவை.

தனுசு : (மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம் முடிய)

குருபலம் கூடியிருப்பதால் உங்கள் அறிவாற்றல் கூடும். தெய்வானுகூலம் உண்டாகும். முக்கியஸ்தர்களின் தொடர்பால் நலம் பெறுவீர்கள். நிலம், மனை, வீடு, வாகனம் போன்ற ஸ்திரச் சொத்துக்களின் சேர்க்கையோ அல்லது அவற்றால் ஆதாயமோ பெற வாய்ப்புண்டாகும். மற்றவர்களால் உங்களுக்கும், உங்களால் மற்றவர்களுக்கும் அனுகூலம் உண்டாகும். மாணவர்கள் சுபிட்சம் காண்பார்கள். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் ஏற்றம் பெறுவார்கள். எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் இனங்கள் லாபம் தரும். நிறுவன, நிர்வாகத் துறைகளைச் சேர்ந்தவர்கள் முன்னேற்றமான சூழ்நிலையைக் காண்பார்கள். கடிதப் போக்குவரத்து நற்செய்தி கொண்டுவரும்.

உடன்பிறந்தவர்கள் உதவுவார்கள். மகப்பேறு அல்லது மக்களால் பாக்கியம் உண்டாகும். 17ஆம் தேதி முதல் பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் செழிப்பான பாதையைக் காண்பார்கள். எதிர்ப்புகள் என்பவை அகலும். வழக்கு, வியாஜ்ஜியங்களில் அனுகூலமான போக்கைக் காண்பீர்கள். பொருளாதார நிலை திருப்திகரமாக இருந்துவரும். எதிர்பாராத ஓரிரு செலவுகளும் அவ்வப்போது உண்டாகும். வெளிநாட்டுத் தொடர்பு ஆக்கம் தரும். தருமப் பணிகளில் ஈடுபாடு கூடும். பொன், வெள்ளி, இரத்தின வியாபாரிகள் கூடுதலான ஆதாயம் கிடைக்கப் பெறுவார்கள். அலைச்சலைக் குறைத்துக் கொள்வது நல்லது. பிற மொழி, மதக்காரர்களிடம் அதிகம் நெருக்கம் வேண்டாம். ஜூலை 16,17,18,19,21,25,27 ஆகஸ்ட் 2,3,4,7,9,12,15 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தெற்குத் திசைகள் அனுகூலமானவை. ரிஷப, சிம்ம ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3,6,9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மகரம் : (உத்திராடம் 2ஆம் பாதம் முதல் திருவோணம், அவிட்டம் 2ஆம் பாதம் முடிய)

முக்கியமான கிரகங்கள் அனுகூலமான நிலையில் சஞ்சரிக்காததால் நீங்கள் எதிலும் விழிப்புடன் ஈடுபடுவது நல்லது. அலட்சியப்போக்கு என்பது அடியோடு கூடாது. மனத்தில் சலனம் அதிகரிக்கும். உழைப்பு கூடும். அலைச்சலால் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படலாம்; தகுந்த கவனம்

தேவை. தொழிலாளர்களும், உத்தியோகஸ்தர்களும் தங்கள் பொறுப்புகளைச் சரிவர ஆற்றிவந்தால் சோதனைகளுக்கு ஆட்படாமல் தப்ப இயலும். மக்களாலும், உடன்பிறந்தவர்களாலும் ஓரிரு சங்கடங்களுக்கு ஆட்பட நேரும். பெற்றோர் நலனில் அக்கறை தேவைப்படும். தீயோர் தொடர்பை விட்டு விலகி நல்லவர்களின் நட்புறவை வலுப்படுத்திக் கொள்வது நல்லது. அதன் மூலம் நலம் பெற வாய்ப்புண்டாகும். கணவன், மனைவியரிடையே சிறுசிறு சலசலப்புகள் உண்டாகும்.

கூட்டுத் தொழிலில் அக்கறை தேவை. நூதன முயற்சிகளை ஒத்திப்போடுவது நல்லது. மாமூலான காரியங்களில்கூட கவனத்துடன் ஈடுபடுவது அவசியம். வியாபாரிகள் அகலக்கால் வைக்க வேண்டாம். குடும்பநலம் கவனத்தின்பேரில் சீராக இருந்துவரும். பொருளாதாரநிலை சீராக இருக்குமென்றாலும் எதிர்பாராத திடீர்செலவுகளும் உண்டாகும். சிக்கனத்தைக் கையாள்வது நல்லது. நெருங்கிய நண்பர்கள் ஓரிருவர் உதவ முன்வருவார்கள். கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் ஆகஸ்ட் 2ஆம் தேதிக்குப் பிறகு இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு வருவார்கள். ஓரிரு எண்ணங்கள் ஈடேறவும் வழிபிறக்கும். உங்கள் ஜனன கால ஜாதகப்படி தற்சமயம் யோக பலம் உள்ள தசை, புத்தி, அந்தரங்கள் நடைபெறுமானால் சங்கடங்கள் குறைந்து நற்பலன்கள் உண்டாகும். ஜூலை 16,17,18,19,21,25,26,27,29 ஆகஸ்ட் 3,4,7,12,15 தேதிகள் சிறப்பானவை. வடமேற்குத்திசை அனுகூலமானது. மிதுன ராசிக்காரர்கள் உதவுவார்கள். 7ஆம் எண் நலம் தரும்.

கும்பம் : (அவிட்டம் 3ஆம் பாதம் முதல் சதயம், பூரட்டாதி 3ஆம் பாதம் முடிய)

குருபலம் கூடியிருப்பதால் உங்கள் அறிவாற்றல் பிரகாசிக்கும். நல்லவர்களினுடைய தொடர்பால் நலம் பெறுவீர்கள். கூட்டுத் தொழில் லாபம் தரும். கணவன், மனைவியரிடையே கருத்தொற்றுமை கூடும். ஆசிரியர்கள், பேராசிரியர்கள், மருத்துவர்கள், விஞ்ஞானிகள், இரசாயனத் துறைகளைச் சேர்ந்தவர்கள் ஆகியோருக்கெல்லாம் செழிப்பான சூழ்நிலை உருவாகும். பணநடமாட்டம் திருப்திகரமாக இருந்துவரும். பிற மொழி, மதங்களைச் சேர்ந்தவர்கள் உதவ முன்வருவார்கள். பயணத்தால் பயன்பெற வாய்ப்புண்டாகும். அரசியல் வாதிகளுக்கும், அரசுப்பணியாளர்களுக்கும் ஓரிரு எண்ணங்கள் நிறைவேறும். நிர்வாகத்துறைகளைச் சேர்ந்தவர்கள் நற்பெயர் பெறுவார்கள். எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் இனங்கள் லாபம் தரும். வியாபாரிகள், உத்தியோகஸ்தர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோர் தங்கள் நோக்கம் நிறைவேறப் பெறுவார்கள்.

மக்கள்நலம் மகிழ்ச்சி தரும். மக்களால் அனுகூலத்திற்கும் இடம் உண்டு. திருமணம் ஆகாதவர்கள் அதற்கான வாய்ப்பைப் பெறுவார்கள். ஏற்கெனவே திருமணம் ஆனவர்களுக்கு மகப்பேறு பாக்கியம் கிட்டும். சினிமா, சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் ஓரிரு பிரச்னைகளுக்கு ஆட்படுவார்கள். 17ஆம் தேதி முதல் செவ்வாய் 4ஆமிடம் பெறுவதாலும், ராசிநாதன் விரயத்தில் வக்கிர நிலையில் சஞ்சரிப்பதாலும் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்திவருவது நல்லது. எக்காரியத்திலும் நிதானத்துடன் ஈடுபடுவது நல்லது. நிலபுலன்கள் சம்பந்தப்பட்ட விஷயத்தில் தற்சமயம் ஈடுபடாமல் இருப்பது அவசியம். பிறரால் ஏமாற்றப்பட நேரும் என்பதால் யாரிடத்திலும் வெளிப்படையாகப் பழகவேண்டாம். தொழிலாளர்கள், விவசாயிகள், பொறியியல் துறையாளர்கள் ஆகியோர்கள் விழிப்புடன் இருப்பது நல்லது. ஜூலை 18,19,21,25,26,27,29 ஆகஸ்ட் 3,4,7,9,15 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்குத் திசை அனுகூலமானது. சிம்ம ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3,4 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மீனம் : (பூரட்டாதி 4ஆம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)


17ஆம் தேதி முதல் செவ்வாய் பலம் கூடுவதால் உங்கள் மனத்தில் துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். செயற்கரிய காரியங்களில் ஈடுபட்டு வெற்றி வாய்ப்புகளைப் பெறுவீர்கள். இயந்திரப்பணிகள் ஆக்கம் தரும். எதிரிகள் ஓடி ஒளிவார்கள். வழக்கு, வியாஜ்ஜியங்களில் அனுகூலமான போக்குத் தெரிய வரும். தொழிலாளர்கள், விவசாயிகள், பொதுநலப் பணியாளர்கள் ஆகியோர் செழிப்பான பாதையைக் காண்பார்கள். கறுப்பு நிறப் பொருட்கள் லாபம் தரும். வெளிநாட்டுத் தொடர்பால் அனுகூலம் பெறுவீர்கள். நூதன நண்பர்கள் உதவ முன்வருவார்கள். சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்குப் பாராட்டுகள் கிடைக்கும். நிலம், மனை, வீடு, வாகனம் போன்ற ஸ்திரச் சொத்துக்களின் சேர்க்கையோ அல்லது அவற்றால் ஆதாயமோ பெற வாய்ப்பு உண்டாகும்.

கடிதப்போக்குவரத்து நற்செய்தி கொண்டுவரும். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் ஜூலை மாதம் முடிய விசேஷமான வளர்ச்சியைக் காண்பார்கள். அதன்பிறகு ஓரிரு பிரச்னைகள் உருவாகும். கணவன், மனைவியரிடையே களிப்புறவு கூடும். மக்கள் நலனில் அக்கறை செலுத்திவருவது நல்லது. கடல் வாணிபம் லாபம் தரும். திரவப் பொருட்களால் ஆதாயம் கிடைக்கப் பெறுவீர்கள். ஆகஸ்ட் 2ஆம் தேதி முதல் கணவன், மனைவியரிடையே சலசலப்பு உண்டாகும். அலைச்சல் அதிகரிக்கும். பொருள்வரவு சீராக இருக்குமென்றாலும் எதிர்பாராத ஓரிரு செலவுகளையும் சந்திக்க வேண்டிவரும். தாய்நலம் கவனிக்கப்பட வேண்டிய அவசியம் உண்டு. பெரியவர்களின் அதிருப்திக்கு ஆட்படாமல் அவர்களின் நல்லெண்ணங்களுக்குப் பாத்திரமாவது நல்லது. ஜூலை 16,17,18,21,25,27,29 ஆகஸ்ட் 2,3,7,9,12,13 தேதிகள் சிறப்பானவை. தெற்கும், மேற்கும் அனுகூலமான திசைகளாகும். ரிஷப, மகர ராசிக்காரர்கள் உதவுவார்கள் 4,8,9 எண்கள் நலம் தரும்.

தேவை எனக்கொரு பேனா!

10.1.1992 – கவிதை இரவில்
பரிசு பெற்ற கவிதை!

கண்மணி வி.கண்ணன்



பாதை மறந்து பயணம் போகுது உலகம்! அதன்
பயனாய் விளையுது பலப்பல
இடங்களில் கலகம்!
போதை மருந்தில் புகலிடம் தேடுது
'மனிதம்'! – இந்தப்
போக்கால் 'மானுடம்' இழக்கிறதே
அதன் புனிதம்!
பேதங்கள் அதிகம் ஆனதனால்
'மனவிரிசல்'! – அதைப்
பெரிதாய் ஆக்கிடும் அரசியல்
'நாடக' உரசல்!
வேதங்கள் நமக்குள் விதைத்திட முயன்றன
'ஒருமை' – அதை
விலக்கியதால்தான் விளைந்தது நமக்கிந்த
நிலைமை!
வாணிபம் வளர்ந்திட மனிதன் படைத்த
பணமே! இவன்
வாழ்க்கையின் அடிப்படை ஆனதில்
சிதைந்தது குணமே!
தானமும், தருமமும் தழைத்த நம் திருநாடு!
இன்று
தலைகீழானது; தறி கெட்டதே!
வெட்கக் கேடு!

வெட்டிப் பேச்சும், சோம்பலும்
தொடர்கதை ஆச்சு! – பல
வெற்றிகள் இதனால் நம் கை
நழுவிப் போச்சு!
கட்டித் தழுவிட வருபவன் கையிலும்,
குண்டா! அடக்
கடவுளே! இதற்கொரு விடிவு
விமோசனம் உண்டா!
சத்தியம், நேர்மை எங்கு மறைந்தன
நண்பா? – நமைச்
சரித்திரம் பழித்திட நடப்பது
மானிடப் பண்பா?
புத்தனும், இயேசுவும், காந்தியும் வெறும்
கற்சிலையா? – அவர்
போதித்த தத்துவம்
அன்பல்லவோ? நினைவிலையா?
அறிவியல் வளர்ச்சியில் அணுவையும்
இரண்டாய்ப் பிரித்தான்! – ஆம்!
அன்றே மனிதன் அழிவதற்கும் நாள்
குறித்தான்!
வெறிகொண்டு வன்முறை
தலைவிரித்தாடுது பேயாய்! – அது
விஷம்போல் கொடியது! விரைவாய்
பரவுது தீயாய்!
அழிவினை நோக்கிய உலகத்தின்
ஓட்டத்தைத் தடுக்க – நல்
அன்புடன் அமைதியை அனைவரின்
மனதிலும் விதைக்க,
ஒழிவின்றி உழைப்பேன்! அதுவரை
ஒய்வெடுப்பேனா? – அந்த
உன்னதப் பணிக்குத் தேவை
எனக்கொரு பேனா!

உணவு, கூட்டுறவுத்துறை அமைச்சருடன் ஒரு சில நிமிடங்கள்...



"உண்மையிலேயே சிக்கலானதும், பிரச்னைகள் மலிந்ததுமான உணவுத்துறை மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் பொறுப்பை மிகவும் நம்பிக்கையோடு என்னிடம் ஒப்படைத்துள்ள மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவியின் பெயரும் புகழும் மேலும் ஓங்கும் வண்ணம் செயலாற்றுவேன்" என்று உற்சாகமாகக் குறிப்பிடுகிறார் 'ஜிவி' என்று சுருக்கமாய் அழைக்கப்படும் ஜி.விசுவநாதன்.

உணவுத் துறையில் தன் சமீபத்திய சாதனைகளை இதோ பட்டியலாக்குகிறார் அமைச்சர்.

"நம் மாநிலத்திலிருந்து வெளி மாநிலத்திற்கு உணவுப் பொருள்கள், குறிப்பாய் அரிசி போவதை முற்றிலும் தடுத்தாயிற்று. வட்டங்களில், மாவட்டங்களில் இருந்த 'செக் போஸ்ட்டுகள்' எடுக்கப்பட்டு, வியாபாரிகள் 'லெவி' எடுக்கப்பட்டு மாநிலம் முழுதும் அரிசி நடமாட்டத்தைப் ஃப்ரீயாக்கியாயிற்று. வேறெந்த மாநிலமும் செய்யாத விலை ஏற்றத் தடுப்பு நம் மாநிலத்தில் சாத்தியமாகியிருக்கிறது.

"ரேஷன் கடைகளில் மிகச் சரியான அளவில் அட்டைதாரருக்கு அரிசி, சர்க்கரை, கோதுமை, பாமாயில் ஆகியவற்றை வழங்குவதில் சிறு தவறும் கண்டுபிடிக்கப்பட்டுத் தடுக்கப்படுகிறது. விற்பனையாளரும், அவருக்கும் மேலே உள்ள அலுவலர்களும் நேரும் தவறுக்குப் பொறுப்பேற்கிறார்கள். ரேஷன் கடைக்கு வரும்போதே பொருள் குறைந்துவிடுவதாய்ப் புகார் வந்ததால் அதைத் தடுக்க நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

"நகரக் கடைக்காரர்களைப் பயமுறுத்திப் பொருளோ பணமோ கேட்கின்ற குண்டர்களைக் கைது செய்து வழக்குப் போடப்பட்டுள்ளது..."

"கள்ள மார்க்கெட்டுக்குப் போகும் உணவுப் பொருள்களைத் தடுத்து நிறுத்தியிருக்கிறீர்களா?"

"ரேஷன் கடைப் பொருள்களை விற்பவர், மற்றும் வாங்குபவர் மீதும் நடவடிக்கை எடுக்கப்படுவதால் பெருமளவு கள்ளமார்க்கெட்டுக்கு இப்போது பொருள்கள் போவதில்லை".

எல்லா மாவட்டங்களுக்
சென்று எம்.எல்.ஏ., எம்.
அலுவலர் எல்லாரையும்
தித்து ரேஷன் கடைகள்
குறைகள் நேராதவாறு க
காணிப்பதில் தீவி
செலுத்தத் தூண்டியது இ
வரை எந்த அமைச்ச
செய்யாதது...

"பணக்கையாடல், தணிக்
செய்வதில் குறைபாடுக
வாங்குவதில் விற்பதில் மு
கேடுகள், தவறு செய்பவ
தண்டித்தல் போன்றவற்
இதற்கு முன் இருந்த மு
கேடுகள் இப்போதும் தொ
கதைகளா?"

அவருக்கே உரிய இ
நகையைச் சிந்தியவாறு, கே
நம்மை உற்று நோக்கிவிட்
தொடர்கிறார்.

"இருந்த பலவீனங்க
முற்றிலும் ஒழிப்பதற்கு
தீவிரச் செயல்பாடு, வி
வாசி உயர்விலிருந்து
களைக் காப்பாற்றக் கூட்டு
மொத்த விற்பனைக் கூடங்
அதிக லாபம் வைக்கா
நியாய விலையில் பண்
களை விற்கச் செய்தது
இதனால் விலைவாசி உய
ஓரளவு கட்டுப்படுத்தப்
டுள்ளது".

"அரிசி விலை இம்மாவட்
தில் கிலோ ஒன்றிற்கு ஐம்
காசு முதல் ஒரு ரூபாய்தா
குறைந்துள்ளது?"

"இங்கிருந்து நிறைய வெ
மாவட்டங்களுக்கு அரிசி போ
தால் அங்கெல்லாம் கிலே
ஒன்றிற்கு இரண்டு ரூபா
வரை கூடக் குறைந்துள்ளது
பட்டென்று பதில் சொல்கிறா

1968 ஆம் ஆண்டில் மாநி
கூட்டுறவு நிலவளவங்கி தி

கப்பட்டது. அதற்குப் பின்னர் ந்த அமைச்சரும் அந்தப் பக்கம் தலை வைத்துப் படுக்க வில்லை. இவர்தான் முதன் முதலில் அந்தக் கட்டடத்தில் காலடிகள் பதித்திருக்கிறார்.

1957 ஆம் ஆண்டில் ஆரம்பிக் கப்பட்ட தமிழ்நாடு வேர் ஹவுசிங் கார்ப்பரேஷனில் கணிக்கை செய்ய முதன் முதலில் ஏற்பாடு செய்த அமைச்சரும் இவர்தான் என்று கேள்விப்பட்டதைக் கூறுகிறோம்.

இளநகை கலகலப்பாய் மாறுகிறது.

"இதுவரை நிறைவேற்றப்படாத வேலூர்ப் பாதாளச் சாக்கடை, பள்ளிகொண்டா - பாலாற்றின் குறுக்கே மேம்பாலம், ஓரிரு சிறுசிறு அணைக்கட்டுகள் இவைகளை என் காலத்தில் நிறைவேற்றியே தீருவது" என்று கங்கணம் கட்டியிருப்பதை இருக்கையிலிருந்து சற்று முன்னுக்கு வந்து முழங்குகிறார் அவர்.

வேலூர்த் தமிழ்ச் சங்கத்திற்குத் தலைவராயிருந்து அவர் செய்த இலக்கியச் சேவையை எண்ணிப் பார்க்கிறோம். ஒரு வித்தியாசமான அரசியல்வாதிதான் இவர்!

பிறருக்காகத்தான் இந்தப் பிறவி

இரா. சந்திரசேகரன்



சோளிங்கரில் 1959 ஆம் ஆண்டு பஞ்சாயத்து போர்டு நிர்வாகியாயிருந்த திருநாவுக்கரசு என்பவரின் மகள் கிருஷ்ணவேணி பள்ளி ஆசிரியை. அந்த ஆசிரியைதான் 'பிறருக்காகத்தான் இந்தப் பிறவி' என்ற பேருண்மையை இரா. சந்திரசேகரன் நான்காம் வகுப்பில் படிக்கும்போது உணர்த்தியவர். அந்தத் தெய்வமான ஆசிரியையைத் தரிசிக்க இன்றும் அவாவுற்றிருக்கும் இவர், 'அந்தத் தெய்வம் எங்கு கல்விக் கண்களைத் திறந்து கொண்டிருக்கிறதோ!' என்கிறார்.

மாட்டுத் தீவன விற்பனையாளரான இவர் ஒரு சரியான மனிதாபிமானியாய் விளங்குகிறார்.

'இரத்ததானம்' சந்திரசேகர் என்று வேலூரில் அழைக்கப்படுகிறார், இந்த வேலூர்வாசி!

1988லிருந்து இரத்ததானம் செய்து வரும் இவர், மற்றவர்களையும் செய்யத் தூண்டி இதுவரை ஏராளமான உயிர்கள் வாழ உதவியிருக்கிறார்.

இம்மாவட்டத்தின் மொத்தப் பரப்பில் மூன்றில் ஒரு பங்கு காடுகள்.

அந்நியச் செலாவணியை அள்ளித் தரும் சந்தனமரங்களும், மூங்கில் மரங்களும், தீக்குச்சி மரங்களும் அதிகம்.

விறகுகளுக்குரிய மரங்களுக்குப் பஞ்சமில்லை.

☆

ஆர் என்றால் ஆத்திமரம்.

ஆத்தி மரங்கள் அதிகமிருந்ததால் ஆர்க்காடு ஆயிற்று.

ஆங்கிலேயர்கள் தமிழகத்திற்கு வந்த காலத்தில் ஆர்க்காடு அவர்களின் தென்னகத் தலைமை இடமாக இருந்தது.

☆

அதோடு நிற்கவில்லை.

இதுவரை 56 கண்களைத் தானமாகப் பெற்றுத் தந்துள்ளார்.

வேலூர்ச் சிறைச்சாலையிலுள்ள கைதிகளுக்கு மூக்குக் கண்ணாடிகள், விளையாட்டுப் பொருள்கள், திருக்குறள் போன்ற நல்ல நூல்கள் ஆகியவற்றை வாங்கித் தந்துள்ளார்; பிறரிடம் வசூலித்தும்தான்!

பொன்னேரியைச் சேர்ந்த ஆயுள் கைதி ஒருவரின் குடும்பத்திற்கு ஒரு தையல் இயந்திரம் சமீபத்தில் வாங்கித் தந்தார்.

'மருத்துவப் பரிசோதனைக்காக இறந்தபின் என் உடலைப் பயன்படுத்திக் கொள்ள ஏற்பாடு செய்யுங்கள்' என்று இதுவரை 'உயில்கள்' எழுதித் தந்துள்ளனராம் இவரிடம் பலர்.

ஜூலை மாதத்தில் இன்னொரு புதுமையைச் செய்யப் போகிறார் இவர்.

தெருக்களில் காகிதங்கள், பாலிதீன் பைகள் ஆகியவற்றைப் பொறுக்குகின்றவர்களுக்கு ஒரு மையம் ஏற்படுத்தி கூட்டுறவு முறையில் தொழில் செய்யத் தூண்டப் போகிறாராம். அவர்களுக்கென்று பொழுதுபோக்கு மன்றம், அறிவுரை மன்றம் அமைக்கப் போகிறாரராம்.

அந்நியச் செலாவணியை அள்ளித் தரும் முன்னோடித் தொழிற்சாலை

ஆனைக்கர் ஷூ பிரைவேட் கம்பெனி வேலூர் - பெங்களூர் நெடுஞ்சாலையில் முள்ளிப் பாளையத்தில் இருக்கிறது. இதுதான் இந்த மாவட்டத்தின் தோல் சம்பந்தமான தொழிற் சாலைகளின் முன்னோடி. 50 ஆண்டுகளாய் தன்னிகரற்று விளங்கும் இதனுடைய நிறு வனர் அப்துல் ஷுக்கூர்.

ஆம்பூர் வாணியம்பாடி போன்ற ஊர்களில் இதன் கிளைகள் உள்ளன. அவ்வூர் களில்தான் இங்கு செய்யப்படும் 'ஷூ'க்குரிய தோல்கள் பதப் படுத்தப்படுகின்றன.

ஒரு நாளைக்கு 2000 ஜோடி காலணிகளின் மேற்பகுதிகள் (Shoe uppers) இங்கு தயாரிக் கப்படுகின்றன,

விரைவில் 'ஃபுல் ஷூ' புதுப் பகுதியையும் ஆரம்பிக்கவிருக் கின்றனர்.

இத் தொழிற்சாலைக்கு வேறெந்தத் தொழிற்சாலைக்கு மில்லாத சிறப்பு ஒன்றுண்டு. இங்கு தயாராகும் அனைத் தும் (நூற்றுக்கு நூறு விழுக்காடு) அமெரிக்கா, கனடா, டென் மார்க், இத்தாலி, ஆஸ்திரே லியா போன்ற நாடுகளுக ஏற்றுமதி செய்யப்படுகின்ற

இது ஒரு EOU. அதாவ Export Oriented Unit.

நம் நாட்டுக்கு அந்நி செலாவணியை அள்ளித் தரு இது, ஓராண்டுக்குப் 10 கோ ரூபாய்க்குத் தோல் பொரு களை ஏற்றுமதி செய்கிற Buyersன் Designஐ ஜீரணித்து தரமானவற்றைத் தயாரித்து தருகின்றது.

இத் தொழிற்சாலையில் 4 பேர் பணியாற்றுகின்றனர். விழுக்காடு பெண்கள். விழுக்காடு ஆண்கள். 'ஃபுல் ஷ பகுதிக்கு மேலும் 250 பே தேவைப்படுவர்.

இங்கு பணியாற்றுவோரு ஆண்டுக்கொரு முறை இரண்

ஆனைக்கர் ஷூ தொழிற்சாலைக்கு வருகை தந்த டென்மார்க் (வாங்க வந்தவர்கள்) நாட்டவர்கள்





ஆனைக்கர் ஷூ கம்பெனி தொழிற்சாலையின் ஒரு பகுதி.

டவைகள், இரண்டு க்கைகள் பெண்களுக்கும், ண்டு நீளக் கால்சட்டைகள், ண்டு சட்டைகள் ஆண்க க்கும் வழங்கப்படுகின்றன.

பணியாற்றுவோரின் ந்தைகளுக்கு ஒரு பாது ப்பு இல்லம், திருமணச் லவுக்குக் கணிசமானத் ாகை, போக்குவரத்துக்கு ள்கு பஸ்கள், பிராவிடன்ட் ண்ட், போனஸ், மருத்துவ தி. மிகக் குறைவான லையில் உணவு போன்றவை லும் இங்கு வழங்கப்படும் ுகைகள்.

தொழிற்சாலைக்குப் பக்கத் லயே பணியாற்றும் இந்துக் நக்கு ஓர் அம்மன் கோயிலை வாகம் கட்டித் தந்திருப்பது வும் பாராட்டப்பட வேண் ு ஒன்று.

நிறுவனர் நினைவு நாளன்று ியாற்றும் ஒவ்வொருவருக் ஒவ்வொரு கடியாரம் தரப் டதாம்.

'செல்வர்க்கழகு செழுங் ை தாங்குதல்' என்பதை நிர்வாகத்தினர் உண்மை வே மெய்ப்பிக்கின்றனர்.

நரியம்பேட்டை என்ற கிரா மத்தைத் தத்து எடுத்துக்கல்வி வசதிகள், மருத்துவ விடுதி மற்றும் குடியிருப்புகள் போன்ற வற்றை ஏற்படுத்தித் தந்திருக் கின்றனர்.

ஆம்பூரில் ஒரு மருத்துவ விடுதி, விடுதி வசதியுடன் கூடிய ஆண்கள் உயர்பள்ளி, பெண்கள் உயர்பள்ளி போன்ற வற்றை நிறுவி நேரிய முறையில் நிர்வகித்து வருகின்றனர்.

35 வயதே நிரம்பிய இந்த நிர்வாகத்தின் இப்போதைய தலைவரும், நிறுவனரின் மகனு மான ஏ. ஷுீக் அகமத் ஒரு 'சாதனைச் செல்வர்' என்பதில் சந்தேகமேயில்லை என்று சுற்று வட்டாரங்களில் மிகவும் பேசப் படுவது நம் காதுகளில் தேனாய்ப் பாய்கிறது.

நம் உதடுகளும் அசை கின்றன :

"ஆனைக்கர் ஷூ பிரைவேட் கம்பெனியின் நிர்வாகத் தலை வர் ஏ. ஷுீக் அகமத ஒரு 'சாதனைச் செல்வர்'தான்!"



என். மும்தாஜ் அகமத்
(இயக்குநர்)

மின்னியலில் பொறியாளர் பட்டம் பெற்ற இவர் ஆம்பூரில் பிறந்தவர். குவைத்தில் இரண் டாண்டுகள் பணியாற்றிவிட்டு இப்போது வேலூர் முள்ளிப் பாளையத்திலுள்ள ஆனைக்கர் ஷூஸ் தனியார் நிறுவனத்தில் இயக்குநராய்த் திகழ்கிறார். 42 வயதான இவர் சுற்றாத நாடுகளே இல்லை எனலாம்.

வேலூர்த் தெற்கு ரோட்டரி சங்கச் செயற்குழு உறுப்பின ரான இவர், நிர்வாகத்தின் வாயிலாகவும், தனிப்பட்ட முறையிலும் சேவைகள் ஏரா ளம் செய்கிறார். ஆனால் ஆர வாரம் கிடையாது. ஏழைப் பிள்ளைகளின் கல்விக்காக ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்கிவிடுகிறார். சமீபத்தில் 'ஹஜ்' யாத்திரையை முடித்துத் திரும்பியிருக்கும் இவரது புன்னகை வீசும் முக மும், அமைதியும், சுறுசுறுப்பும் நம்மைப் பெரிதும் கவர் கின்றன.

தொழிற்சாலைகளில் சிறு வர்கள் பணியாற்றுவதை எதிர்க்கும் இவர், வெளிநாடு களிலிருந்து வரும் 'பையர்ஸ்' சைல்ட் லேபரை மிகவும் வெறுக்கின்றனர் என்கிறார்.

ஊனமில்லா உள்ளங்கள்

-சூராஜ்-



சுமார் நூறு தொழிலாளர்களைக் கொண்ட அந்த நிறுவனம் தன் சொந்த முயற்சியின் வெற்றிச் சின்னம் என்று நண்பன் கூறி இருந்தான். என்னிடம் கடன் உதவியும் கேட்டிருந்தான்.

வாசலிலேயே ஓர் அதிர்ச்சி. காவலாளிக்கு ஒரு கை இல்லை.

அடுத்த அதிர்ச்சி.

பசும்புல் தரை. அழகான பூச்செடிகள். ரப்பர் குழாய் பிடித்து நீர்ப் பாய்ச்சும் தோட்டக்காரன். அவனுக்கு ஒரு கால் இல்லை. ஊன்று கோல்தான்.

"வாடா, ராஜ்!" உற்சாகத்துடன் வரவேற்றான், கருணாகரன்.

பரஸ்பரம் நலம் விசாரித்துக் கொண்டோம்.



"வா, முதலில் தச்சுப்பிரிவு காட்டுகிறேன்!"

தொழிலாளர்கள் அனைவரும் உடல் ஊனமுற்றவர்கள்! ஒரு கை இல்லாதவன் மின் விசை ரம்பத்தால் மரத்துண்டை அறுத்தான். செயற்கைக் காலுடன் ஒருவன் லேத் மெஷினில் கடைந்தான். உளியால் செதுக்கிக் கொண்டிருந்தவனுடன் நண்பன் சைகையில் பேசினான். அவன் ஊமை!

மோல்டிங் செக்ஷனில் கறுப்பு மண்ணைக் குழைத்தார்கள். அச்சுக்கள் செய்தார்கள். வார்ப்பு இரும்பை எந்திரங்களில் உருக்கி, ஆவி பரக்க ஊற்றினார்கள். அனைவரும் உடல் ஊனமுற்றவர்கள்.

"ராஜ்! இது மின்சார மெயின் ஸ்விட்சுகளுக்கு வெளிப்பகுதி செய்கிற வேலை.



விடிகிறபோது விடியட்டும்



வாசலை மூடிவிட்டு
வசந்தத் திற்காக
காத்துக் கொண்டிருக்காதே!

ஏராளமாக
காற்று கிடைத்தாலும்
நமக்காக
நாமேதான் சுவாசிக்க வேண்டும்.

வியர்வை சிந்த யோசித்தால்
வெற்றி யென்பதேது
விடிகிறபோது விடியட்டும்
சங்கெடுத்து ஊது.

கோ. இருசன்

இந்தியா முழுவதும் நல்லாப் போகுது! அதோ, அது பிளாஸ்டிக் செக்ஷன். மோட்டார் வாகனங்களுக்குச் சில பிளாஸ்டிக் அல்லது ஃபைபர் உறுப்புகளைச் செய்கிறோம். எங்க எல்லா தயாரிப்புகளையும் ஏற்றுமதி செய்யத் திட்டமிருக்கு. அதுக்குத்தான் உன்னிடம் மூனு லட்சம் ரூபா கடன் கேட்டேன்!"

"எல்லாம் சரி, கருணாகரா! ஆனா ஏன் ஊனமுற்றவர்களை வச்சுத் தொழில் நடத்துறே? ஊனம் இல்லாதவர்களைக் கொண்டு சிறப்பாகச் செய்யலாமே?"

புன்னகைத்தான் அவன். "வா, ஆபீஸ்லே சொல்றேன்!" என்றான்.

ஆபீஸ் அறையில் நீர் கொண்டு வந்து கொடுத்த வாலிபனைப் பார்த்ததும் அதிர்ந்தேன். அவனுக்குப் பார்வை இல்லை.

"ராஜ்! இவன் பாபு! பி.ஏ. படிச்சிருக்கான். டெலிபோன் கிளார்க். அடுத்த அறையில் ரெண்டு பெண்கள் இருக்காங்க!"

அங்கே தட்டச்சு ஒலித்தது.

"ம்... உடல் ஊனமுற்றவர்களை ஏன் வேலைக்கு வச்சிருக்கேன், தெரியுமா?" புன்னகைத்தான், நண்பன். "இவங்களுக்கு உள்ள மன உறுதி நமக்குவராது!"

நான் சிரித்தேன்.

அவன் நெற்றியைச் சுருக்கினான். "சிரிக்காதே ராஜ்! வாசலில் ஒற்றைக்கை வாட்ச்மேன் பார்த்தியே, அவனுடைய நெஞ்சுறுதியைப் பார்த்துத்தான் நான் தொழில் தொடங்கினேன்! அஞ்சு வருஷத்துக்கு முந்தி ஊரிலே அப்பா இறந்துபோக, நிலம் விற்ற பணத்திலே என்ன தொழில் செய்யலாம்னு குழம்பினேன். தைரியமில்லை. ஒருநாள் திருவாரூர் பஸ் பிடிக்க வெண்ணாத்து ரயில் பாலத்தைக் கடக்க நினைச்சேன்! அப்போ யாரோ ஒரு சிறுவன் ரயில் பாலத்திலே நடக்க, வண்டி வந்துடுச்சி! பயத்துலே சிறுவன் அசையாது நின்னு கத்துறான்! எனக்குக் கைகால் ஓடலை! கை இல்லாத வாலிபன் துணிச்சலா ஓடி, பையனைத் தூக்கிக்கிட்டு ஆத்து வெள்ளத்தில் குதிச்சு, ஒத்தக்கையாலேயே நீந்திக் கரை சேர்ந்துட்டான். அவன் முதுகிலே தொத்தி, சிறுவன் உயிர் பிழைச்சான். அப்போதே தீர்மானிச்சேன், உடல் ஊன முற்றவர்களை வச்சுத்தான் தொழில் ஆரம்பிக்கணும்னு! அதுசரி... உனக்கு ஏன் அவுங்க மேலே அவநம்பிக்கை?"

"அவுங்களுக்குத் தாழ்வு மனப்பான்மை அதிகம். தொழிலில் சிறக்க மாட்டாங்க! ஏன்னா, அவுங்களே குறையோடுஇருக்காங்க..."

"நிறுத்து, ராஜ்!" உணர்ச்சி வசப்பட்டுக் குறுக்கிட்டான், அவன். "உற்சாகமும், ஊக்கமும் கொடுத்தால் அவுங்க நம்மைவிட மனஉறுதியும், தன்னம்பிக்கையும், பரந்த மனமும் கொண்டிருப்பது புரியும். உடம்புதான் ஊனம், நம்மைப் போல மனசு ஊனமா இல்லை!"

"சாரி, கருணாகரன்! என்னால் ஒத்துக்க முடியலை!" எழுந்துகொண்டேன்.

திடீரென்று ஒருநாள் செய்தி வந்தது. வேலூர் மருத்துவமனையில் கருணாகரனுக்கு மாற்றுச் சிறுநீரக ஆபரேஷன்!

'கிட்னி தானம் கேட்பானோ...? போகலாமா, வேண்டாமா?' பயம் வந்தது.

பிறகு மனசு கேட்காமல் சென்றேன்.

ஒரு டாக்டரைப் பார்த்து விசாரித்தேன்.

"பயப்பட ஒண்ணுமே இல்லை! மூன்றாம் நாளே. சுகமா வீட்டுக்குப் போயிடலாம்!" என்றார் அவர்.

"டாக்டர்! கிட்னி தானம் செய்தது யார்?"

"தெரியாதா உங்களுக்கு? கொடுத்து வச்சவர் அந்தக் கருணாகரன். கிட்னிதானம்

செய்ய நெறையப்பேர் போட்டி போட்டுக்கிட்டு முன்வந்தாங்க. சிலர் ரத்த தானம்கூடச் செஞ் சாங்க! இப்போ ஆஸ்பிடல் சர்ச்சிலேதான் கூட்டமா இருக்காங்க! போய்ப் பாருங்க!"

போனதும் பிரமித்தேன். உடல் ஊனமுற்ற தொழி லாளர்கள்! அவர்களுடைய நெஞ்சுரம் எங்கே, என்னுடைய கோழைத்தனம் எங்கே? கூச்சத்துடன் திரும்பி நடந்தேன். - ஒற்றைக்கை வாட்ச்மேன் ஓடிவந்து, என் கையைப் பிடித்தான். "ஐயா வுக்கு ஆபரேஷன் நடக்குதுங்க! நாங்களெல்லாரும் கடவுளைப் பிரார்த்திக்கிறோம்!"

எனக்குக் கண்களில் நீர் திரண்டது. "யாருப்பா கிட்னி தானம் செய்தது?"

த. புகழ்

மாணவன்



"எட்டாம் வகுப்பு வரை நா படித்த வேலூர் தொன்போஸ்கே நடுநிலைப் பள்ளியே மாவ டத்தில் 25க்கும் மேற்பட்ட பேச்சு போட்டிகளில் பங்கேற்க, பரிசுக பெறக் காரணம்" என்று உ சாகத்துடன் கூறும் இந் மாணவர், சமீபத்தில் ப்ளஸ் ஒ எழுதியிருக்கிறார். மாவட்டத்தி இலக்கியக் கூட்டங்கள் எங் நடந்தாலும் தவறாமல் போய் கேட்கிறார். அங்கெல்லாம் நல் நூல்களைப் பரப்பி விற்பனையு செய்கிறார்.

எதிர்காலத்தில் மிகச் சிறந் பேச்சாளராவதே இவரது இல சியம்.

"பாபுதான் சார்! பார்வை இல்லாதவன்! உள்ளே இருக் கான்!"

எனக்குப் புல்லரித்தது. இவர்களுக்கா நெஞ்சுறுதி இல்லை?

நான்தான் ஊனமுற்றவன் ஆம்... உள்ளத்தில் நான் ஊன முற்றவன்...! அந் இளைஞர்களுக்கு நடுவே நிற் எனக்கு வெட்கமாக இருந்தது.



◆ நம்பிராசனின் மகள் வள்ளியை முருகன் மண முடித்த மலை இது. முருகன் வள்ளி தெய்வானையோடு காட்சியளிக்கிறார். குடை வரைக் கோயில்கள் உள்ளன. வள்ளி கவண் வீசுவது போலுள்ள குகை அருமை!




ஸ்நேகவள்ளித் தாயார்

◆ இலங்கையை ஆண்ட டைசி அரசனான ஸ்ரீ விக் ரமராஜ சிங்கன் ஆங்கிலேயர் ளோடு 1798 - 1815 வரை 17 ஆண்டுகள் போரிட்டான்.


அவனை வெல்ல இயலாத ஆங்கிலேயர்கள் அவனுடைய அண்ணன் முத்துசாமி, தலைமை அமைச்சர் பிலிம தளவாய் ஆகியோரைத் தங்கள் கைகளுக்குள் போட்டுக் கொண்டு ஸ்ரீவிக்கிரமராஜ சிங்கனைத் தோற்கடித்தனர். கைதியாக்கி 1815 ஆம் ஆண்டில் வேலூர்க் கோட்டைச் சிறை யிலடைத்தனர். 17 ஆண்டுகள் சிறையில் கொடுமைகளுக் குள்ளான அவர், 1832 ஆம் ஆண்டில் சிறையிலேயே கால மானார். பாலாற்றங்கரையில் புதைக்கப்பட்டார். அவருடைய பேத்தி ஸ்நேகவள்ளித் தாயார் சமீபத்தில் காலமானார் வேலூர் கொணவட்டம் பகுதி யில்.

ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கனின் நினைவிடமே இப்போதைய முத்து மண்டபம்.



வேலூரிலிருந்து 15 கி.மீ. தூரத்தில் உள்ளது மகாதேவர் மலை. இம்மலை மீதிருக்கும் மகாதேவரைத் தரிசிக்கச் சீரான படிகள் இல்லாமலிருந் தது. திருப்பத்தூருக்கருகில் பாலனாங்குப்பம் எனும் கிரா மப் பஞ்சாயத்துத் தலைவரா யிருந்த தேவானந்தர் 1008 படி களை ஏற்படுத்தினார். சுதந் திரப் போராட்ட வீரரான இவர் ஒரு துறவி. மகாதேவரின் பீடத்திற்குக் கீழ் சுரங்கம் உள்ளது. இம்மலையில் வற்றாத நல்ல நீர்ச் சுனைகள் உள்ளன.

ஏழாவது படைவீடு



கௌபீனதாரியாய் உட லெங்கும் விபூதி மணக்க, தோள்களில் தவழும் சடை முடியைச் சற்றைக்கொருதரம் கைவிரல்கள் அளைய, மார் பில் புரளும் கருமையும் வெண் மையும் கலந்த தாடி அசைய, புலித்தோலின் மீது உட்கார்ந்த நிலையில் ஆன்மநேய ஒருமைப் பாட்டுச் சிந்தனை பார்வை யில் ஒளிவீச, இடப்பக்கத்தில் பலகையும், சாக்குமாய், வலப் பக்கத்தில் வெள்ளிப் பூணிட்ட சிறிய பிரம்புமாய்த் தோற்ற மளிக்கும் இரத்தினகிரி தவத்திரு. பாலமுருகனடிமை யைத் தரிசிப்பதில் ஏற்படும் ஆனந்தப் பரவசத்திற்கு அளவேயில்லை.

குன்றேறிக் கால்கள் கன்றிச் சிவந்தாலும் மனப்புண் களுக்குக் கணப்பொழுதில் உச்சியில் அருமருந்து தர அடிகளார் இருக்கிறார் என்ற எண்ணம் அடிவாரத்திலேயே ஒரு அற்புதத்தை இனம் காட்டத் தொடங்கி விடுகிறது.


ஏறுகின்ற படிகளின் இரு மருங்கிலும் ஒவ்வொரு நன் கொடையாளர் பெயர் சலவைக் கல்லில் மின்னு கிறது. அதே மாதிரி இறங்கு கின்ற படிகளிலும்!

மயிலை குருஜி

மயிலை சுந்தரராம குருஜி இம்மாவட்டத்தில் சின்னச் சின்ன ஊர்களில் சிதில மடைந்துபோன கோயில்களைத் தேடிப் பிடித்துச் செப்ப னிட்டுக் குடமுழுக்குச் செய்ய விருக்கிறார்.

வெள்ளி மலைக்கருகிலுள்ள 'தெங்கால்' ஆசிரமம் இவ ருடைய பிரதான சாதனை. ஒவ்வொரு பௌர்ணமியன்றும் இங்கே பூசை புனஸ்காரங்கள் வெகு விமரிசையாக நிறை வேறுகின்றன.

வேலூர் ஸ்ரீ ஜலகண்டேஸ் வரர் ஆலயப் பிரசித்தியில் இவருக்குப் பிரத்யேகப் பங் குண்டு. ❖





வள்ளிமலை-:
வள்ளி மஞ்சள் தேய்த்துக் குளித்த இடம்

களைப்பே தெரியாத அளவுக்கு அகலமான படிகள்.

பிரம்மாண்டமான மணிக் கதவங்கள்.

குவலயத்தைச் சுற்றுதற்குச் சமம் அப்பனையும் ஆத்தாளையும் சுற்றுதல் என்ற குயுக்தியான தத்துவத்தைப் போதித்த ஆறுமுகனின் அண்ணனான ஆனை முகத்தான் கண்களில் குடியேறுகிறார்.

கைகளெடுத்துக் கும்பிடுகிறோம்.

அகலப் படிகள் ஐந்தாறைக் கடக்கிறோம்.

வள்ளி தெய்வானைக்கு நடுவில் முருகப் பெருமான் ஜோதிமயமாய் அருள் சுரக்கிறார்;தாற்காலிகமாய் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் வேலைப்பாடுகள் அமைந்த கருப்பு வண்ணக் கற்களாலான சிறிய கல்தேர் மண்டபத்தின் கீழ்.

பக்கத்திலேயே சற்றே மேடான பகுதியில் இருந்த மிகப் பழைய சிறிய கோயில் மிகப் பெரிய அளவில் உருவாகிக் கொண்டிருக்கிறது.

1993 ஆம் ஆண்டில் குடமுழுக்கு நடத்தும் தீவிரத்தில் பக்தர்களின் பொருட் சக்தியைப் பெறும் நோக்கில் அதி தீவிரம் காட்டிக் கொண்டிருக்கிறார் தவத்திரு பால முருகனடிமை.

1968 மார்ச் 20.

கற்பூரம் ஏற்றக்கூட நாதியற்றிருந்த இரத்தினகிரி பாலமுருகனை நானிலமும் நாடி வந்து நாளும் ஆராதிக்கத் தன்னைக் கௌபீனதாரியாக்கிக் கொண்ட நாள்.

மின்வாரிய ஊழியராய்ப் பணியாற்றிய சச்சிதானந்தம் தவத்திரு பாலமுருகனடிமையாய்ப் புடம் போட்டுக்கொண்ட பொன்னாள்.

மேனியெங்கும் விபூதி பூசி மேதினிக்குப் பாலமுருகனை வெளிச்சமிட்டுக் காட்டிய நாள்.

மெய்ஞ்ஞான நாள்!

ஆண்டுதோறும் இந்த நாளில் ஆயிரக்கணக்கானோருக்கு அன்னதானம் வழங்குகிறார் அடிகளார். இலவசத் திருமணங்கள் செய்து வைக்கிறார். சமூக நலப்பணிகளைச் செய்கிறார்.

ஆன்மக் கண்களைத் திறக்கும் இவர் அறிவுக் கண்களையும் திறக்கிறார்.

இரத்தினகிரியின் அடிவாரத்தில் 500க்கும் மேற்பட்டோர் படிக்கும் மெட்ரிகுலேஷன் பள்ளி, இலவச மருத்துவமனை, திருமண மண்டபங்கள், அங்காடிகள், தங்கும் விடுதிகள், ஆறுமுகத் தெப்பக் குளம், நீராழி மண்டபம், தங்கத் தேர் போன்ற பலவற்றைச் சாதித்திருக்கிறார்.

ஒரு குட்டி அரசு நிறைவேற்றும் அரும்பணிகளைத் தவத்திரு பாலமுருகனடிமை இங்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்.

பாலையாய்க் காட்சியளித்த இரத்தினகிரி இன்று சோலையாய் ஆர்க்காட்டிலிருந்து வேலூர்ச் செல்லும் நெடுஞ்சாலையில் அருட்திரு பாலமுருகனின் அருளாசி எப்பொழுதும் ஒலிக்கும் ஏழாவது படைவீடாய்த் திகழ்கிறது.

உயிர் காக்கும் மருத்துவ மனை

நிறைய கட்டடங்கள் மலிந்த ஓர் ஊருக்குள் போய்த் திரும்பும் உணர்வை உண்டு செய்கிறது வேலூர் ஆர்க்காடு ரோடிலுள்ள கிறிஸ்துவ மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரி.

ஊசலாடிக் கொண்டு இதன் உள்ளே போகின்ற உயிர் உற்சாகத்துடன் திரும்பும் விந்தையை இங்கே தரிசிக்க முடிகிறது.

ஆசியாவிலேயே மிகப் பெரிய மருத்துவமனையான இந்த சி.எம்.சி. மருத்துவ மனையை நிறுவியவர் அமெரிக்காவைச் சேர்ந்த டாக்டர் ஐடா சோபியா ஸ்கடர்.

இங்கு டாக்டர்கள், நர்ஸுகள், டெக்னிஷியன்கள் மற்றும் ஊழியர்கள் 4100 பேர் பணியாற்றுகின்றனர்.

இங்குள்ள மொத்த படுக்கைகள் 1704.

எல்லாச் சிகிச்சைப் பிரிவுகளும் இங்குள்ளன.

உலகிலேயே முதன்முதலாக 1948இல் தொழுநோயாளிகளுக்குப் 'புதுப்பித்தல்' (Re-construction) அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

தென் ஆசியாவிலேயே முதன்முதலாக 'நரம்பியல் சிறப்புப் பிரிவு' 1949இல் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தியாவிலேயே முதன் முதலாக வெற்றிகரமாக 1961இல் 'திறந்த முறை இருதய அறுவை சிகிச்சை' நடத்தப்பட்டது. 1966இல் 'மறுவாழ்வு நிலையம்' நிறுவப்பட்டது. 1971இல் 'சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை' செய்யப் பட்டது.



இம்மாவட்டத்திற்குக் கிடைத்துள்ள மிகப் பெருமைக்குரிய ஒன்று சி.எம்.சி. மருத்துவ மனை!




சுமையே விலகு!



ஜி. ருக்மணி

கல்விச் சுமை!
எங்கள் மூளையில்.
ஏக்கச் சுமை!
எங்கள் விழிகளில்.
பயணச் சுமை!
எங்கள் கால்களில்.
உழைப்பின் சுமை!
எங்கள் உடல்களில்.
காதல் சுமையே!
சற்று விலகி நில்!



வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்ட இலக்கியச் சிறப்பிதழ்

ரா.பொன்ராசன்

எப்படி முடிந்தது இது?

மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரம். அந்த அடிவாரத்தில் ஓர் அடர்ந்த காடு. வனம்.

அந்த வனத்தில் பல மிருகங்கள், பறவைகள் வாழ்ந்து வந்தன. ஒருநாள் மலையின் மறுபுறம் இருந்து ஒரு யானை அந்த வனத்துள் வந்தது.

கொம்பு முளைத்த யானை. பெரிய யானை. ஆண் யானை.

அந்த யானை வந்த தினத்திலிருந்து அந்த வனத்திலிருந்த பிராணிகளின் அமைதி பறி போயிற்று. அது செய்த அட்டூழியம் தாங்க முடியாததாகி விட்டது.

ஒரு நாள் ஒரு மரத்தடியில் அந்த யானை நின்று, கீழே கிடந்த மண்ணை அள்ளி அள்ளித் தலையில் போட்டுக் கொண்டிருந்தது.

மரத்தின் மேலிருந்த ஒரு குரங்குத் தம்பதி இதைப் பார்த்தது. பெண் குரங்குக்கு அந்த யானையின் செயல் அடிமுட்டாள்தனமாகப்பட்டது.

பைய இரகசியக் குரலில் தன் துணைவனிடம், "உடம்பு பெருத்திருக்கிற அளவுக்கு இந்த யானைக்கு மூளை இல்லையே? தன் தலையில் தானே மண்ணை அள்ளிப் போட்டுக் கொள்கிறது" என்றது.

யானையின் காதில் இது விழுந்துவிட்டது. பைய மேலே நிமிர்ந்து பார்த்தது.

ஆண் குரங்கு தன் துணையை இழுத்துக் கொண்டு மேல் கிளைக்குத் தாவியது.

அப்போது ஒரு காய்ந்த குச்சி ஒடிந்து யானையின் தலையில் விழ – யானையின் கோபம் எல்லை மீறியது.

'வீர்ர்' என்று பிளிறியவாறே அந்த மரத்தையே பிடித்து உலுக்கு உலுக்கு என்று அந்த யானை உலுக்க –

அந்த மரத்திலிருந்த பறவைகள், குரங்குகள் எல்லாம் பயந்து அலறிக்கொண்டே அடுத்த மரங்களுக்கு ஓடி விட்டன. அந்த மரத்தை முட்டி முட்டிக் கீழே விழுத்தாட்டிய பின்தான் அந்த யானை அந்த இடத்தைவிட்டு நகர்ந்தது.

இன்னொரு நாள், அந்த யானை மரங்களினூடே நடந்து போய்க்கொண்டிருந்தது. வழியில் ஒரு பெரிய புற்று. அதைப் பார்த்ததும் அந்த யானைக்கு என்ன தோன்றியதோ அந்தப் புற்றை துதிக்கையால் பெயர்த்துக் காலால் மிதித்து நாசம் செய்துவிட்டுத் தான் வேறுபக்கம் போனது.

அந்த வனத்தின் நடுவே ஒரு குளம். சாதாரணமாக அந்தக் குளத்தில்தான் அந்தப் பக்கத்துப் பிராணிகளெல்லாம்



தண்ணீர் குடிக்க வரும். இந்த யானை வந்த பின் அந்தக் குளத்துப் பக்கம் ஒரு பிராணி கூட எட்டிப் பார்க்க முடிய வில்லை.

தண்ணீர் குடிக்கப் பிராணிகள் போகும் மாலை நேரங்களில் அந்த முரட்டு யானை அந்தக் குளத்தில் போய்ப் படுத்துக் கொண்டு, வரும் பிராணிகளையெல்லாம் மிரட்டிக்கொண்டிருந்தது.

"இந்த யானையின் அட்டூழி யத்தை ஒடுக்க வழியே இல்லையா?" என்று ஒருநாள் மற்றப் பிராணிகளும் பறவை களும் கூடி ஆலோசித்தன. சிங்கம், புலி, சிறுத்தை போன்ற பிராணிகள் அந்த வனத்தில் இல்லை. கரடிகள் இருந்தன.

அவை, "எங்களுக்கு இந்த யானையால் எந்தத் தொந்தர வும் இல்லை. அதனால் இந்த யானையை ஒழிப்பதில் நாங்கள் பங்கெடுத்துக்கொள்ள முடியாது" என்றன.

நரிகள்கூட, "இந்த யானை விரட்டினால் எங்களால் ஓடித் தப்பித்துக் கொள்ள முடியும். எனவே அதை ஒழிப்பதில் நாங்கள் பங் கெடுத்துக் கொள்ள முடியாது" என்றன.



கூட்டத்தில் ஒரு காகம் இருந்தது. பையப் பறந்து வந்து ஒரு கட்டெறும்பின் பக்கம் உட்கார்ந்தது. "நீ மனது வைத் தால், இந்த யானையை இந்த வனத்தைவிட்டே விரட்டி விட லாம்" என்றது.

"ஓ நானா? நான் மனசு வைத்தாலா? பெரிய பெரிய பிராணிகளால்கூட முடியாதது என்னால் முடியுமா? எப்படி?" என்று ஆச்சரியப்பட்டது அந்த எறும்பு.

"நான் சொல்லும்படி நீ செய்தால் அது நிச்சயமாக முடியும்" என்று காகம் சொல்ல, "இந்த முரட்டு முட்டாள் யானையை நம் வனத்தைவிட்டு விரட்டி இங்கு அமைதியை மீண்டும் ஏற்படுத்த என்ன வேண்டுமானாலும் நான் செய்யத் தயார்" என்றது அந்த எறும்பு.

மறுநாள் பக்கத்து வாழைத் தோப்பில் நிறைய வாழைப் பழங்களைத் தின்றுவிட்டு அந்தக் குளத்துக்குள்ளே புரண்டு கொண்டிருந்தது அந்த யானை.

காகம் ஒரு காய்ந்த குச்சியைக் கொண்டு வந்து போட அதில் அந்தக் கட் டெறும்பு ஏறிக்கொண்டது. அந்தக் காகம் அந்த எறும்பு ஏறிக்கொண்ட குச்சியைப் பத்திரமாகக் கவ்விச் சென்று குளத்துச் சேற்றில் புரண்டு கொண்டிருந்த யானையின் தலையில் போட்டது.

அவ்வளவுதான். காகம் சொல்லிக் கொடுத்தபடி அந்த எறும்பு என்ன நடக்கிறது என்று யானை உணரும் முன்பே விர்ரென்று ஓடி அதன் காதுக் குள் புகுந்துக் கொண்டது.

பெரும் பெரும் மிருகங்களை எல்லாம் துதிக்கையால் இழுத்துப் போட்டுக் காலால் நசுக்கிவிடக் கூடிய அந்த யானையால் காதிற்குள் நுழைந்துவிட்ட எறும்பை எது வுமே செய்ய முடியவில்லை.

அதுக்குள் போன எறும்பு உள்ளே உள்ளே முடியுமான இடத்திலெல்லாம் கடித்தது. அந்த வலி தாங்காமல் யானை அலறியது. துள்ளியது. துடித் தது. அந்தக் குளத்தைவிட்டு வெளியே ஓடி மண்ணில் புரண்டது.

எது செய்தும் அதனால் காதில் நுழைந்து கடித்த எறும்பை எதுவுமே செய்ய முடியவில்லை.

கடைசியில் ஒடேயடியாகத் துள்ளிக் கொண்டே அந்த வனத்தை விட்டு ஓடிவிட்டது அந்த யானை!

தோசை

தோசை இது தோசை மிகச்
சுவை மிகுந்த தோசை.
துட்டில்லாமல் காசில்லாமல்
தட்டில் வந்த தோசை.
ஆசையோடும் அம்மா வந்து
சுட்டுத் தந்த தோசை – நாங்கள்
ஆர்வத்தோடும் உழைத்த பயன்
சூடும் இந்த தோசை.

— தங்கம் பழனிவேலு
காரைக்குடி



தெரிந்து கொள்ளச் சில செய்திகள்

நம் தமிழ்நாட்டு மதுரைக்காரத் தம்பி சுபாஷ், தன் நான்காவது வயதில் படம் வரைந்து, அந்தப் படம் தபால் தலையாகவும் வந்திருக் கிறது. அது மட்டுமல்ல, அண்மையில் (இந்த 1990இல்) உலகின் 38 நாட்டுக் குழந்தைகள் கலந்துகொண்ட ஓவியப் போட்டியிலும் பங்கு கொண்டு பரிசைப் பெற்றிருக்கிறான்.

பாலமுரளி அம்பாடி - 11 வயதாகும் இந்தப் பையன் பால்டிமோர் பள்ளியில் படித்துவிட்டு இப்போது மருத்துவப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்துள்ளான். 8 வயதில் இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்குச் சென்ற இந்த பாலமுரளி அம்பாடிதான் உலகிலேயே மிக இள வயது மருத்துவ மாணவன் என்று 1990இல் வெளிவந்த 'பொது அறிவுக் குவியல்' எனும் புத்தகம் சொல்கிறது.

பழைய புத்தகங்களையும், பழைய பத்தி ரிகைகளையும் ஓர் இலட்சத்திற்கும் மேல் சேர்த்து, பாதுகாத்து, பட்டியலிட்டு வைத்திருப் பவர் கோட்டையூர் ரோஜா முத்தையா செட்டி யார்.

இந்தியாவில் ராணுவப் பயிற்சி நிறுவனம் உள்ள இடம் டேராடூன்.

தொகுத்தவர்

அருப்புக்கோட்டை ஆனந்தி

ஒரு மேஜிக்



ஒரு தட்டு. தட்டு நிறையத் தண்ணீர். தண்ணீரில் ஒரு கப்பல். அதாவது காகிதக் கப்பல்,

ஆச்சா?

ஒரு சீப்பு. அதைக் கொண்டு 'வார்' 'வார்'ரென்று தலையில் சீவ வேண்டும்.

ஆச்சா?

சீவிய வேகத்தோடு அப் படியே அந்தக் கப்பலின் மூக்குப் பக்கம் சீப்பைக் கொண்டு செல்லவும்.

என்ன ஆச்சு?

பார்க்கவும்.

சில வினாடிகள், அந்தச் சீப்பு நகரும் பக்கம் எல்லாம் கப்பல் நகரும்?

ஏன்?

எதனால்?

நம் தலையில் காந்தம் இருக்கிறது. தலை சீவும்போது அந்தக் காந்தம் சீப்பில் ஏறுகிறது. அதுதான் காகிதக் கப்பலைக் கவர்ந்து இழுக் கிறது. செய்து பாருங்களேன்!

— எஸ். இராதாகிருஷ்ணன்

மூளைக்கு வேலை


எழுத்துகளைக் கொண்டு அந்தாதி அமைத்தல் நமக்குத் தெரியும். இப்போது ஊர்ப் பெயர்களை வைத்து அந்தாதி அமைத்துப் பார்ப்போமா?

பாளையம் கோட்டை- கோட்டையூர், திண்டுக்கல் - கல்கத்தா, காரைக்குடி - குடி யாத்தம், திருவண்ணாமலை - மலைப்பட்டி, ராஜபாளையம் - பாளையம்கோட்டை.

இதே போல் உங்களால் ஊர்ப் பெயர்களைக் கொண்டு எத்தனை அந்தாதிகளை அமைக்க முடியும்?

- ஆர். உமாராணி,
காஞ்சிபுரம்.

உனக்கேன் பாப்பா நகை வேண்டும்?



பச்சைக் கிளிக்கு நகை யில்லை
பாடும் குயிலுக்கு நகை யில்லை
இச்சை மைனாப் பறவைக்கும்
ஏதும் உடம்பில் நகை யில்லை!
அழகுத் தோகை மயிலுக்கும்
அங்கே உடம்பில் நகையில்லை
அழகு பாப்பா உனக்கெதற்கு
அழகு செய்ய நகை வேண்டும்?


— கல்லுப்பட்டி சீனிவாசன்.

கணக்கு விளையாட்டு

உங்களுக்கு 1,2... தெரியும் தானே? 1 இல் இருந்து 12 வரை எண்களை எடுத்துக் கொள்ளுங்கள். படத்தில் இருக்கும் வட்டத்தில் ஏற்ற எண்களை இட்டு நிரப்புங்கள். எந்தப் பக்கம் கூட்டினாலும் 26 வர வேண்டும். முயன்று பாருங்கள். முயற்சி வெற்றி தரும்.

Fun with Maths and Physics-இலிருந்து

மு. பாலசுப்பிரமணி, கு. கி. பாண்டி.



இலக்கியத்தில் இடம் பெற்ற வள்ளல்கள்

பாரியைத் தெரியும். முல்லைக்குத் தேர் கொடுத்து நிலைத்த புகழ் கொண்டவன்.

அவன் கடை ஏழு வள்ளல்களில் ஒருவன்.

சரி கடை ஏழு வள்ளல்கள் யார் யார்?

1. பாரி, 2. ஆய், 3. அண்டிரன், 4. எழினி, 5. நள்ளி, 5. மலயன், 6. பேகன், 7. ஓரி.

சரி. இடை ஏழு வள்ளல்கள் யார் யார்? என்று தெரியுமா?

இவர்கள் இடை ஏழு வள்ளல்கள்.

1. அக்குரன், 2. அந்திமான், 3. கன்னன், 4. சந்தன், 5. சந்திமான், 6.சிசுபாலன், 7.வக்கிரன் - இவர்களே.

அது சரி. முதல் ஏழு வள்ளல்கள் யார் யார்?

தெரிந்து எழுதுங்களேன்.


— *சீனிவாச பாரத்*

என். எஸ். தயானந்தம்

கவிஞர் ஆவோம்!

(கோடிட்ட இடங்களில் பொருத்தமான வார்த்தைகள் போடுங்கள். சரியான வார்த்தைகளைப் போட்டால் நீங்கள் எதிர் காலத்தில் கவிஞராக வாய்ப்பு இருக்கிறது)





ரா. பொன்ராசன்

நால் மனிதர்கள்



சுஜாதா ஃபிலிம்ஸ் லிட். நிறுவனமும்,
அமுதசுரபி வெளியீட்டாளர்கள்
ஸ்ரீராம் டிரஸ்டும் இணைந்து நடத்திய
போட்டியில் ரு. 5,000 பரிசு பெற்ற நாவல்

பாப்ரியா

12

மேட்டுப்பட்டியே அன்று துக்கத்தின் முகத்தில் விழித்ததுபோல இருந்தது. சிறிது நேரத்தில் சின்னாளப்பட்டியில் கிழக்கு - மேற்கு - தெற்கு என்று வித்தியாசமில்லாமல் சோக மாகச் செய்தி பரவிவிட்டது.

ஜாதி கமிட்டிப் பொருளாளரும், சின்னாளப் பட்டி கூட்டுறவு நாணய நெசவாளர் சங்கத்தின் பொருளாளருமான கேசவன் முதல் நாள் ராத்திரி விஷம் குடித்துத் 'தற்கொலை' செய்து கொண்டதை விடியலில் 'ஆள்' வந்து சொல்லவும், மனத்தில் ஒருவிதத் துயரத்துடன் 'விடுவிடு' வென நடக்க ஆரம்பித்த ராஜப்பாவை அந்த நேரத்தில், தங்கள் வாசலில் சாணம் தெளித்துக் கோலம் போட்டுவிட்டு, வீதியில் 'பாவு' உலர்த்த 'முளைக்கம்பி' அடிக்கப் புருஷனும் பெண்டாட்டியுமாய் இருந்து வேலை செய்து கொண்டிருந்தவர்கள் ஒரே சமயத்தில் பரபரப்புடன் பார்த்து என்னவோ ஏதோ என்று விசாரிக்கும்போது, நின்று ஒரு சிலரிடம் மட்டும் லேசுபாசாய் விஷயத்தைச் சொல்லிவிட்டு நடந்தார்.

ஊரில் தொழில் செய்வதைச் 'சாவு' எடுக்கும் வரை நிறுத்தியே ஆகவேண்டும் என்று கட்டாயம் இருந்ததால் இன்றும் அதுபோலவே ஆகிவிட்டது நிலைமை.

ராஜப்பா தன்னுடன் வந்த ஆளை முன்னே போய், தான் வருவதாகச் சொல்லி விடும்படி சொல்லியனுப்பிவிட்டு, 'பொன்னன் டீக்கடை யில் சாப்பிட்டுவிட்டு, தன்னுடைய சிநேகிதர்கள் யாராவது அங்கு இருக்கிறார்களா என்று சுற்றும் முற்றும் பார்க்கும்போது நடராஜனும் வெங்கட்ராம் செட்டியாரும் டீக்கடைக்குக் கொஞ்சம் தள்ளி பீடி பிடித்துக் கொண்டிருப் பதைப் பார்த்துவிட்டுப் பேச்சுக் கொடுத்தார். 'சாவு வீட்டுக்கு' நடைதூரம் அருகில் முக்கில் இருந்த டீக்கடைக்கு, விடியற்காலம் என்ப தால், 'சாவு'க்கு வந்தவர்கள் எல்லாரும் பொன்னன் டீக்கடையில் கூட்டம் போட்டிருந் தனர் அம்பாரமாய்.

ராஜப்பாவிற்கு அங்கிருந்தவர்கள் பலர் கை தூக்கி வணக்கம் செய்தனர். சிலர் தாமே வலியவந்து 'என்னங்க உங்க உசிரு சிநேகிதரு இப்படிப் பண்ணிட்டாரு?' என்று துக்கம் விசாரித்தனர்.

"என்ன இருந்தாலும் கேசவன் இப்படிச் செஞ்சிருக்கக் கூடாதுப்பா. புள்ளைங்க குட்டிங்க என்ன செய்வாங்க பாவம்? அதுங்க ளோட முகத்தைப் பார்க்கும்போது ரொம்பவும் தான் மனசுக்குச் சங்கடமா இருக்குப்பா..."

"ஆமா அதுதான் வெவரம் சரியா புரியலே. என்ன காரணத்துனாலே இப்படி திடீர்னு முடிவு எடுத்தாரு கேசவன்? அப்படி என்ன உசிருக்கு உலை வைக்கற மாதிரி நடந்து போச்சி வீட்டுக்குள்ளே? அவருக்கு வாய்ச்ச பொம்பிளைதான் என்னமா அமைதியா, சாந்தமா, குடும்பத்துக்கு ஏத்தாப்லே...., சொல்லி வச்சமாதிரி ரெண்டு வயசுக்கு வந்த ரெட்டைப் பிள்ளைங்க; பத்து வயசிலே ஒரு பையன் இவங்களையெல்லாம் எப்படி அந்தம்மா கரை சேர்க்கப் போறாங்களோ தெரியலை".

"ஏதாச்சும் கடுதாசி எழுதி வச்சிருக்காரா என்ன?"

"அப்படியுமில்லையே, காய்தமுமில்லே, கடுதாசியுமில்லே... ஏன் கேசவன் தற்கொலை பண்ணிட்டாருன்னு போலீஸ்காரங்க வந்து கேட்டா அதுக்குப் பதில் சொல்ல இங்கிருக்கற அக்கம் பக்கத்தாருக்குத்தான் கஷ்டம்".

கூட்டத்தில் கேட்ட விவரங்களில் எதுவும் அவருக்குச் சிந்தனைகளைத் தரவில்லை. கேசவனின் தற்கொலைக்கு ஏதோ ஒரு பெரிய பின்னணி காரணமாக இருந்திருக்கிறது என்பதை மட்டும் மனம் உள்ளூற உணர்த்தியது.

அவர் மிகுந்த யோசனையுடன் நடக்க எத்தனிக்கும்போது அங்கிருந்தவர்கள் ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் எல்லாரும் அவருடன் சேர்ந்து நடக்கத் தொடங்கினார்கள்.

தன்னுடைய சிநேகிதன் ஆயிற்றே என்ற நினைப்பில் போகும் வழியில் 'பூக்கடை' ஒன்றில் ரோஜாப்பூ மாலை ஒன்றை வாங்கிக் கொண்டார் ராஜப்பா. ராஜப்பா வழி நெடுகிலும் யோசனை செய்து கொண்டுதான் நடந்தார். கேசவனைப் பற்றி சென்ற வாரம் 'அமாவாசை' அன்று கூட 'கூட்டுறவு நாணயச் சங்கத்தின்' கதவைத் திறந்து உட்கார்ந்து ரொம்பவும் தீவிரமாக உன்னிப்புடன் கணக்குப் பார்த்துக் கொண்டிருந்தபோது, சாத்தான் கோயில் பக்கம் வேறு ஒரு ஜோலியாய்ப் போய்விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தபோது முகம் சிரித்தபடி வரவேற்றுப் பேசியது நினைவிற்கு வந்தது.

திண்ணையிலும் வெளியே போட்டிருந்த பெஞ்சுகளிலும் இன்னும் வீட்டிற்குப் பக்கமாய் கூரையில் கிளைகள் பரப்பி நின்று கொண்டிருந்த முருங்கை மரம், புளியமரம் நிழலிலும் ஆண்களும் பெண்களுமாய் சின்னஞ்சிறுசுகளாய்க் கூட்டம் கூட்டமாக நின்று கொண்டிருந்தனர்.

ராஜப்பாவின் கூடவே நான்கு ஐந்து பேர் வரவே சத்தம் கேட்டு எல்லோரின் பார்வையும் ஒரே நேரத்தில் அந்தப்பக்கம் திரும்பின. இதுவரை ஓய்ந்து போயிருந்த அமைதியில் சலனங்கள் ஏற்பட்டன.

வழி நெடுகிலும் நெருங்கிக் கிடந்தவர்கள் கொஞ்சம் விலகி வழிவிட்டனர். ராஜப்பாவின் கூட வந்தவர்களும், வெளியே செருப்புகளைக் கழற்றி விட்டு உள்ளே போய் கேசவனின் உடல் மீது மாலையைப் போட்டபடி சுற்றும் முற்றும் பார்த்தபோது பெண்கள் 'கோ'வென்று அழத் தொடங்கி விட்டிருந்தார்கள். அவர்கள் இருந்த நிலையில் சிநேகிதன் கேசவனைப் பற்றி எந்த விவரத்தையும் கேட்க முடியாது என்பதை மட்டும் தெள்ளத் தெளிவாகத் தெரிந்து கொண்டார் ராஜப்பா.

கேசவனைப் பற்றிய விவரங்கள் தெரிந்து கொள்ளவேண்டும் என்றும், இனிமேல் என்ன செய்வது? கேசவன் 'தற்கொலை' செய்து கொள்வதற்கான காரணம் என்ன என்பதைத் தெரிந்து கொண்டால்தான் 'சங்கத்தின்' கணக்கு வழக்குகளைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியும் என்ற எண்ணம் மட்டும் நிர்ப்பந்தமாய் மனத்தில் வந்தது.

கடைசியாக மனத்தில் ஒன்று பட்டது. போலீஸ் வந்தவுடன் வீட்டில் ஏதேனும் 'தற் கொலை' செய்து கொண்டதற்கான காரணங் களைப் பற்றி ஏதாவது எழுதி வைத்திருக்கி றானா என்று பார்த்துவிட்டு, 'கூட்டுறவுச் சங்கத்தின்' கதவைத் திறந்து அங்கு ஏதாவது இருக்குமா என்று பார்த்துவிட வேண்டியது தான்.

ஒன்றே ஒன்று நன்றாக ஞாபகத்திற்கு வந்தது ராஜப்பாவிற்கு. இரண்டு வாரத்திற்கு முன் 'காட்டாஸ்பத்திரி' பக்கம் போய்விட்டுத் திரும்பிவரும்போது வழியில்...

சைக்கிளில் கேசவன் எதிராகப்பட்டபோது சொன்ன விஷயம்தான் அது. "என்னது கேசவன் இந்த நேரத்திலே, சங்கத்திலே இருக்க வேண்டிய நீ அரிபறியா இப்படி சைக்கிள்ளே இந்தப் பக்கமா வந்துட்டுப் போறியே?"


"ஒண்ணுமில்லேப்பா, என்னோட மூத்த மகளுக்கு திண்டுக்கல்லுக்குப் பக்கமா 'வெள்ளோ'ட்டிலே மாப்ளே பார்க்கலாம்னு இங்கே தெரிஞ்ச மனுஷன் ஒருத்தர் சொல்லிய னுப்பிச்சிருந்தார், போன வாரம் வரச் சொல்லி... எங்கே விடியுது? சங்கம் அது இதுன்னு தலையிட்டா நம்ப சொந்தப் பொழுப்பைப் பத்தி நெனைக்கவா முடியுது?

கடைசியிலே அவர் பார்த்து வச்ச வரன் கைமாறிப் போயிட்டதா என் மேலே அவர் குத்தம் சொல்லக் கூடாது இல்லே, அதனாலே தான் என்ன வேலையானாலும் சரி, இன்னிக்கு சந்திச்சு என்ன விவரம்னு கேட்டுட்டுப் போயிடலாம்னுதான் புறப்பட்டுப் போயிட்டு இருக்கேன்".

"இன்னும் ரெண்டு வாரத்துக்குள்ளே சங்கத் தோட கணக்கு வழக்குகளைப் பார்க்க அதி காரிங்க வரதா திண்டுக்கல்லுக்குப் போயிட்டு வந்தவங்க சொன்னாங்க.

"இல்லியே! எப்போ வர்றாங்கன்னு சொன் னாங்க?"

அதற்குப் பின்னால் கீழக் கோட்டை, சித்தையன் கோட்டை என்று 'பஞ்சாயத்து'க்குப் போய்விட்டபடியால், இடையில் கேசவனைச் சந்திக்க முடியாமலே போய்விட்டது. இப்போது கேசவன் செத்துப் போன விஷயம் பத்தி நினைக்கும்போது சங்கடமாக இருந்தது.



மதுரையிலிருந்தும் வர்றாங்க. மதுரையிலிருந்து ஆளுங்க வர்ரதா சென்னாஞ் செட்டியார்தான் 'பூஞ்சோலை' பெட்டிக்கடையிட்டே சந்திச்சப்ப சொன்னாரு. இதைப்பத்தி வேறு யாராச்சும் உன்கிட்டே சொன்னாங்களா என்ன?"

அதுவும் 'காரணம்' என்னவென்று தெரியாமல் இருப்பது அதிகப்படியான விசனத்தைக் கொடுத்தது ராஜப்பாவிற்கு. இருந்தாலும் ஏதோ ஒரு பின்னணி கேசவனின் தற் கொலைக்குக் காரணமாயிருப்பது போல மனத்திற்குப்பட்டது. 'அம்பாத்துரை' போலீஸ் ஸ்டேஷனிலிருந்து இன்ஸ்பெக்டரும்

போலீஸ்காரர்களும் வருவதற்குச் சரியாக ஒரு மணிநேரம் ஆகிவிட்டது. போலீஸ் வந்து சேர்வதற்குள் கேசவனின் 'வீட்டு'த் திண்ணையில் ஆட்கள் மாறிமாறி உட்காருவதும், சிலர் வெளியே போய் ஒதுக்குப்புறமாய் சிறுநீர் கழித்து விட்டுப் பீடியைப் பற்ற வைப்பதும் இன்னும் சிலர் 'டீ' சாப்பிடுவதற்காக வெளியே போவதும் வருவதுமாய் இருந்தார்கள்.

போலீஸ்காரர்கள் விசில் சத்தம் கேட்டதும் கூடியிருந்தவர்கள் கசமுசா என்று பேசுவதை நிறுத்திவிட்டு, வழிவிட்டார்கள். வந்த இன்ஸ்பெக்டருக்கு 'வணக்கம்' சொல்லிவிட்டுக் கூடவே வந்து கேசவனின் வீட்டிற்குள் முன் நின்றார் ராஜப்பா.

வீட்டிற்குள் சுற்றும் முற்றும் பார்த்த இன்ஸ்பெக்டர், சில நிமிஷத்தில் உள்ளே உட்கார்ந்து அழுது கொண்டிருந்தவர்கள் எல்லோரையும் வெளியே போகும்படி சொன்ன போது...

விட்டுப்போன சோகம் மறுபடியும் அவர்களையெல்லாம் தேம்பித் தேம்பி அழச் செய்தது.

"தயவு செஞ்சி வெளியே போங்க. இவரோட மனைவியும் குழந்தைகளும் மட்டும் ஓரமா நிற்கட்டும். நாங்க இங்கே கொஞ்சம் சோதனை போடப்போறோம். இவரு 'தற்கொலை' செஞ்சிக்கிட்டதா பதிவாயிருக்குது. என்ன காரணத்தினாலே தற்கொலை பண்ணிட்டாருன்னு இவங்ககிட்டே நாங்க 'வாக்குமூலம்' வாங்கணும்:

உள்ளே உட்கார்ந்திருந்தவர்கள் ஒருவராய் இரண்டு பேருமாய்... என்று வெளியேறக் கடைசியில் கேசவனின் மனைவியும், இரண்டு பெண்களும் மட்டும் 'சாவு'க்குப் 'பக்கம்' ஒதுங்கி நின்றார்கள்.

இன்ஸ்பெக்டர் கேட்ட கேள்விகளுக்குத் தங்களுக்குத் தெரிந்ததை மட்டும் திக்கித் திணறிச் சொன்னார்கள்.

போலீஸ்காரர்களில் ஒருவர் எல்லா விஷயங்களையும் குறிப்பு நோட்டில் எழுதிக் கொண்டிருக்க,

இன்ஸ்பெக்டர் ராஜப்பாவைக் கூப்பிட்டு, 'சாவை'த் திண்டுக்கல் அரசாங்க ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போக வேண்டும். 'பிளசர்' எதையாவது ஏற்பாடு செய்யுங்கள் என்று சொன்னபோது வேறுவழியில்லாமல் கூட இருந்த ஆளிடம் சொல்லியனுப்பி, எப்போதும் இதுபோன்ற 'சாவு' போக்குவரத்துக்கென்றே பிரத்யேகமாக வாடகை வண்டி வைத்திருக்கும் ஆளைக் கையோடு கூப்பிட்டு வரும்படியாகச் சொன்னார்.

சிறிது நேரத்திற்கெல்லாம் வண்டி வந்து விட்டது. ஜனங்களிடையே பரபரப்பு ஏற்பட்டு முகங்களில் சோகம் வேரோடிப் போயிருந்தது.

எல்லோரையும் ஒதுக்கிவிட்டு, வாகனத்தில் ஏற்றிவிட்டு, முக்கியமான சிலரையும்கூட அனுப்பிவிட்டு நின்றார் ராஜப்பா, இன்ஸ்பெக்டருடன். கசகசவென்றிருந்த வீதி கொஞ்ச நேரத்திற்குள் அமைதியாகிவிட்டது. இன்ஸ்பெக்டருடன் ஒரு போலீஸ்காரரும் நிற்கவே... ராஜப்பா 'சொசைட்டிக்குப் போக வழிகாட்டியபடி நடந்தார். சொசைட்டியின் சாவியைப் பெரிய பெண்ணிடம் கேட்டு வாங்கியபடி.

புழுதிக் காற்றில்... ஒரு பாலைவனம் நகர்ந்து வருகிறது..!

மக்கள் கவிதைக்குத் தமிழ் இலக்கிய ஏட்டில் முன்னுரை எழுதியவன் பாரதி.

அடுத்தவேளை சாப்பாட்டிற்கு வழி இல்லாத நேரத்திலும் கண்ணீரையே மையமாக்கி "எத்தனைக் கோடி இன்பங்கள் வைத்தாய் இறைவா..." என்று ஒரு கனவுலகச் சஞ்சாரியாய் சத்திய ஆவேசத் தாண்டவம் இட்டவன்.

திருவள்ளுவரும், கம்பரும், இளங்கோவும் ஏற்றி வைத்த ஞானதீப வெளிச்சத்தில் இலக்கியப் பொன்னுலகம் கண்டவன்.

"வில்லினை ஒத்த புருவம் வளைத்தனை வேலவா -

அங்கு
வெற்பும் நொறுங்கிப் பொடிப் பொடி யானதோ
வேலவா"

என்று அர்ச்சுனனின் காண்டீபத்தையே பேனாவாக்கி அநீதியை எதிர்த்தவன்.

"புல்லை நகையுறுத்தி
பூவை வியப்பாக்கி"

என்று கதிரவனை ஒரு புதிய கோணத்தில் பாடியவன்.

"வயிற்றுக்குச் சோறிட வேண்டும் - இங்கு
வாழும் மனிதர்க்கெல்லாம்"



என்று ஜீவானந்தப் பொதுவுடைமைக் குரல் கொடுத்தவன். அவனுக்கு நிகர் அவனே.

பளு தூக்கும் போட்டியில் கலந்து கொள்ள வேண்டியவர்களெல்லாம் பாரதி தமிழ்ச் சங்கம் வைத்துவிட முடியாது.

"வந்த வழி பழசு – நாங்க
வகுக்கும் வழி புதுசு"

என்று தமிழ் இலக்கியத்தின் உன்னதப் பழமையை உரமாக்கி மலர்விட்ட முதல் வசந்த மலர் பாரதி.

அநாகரிகமான காட்டுக் கூச்சலுக்கு அப்பால் கவிதையின் கீதம் குயில் பாட்டாய் கேட்டுக் கொண்டிருக்கிறது.

அவனது தரிசனமே எனது சத்தியம். அவனைப் பற்றிய விமர்சனக் கூச்சல்... அதோ புழுதிக்காற்றில் ஒரு பாலைவன மாய் நகர்ந்து வருகிறது.

கவியரசு. நா. காமராசன்

எப்படியும் 'பிரேதப் பரிசோதனை' முடிந்து திண்டுக்கல்லிலிருந்து மறுபடியும் பிரேதம் ஊருக்குள் வர, சாயங்காலம் நான்கு மணி நேரம் ஆகிவிடும். அதற்குள் சொசைட்டிக்குப் போய் வந்து ஏது என்ன என்று இன்ஸ் பெக்டருடன் போய் பார்த்துவிட்டு வருவது நல்லது என்ற யோசனை ராஜப்பாவிற்கு.

கேசவனின் வீட்டில் தற்கொலைக்கு அடையாளமாய் 'விஷ' பாட்டில் ஒன்று இருந்தது மட்டுந்தான் 'தற்கொலை'க்குச் சாட்சியாய் இருந்தது.

மருந்து குடிப்பதற்கு முதல் நாள் இரவில் தான் திண்டுக்கல்லிலிருந்து திரும்பி வந்த தாகவும், வரும்போதே 'கறி' எடுத்துக் கொண்டு வந்ததாகவும் ராத்திரியில் கேசவனின் பெரிய பெண் சொன்ன வார்த்தைகள் ராஜப்பாவின் காதில் ரீங்காரமிட்டன.

சொசைட்டியின் கதவைத் திறந்து உள்ளே போனபோது உள்ளே இருந்த மர அலமாரிகளில் பட்டு சிட்டங்களும், பாவுகளும் தயாராகி வந்த சேலைகளின் அடுக்குகளும், எடைக்கற்களும், தராசும்... இன்னும் சாயப் பவுடர்களும், பிளாஸ்டிக் ஜரிகை, ஜரிகை ஜண்டிகளும் ஒழுங்காய் இருந்தன. கஞர் பாய் விரிக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலே சம்மணம் போட்டு உட்கார்ந்து எழுதுவற்கு தோதாக சிறிய ஒரு அடி உயரத்திலான மேஜையும் இருந்தது.

ராஜப்பா, இன்ஸ்பெக்டரின் அனுமதியின் பேரில், அடுக்கி வைக்கப்பட்டிருந்த பேரேடு களையும் சிட்டா நோட்டுகளையும் புரட்டிப் புரட்டிப் பார்த்தார். அதில் ஒன்றும் 'தடயம்' கிடைத்ததுபோல் இல்லை.

மர அலமாரி அது இது என்று எல்லா வற்றையும் புரட்டிப் பார்த்து நகர்த்தி வைத்துப் பார்த்ததிலும் ஒன்றுமே கிடைக் காமல் ஏமாற்றத்துடன் கடைசியாய் அந்த ஒரு அடி உயரத்திலிருந்த 'மேஜை'யைத் திறந்து பார்க்கும்போது லட்சுமி, சரஸ்வதி, விநாயகர் படம் ஒட்டிய உள்ளறையில் ஒரு கடிதம் நீட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்து, கையில் எடுத்து இன்ஸ்பெக்டரிடம் முன்பின் திருப்பிப் பார்த்துவிட்டுக் கொடுத்தார் ராஜப்பா. நான் காக மடித்து வைக்கப்பட்டிருந்த கடிதத்தின் மேற்புறமாக யாருடைய பெயரும் எழுதப்படாமல் இருந்தது.

இன்ஸ்பெக்டர் கடிதத்தைப் பிரித்துப் படித்தார். அவர் புருவங்கள் உயர்ந்ததையும் தன்னைப் பார்த்ததையும் ராஜப்பாவினால் பார்க்க முடிந்தது. படித்துவிட்டு ராஜப்பா விடம் கடிதத்தைக் கொடுத்தார் இன்ஸ் பெக்டர். அதை வாங்கிப் படிக்கும்போது ராஜப்பாவிற்கு பிரம்மை தட்டியதுபோல் இருந்தது.

'என்னுடைய தற்கொலைக்கு யாரும் காரண மில்லை. நானேதான் காரணம். இரண்டு மாதகாலமாக 'சொசைட்டி'யின் பணத்தை நான் சிறுகச் சிறுக எடுத்து, திண்டுக்கல்லில் ஒரு நண்பரின் பேச்சைக் கேட்டுப் 'பணம் ரெட்டிப்பு' விஷயத்தில் மோசம் போனேன். இன்னொரு நண்பரின் நிச்சயமான வார்த்தையை நம்பி, போனவாரம் சொசைட்டியிலிருந்து பத்தா யிரம் வரை எடுத்துக் கொண்டுபோய் அதையும் ஏமாந்து விட்டு விட்டேன்.

என் மகளுக்கு நல்ல இடத்தில் 'வரன்' கிடைத்ததாலும் அதைவிட முடியாமல்

அவர்களது சௌகரியத்திற்கேற்றபடி கேட்டதையும் மாப்பிள்ளைக்கு வாங்கித் தர வேண்டிய விஷயத்தைப் பூர்த்தி செய்யவும்தான் இந்தக் காரியத்தை நான் செய்தேன். யாரும் எனக்குத் தூண்டுதல் இல்லை. என் வீட்டில் யாருக்கும் இது தெரியாது. என் சிநேகிதர்களுக்கும் தெரியாது. என் தற்கொலைக்கு நான்தான்காரணம்.

இப்படிக்கு,
கேசவன்.

கடிதத்தில் கேசவன் எழுதியிருந்த விஷயங்கள் மனத்தில் ஆணியாய் இறங்கின. தன்னுடைய பால்ய சிநேகிதன் ஒருவன் இப்படியொரு ஈனத்தனமான காரியத்தைச் செய்ததை நினைத்தபோது மிகவும் சங்கடமாகிப் போனார் ராஜப்பா.

ராஜப்பா வெளியே வந்து, 'சொசைட்டிக்கு' முன் நின்று கொண்டிருந்த நாலு பெரிய மனிதர்களைக் கூப்பிட்டார் சாட்சிக்கு.

கேசவன் எழுதி வைத்திருந்த கடிதத்தின் பின்புறமாக 'சாட்சி'க் கையெழுத்தாக வாங்கினார் இன்ஸ்பெக்டர் முன்பாகவே.

பின்பு, எல்லோரும் வெளியே வந்தபின்பு இன்ஸ்பெக்டர் போலீஸ்காரரிடம் சொல்லி சொசைட்டிக்கு 'சீல்' வைக்கச் சொன்னார்.

'சொசைட்டிக்கு' இன்ஸ்பெக்டர் 'சீல்' வைக்கச் சொன்னதுதான் ராஜப்பாவிற்கு என்னமோ போலிருந்தது. 'சொசைட்டி' ஆரம்பித்ததிலிருந்து இதுபோன்ற எக்குத் தப்பான விஷயங்கள் நடந்ததேயில்லை.

இந்த நேரத்தில் இப்படியொரு வேண்டாத வேலை. அதுவும் தன்னுடைய சிநேகிதனால் உண்டாகிவிட்டதை மட்டும் அவரால் ஜீரணிக்க முடியவில்லை.

'சொசைட்டிக்கு' முன்புறமாய் புளியமரத்துக்குக் கீழே போடப்பட்டிருந்த 'சிமெண்ட்' பெஞ்சில் இன்ஸ்பெக்டர் உட்கார்ந்தவுடன் ராஜப்பாவும் ஒதுங்கி உட்கார்ந்து கொண்டு, அங்கிருந்த ஒரு ஆளைக் கூப்பிட்டு 'கலர்' இரண்டு வாங்கிவரச் சொன்னார்.

இன்ஸ்பெக்டர் ஊருக்குப் புதிது என்பதால், ஊரைப் பற்றிய விஷயங்களை எல்லாம் ஒவ்வொன்றாகத் தெளிவாகச் சொல்லிக் கொண்டிருந்தார். அப்படிச் சொல்லும்போது, அவருடைய பழைய கால வாழ்க்கையும் அந்தச் சம்பவங்களுடன் பின்னிப் பிணைந்து வருவதை அவரால் ரசிக்க முடிந்தது. சிலசமயம் தன் வாழ்க்கையின் சரிவுகளைச் சொல்ல வேண்டியிருந்த கட்டத்தில் முன்பு பேசிய விஷயங்களைப் போலவே எந்தவிதச் சலனமோ குரலில் ஏற்ற இறக்கமோ இல்லாமல் பேசியதைக் கவனித்த இன்ஸ்பெக்டர் ராஜப்பாவின் முகத்தை அதிசயமாகப் பார்த்தபோது, அவர் எதிர்ப்புறமாய் தூரத்தில் தெரிந்த 'சிறு மலை'த் தொடர்களை ஆர்வமாய் கவனித்தபடி இருந்தார்.

ஆள் வாங்கி வந்த 'கலர்' குடித்துவிட்டுக் கையில் கடிகாரத்தைப் பார்த்தபோது மணி மூன்றாகி விட்டிருந்தது. திண்டுக்கல் பாதையில் தன் பார்வையைப் படரவிட்டார் இன்ஸ்பெக்டர்.

ஆஸ்பத்திரி வேன் வந்து கேசவன் வீட்டிற்குப் போகும் ஒத்தையடிப் பாதைக்கு முன் நின்றபோது. எதிர்பார்த்திருந்த மாதிரி வீட்டுக்குப் போகின்ற வழியிலும் வீட்டுத் திண்ணைகளில் உட்கார்ந்து கொண்டும் கேசவனைப் பற்றி விஷயங்களைப் பேசிக் கொண்டிருந்தவர்களும் நெருக்கியடித்துக் கொண்டு ஒருவரையொருவர் முந்திக்கொண்டு வேன் பக்கமாய் போக எத்தனித்துக் கொண்டிருந்தனர். வீட்டிற்கு முன்பாக ஒரு சில பெரியவர்கள் மட்டும் திண்ணைப் பக்கமாக இரண்டு பெஞ்சுகளைப் போட்டுக் கேசவனின் சவத்தை, படுக்க வைக்கத் தயாராக இருந்ததுபோல இருந்தார்கள்.

ஒரு மாதிரியாய் எல்லாம் முடிந்து கட்டிவைத்திருந்த 'பாடையில்' சாவை வைக்க, ஊர்வலம் புறப்பட்டது. மயானத்திற்குப் போய்ச் சேரும்போது இருட்டிக் கொள்ள ஆரம்பித்தது.

ஏற்கனவே தயாராக 'விறகுகளால்' அடுக்கப்பட்டிருந்த மேடையில் 'கேசவனின் உடலை' நான்கு ஐந்து பேர் சேர்ந்து தூக்கிக் கொண்டு போய் வைத்தார்கள்.

ராஜப்பாவும் தன் சிநேகிதத்தின் பங்காக என்னென்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்து கொண்டிருந்தார். கூட்டத்தில் இருந்தவர்கள் ஒவ்வொருவராக வந்து கேசவனின் முகத்தைப் பார்த்துவிட்டுத் திரும்பினார்கள்.

'கொள்ளி' வைப்பவரைக் கூப்பிட்டான் பறையடித்தவன். கூட்டத்தில் யாரும் 'அந்தத் தகுதி'க்குப் பாத்தியப்பட்டவர்கள் இல்லையென்பது சில நிமிஷத்தில் தெரிந்துவிட்டது.

சுற்றும் முற்றும் பார்த்தார் ராஜப்பா. கூட்டத்தில் ஒருவரையொருவர் முகத்தைப் பார்த்துக் கொண்டனர். அந்தக் கூட்டத்தில் 'யார்' கேசவனுக்குக் கொள்ளி வைக்கப் போகிறார் என்ற ஆவல் எல்லோர் கண்களிலும் இருந்தது.

தன்னுடைய சிநேகிதத்தின் கடனாக இதைச் செய்வோமே என்று நினைத்தபடி 'சேகண்டி' ஊதியவனைப் பக்கமாகக்

கத்தரித்து ஒட்டியது — நாடோடி



ஒரு பெரிய செருப்புக் கடைக்குள் ஒருவர் நுழைந்தார். அங்கிருந்த ஒரு புது மாதிரிச் செருப்பை வாங்கிக் கொள்ளும்படி கடைக்காரர் சிபாரிசு செய்தார். அந்த செருப்பைப் பார்த்துவிட்டு, "இதைப் போட்டுக்கொண்டு எப்படி நடக்க முடியும்!" என்று செருப்பு வாங்க வந்தவர் கேட்டார்.

அதற்குக் கடைக்காரர், "எங்கள் கடைக்கு வருகிறவர்கள் யாரும் நடப்பவர்கள் அல்ல, காரில் செல்கிறவர்கள்" என்று பதில் அளித்தார். ●

*

"அரசியல்வாதிக்கு இருக்க வேண்டிய முக்கியமான குணம் என்ன" என்று ஒரு தடவை ஸர். வின்ஸ்டன் சர்ச்சிலைக் கேட்டார்கள். அதற்கு அவர் சொன்னார், "அரசியல்வாதிக்கு, நாளைக்கோ அடுத்த மாதமோ அல்லது அடுத்த வருடமோ என்ன நடக்கப் போகிறது என்று சொல்லத் தெரிந்திருக்க வேண்டும். அதோடுகூட பின்னால், அப்படி ஏன் நடக்கவில்லை என்று காரணமும் சொல்லத் தெரிந்திருக்க வேண்டும்" என்று.

"உங்களுக்கு உண்ண உணவு இல்லையா, பக்கத்து ஹோட்டலில் நுழைந்து கொள்ளையடியுங்கள்! உங்களுக்கு உடுத்திக் கொள்ள ஆடை இல்லையா, பக்கத்து ஜவுளிக் கடைக்குள் நுழைந்து கொள்ளையடியுங்கள்!" என்று சொல்லிக் கொண்டு போனார் ஒரு பொது உடைமைவாதி.

கடைசியில் பிரசங்கம் முடிந்து பார்த்தால் அவருடைய சைக்கிளைக் காணோம். அங்கு ஒரு காகிதம் கிடந்தது. அதில், "உங்கள் புத்திமதியின்படி சைக்கிள் இல்லாத நான் உங்கள் சைக்கிளைக் கொள்ளையடித்து விட்டேன்" என்று எழுதியிருந்தது!

யுத்தத்தில் தம் வலது காலை இழந்துவிட்ட ஒரு கடற்படை வீரருக்கு, அவருடைய சாகசம் காரணமாக கப்பற்படைத் தலைவர் வேலை கிடைத்தது. இழந்த காலுக்குப் பதில் ஒரு மரக் காலை வைத்துக் கொண்டு, இவர் தம் வேலையைக் கவனித்தார்.

ஒரு சமயம், ஒரு கடற்படைச் சண்டையில் ஒரு துப்பாக்கி ரவை இவர் வலது காலில் பாய, இவர் கீழே விழுந்தார்.

இதைக் கண்ட மற்ற வீரர்கள், "டாக்டரைக் கூப்பிடுங்கள்" என்று கூவினார்கள். இதைக் கேட்ட கப்பற்படைத் தலைவர், டாக்டர் வேண்டாம், ஒரு தச்சனைக் கூப்பிடுங்கள் என்றார்.

ஒருவரின் நன்மதிப்பைப் பெறுவதற்கு அவருடைய புத்திமதியின்படி நடக்க வேண்டும் என்பது அவசியமல்ல. அவர் புத்திமதியைக் காது கொடுத்துக் கேட்டால் போதும். ●

பிரார்த்தனை கடவுள் இருக்கும் இடத்திற்குப் பாதி தூரம் நம்மை எடுத்துச் செல்கிறது. உபவாசம் நம்மை அவர் மாளிகையின் வாயில்வரை கொண்டு சேர்க்கிறது. ஈகை நம்மை உள்ளே அழைத்துச் செல்கிறது. —திருக் குர்ஆன்.

கூப்பிட்டுத் தானே சிதைக்குத் 'தீ' வைப்பதாகச் சொன்னார்.

"இந்தாங்க சாமி தண்ணிகுடத்தைத் தோள் மேலே வச்சி மூணு தடவை சிதையைச் சுத்திட்டுத்தலைமாட்டுப் பக்கமாப் போய் நாலடி தூரம் போய், உடைச்சிட்டு வாங்க. அத்தாலே கொள்ளி வச்சிக்கலாம்' என்றான் 'சேவ்டி' அடித்து சங்கு ஊதி ஊர் சொன்னவன்.

அவன் சொன்னபடியே ராஜப்பா தோள்மீது தண்ணிக்குடம் சுமந்து மூன்று முறை சிதையைச் சுத்தி வந்து தலைமாட்டுப் பக்கமாய் சில அடி தள்ளிக் குடத்தைப் போட்டு உடைத்தார். கால்பக்கம் ஒருவர் 'கூடம்' கொளுத்தினார். பின்பு சீமத்தண்ணியில் நனைத்த பந்தத்தில் 'குழி' வெட்டியவன் பற்ற வைத்துத் தர, கால்பக்கம் என்று தொடங்கிச் சுற்றிலும் 'ஒன்பது குழி'யிலும் வரிசையாகத் தீ வைத்தார் ராஜப்பா.

புகை மெதுவாக எழுந்து பின் தீப்பொறி பறக்கக் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது.

ஒருமுறை எரிந்து கொண்டிருந்த சிதையைப் பார்த்த ராஜப்பா மயான வாசலின் வெளியே வந்து நின்றபோது தெருவிளக்குகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக எரிய ஆரம்பித்துக் கடைசியில் கண்ணுக்கு எட்டிய தூரம் விளக்குகள் எரிய ஆரம்பித்தன. (தொடரும்)

உரைநடைக் கம்பனிடம் ஒரு சில வினாக்கள்

தாயகத்தின் தலையான இலக்கியப் பரிசான தஞ்சைப் பல்கலைக்கழகப் பரிசைப் பெற்றவர். தமிழ் வளர்ச்சி இயக்கப் பரிசுகளைப் பெற்றவர். ஏராளமான இலக்கிய அமைப்புகளின் தாராளமான பரிசுகளைப் பெற்றவர். பட்டங்களைப் பெற்றவர்.

உரைநடைக் கம்பன், இலக்கியச் சாம்ராட், புதினப் பேரரசு டாக்டர் கோவி.மணி சேகரனை வித்தியாசமான எழுத்தாளர், வேலூரைச் சேர்ந்த எழுத்தாளர் என்ற காரணத்திற்காகக் கண்டு உரையாடியபோது இன்றைய தமிழிலக்கியத்தின் விகாசங்கள் தெரிந்தன; தெளிந்தன.



"வேலூரில் பிறந்ததற்காக நீங்கள் மகிழ்ச்சியடைகிறீர்களா?"

கேட்டு முடிக்கு முன்பே ஒரு சிம்மச் சிரிப்பு.

"தமிழகத்தில் பிறந்ததற்கே வெட்கப்படுகிறேன்".

"உங்கள் எழுத்துத்துறை அனுபவங்கள் பற்றி..." இழுத்தலுக்கு ஈடு கொடுப்பது போன்ற "ஹாங்... ம்... இது வரை நான் எழுதியவை பயிற்சியே! That is I am the student of the literary University. இனிமேல் எழுதப் போகும் அனுபவம்தான் எனக்குப் புதியதாய் இருக்குமென்று நினைக்கிறேன்" என்று என்னையே பார்த்தார்.

"இது அவையடக்கமான பதிலோ?"

"எதற்கும் அடங்காதவன் நான். நீங்கள் கேட்ட அவைக்குத்தானா அடங்கப் போகிறேன்? பொதுவில் எழுத்துலகம் இன்றும் வழக்கமான சிறுகதைகளை, தொடர்கதைகளைத்தான் வழங்கிக் கொண்டிருக்கிறது. அப்பாலும் இருக்கும் ஏதோ ஒன்றைத்தான் நான் தீவிரமாகத் தேடிக் கொண்டிருக்கிறேன். ஒரு சாதாரண மனித வாழ்க் →

கொஞ்சம்... கொஞ்சம்..!



பவானி

ஆணுக்குப் பெண் சமமாம்!
எதுவரை?
கடைகண்ணிக்குச் செல்லுவதில்
அலுவலகத்தில் உழைப்பதில்
சம்பளம் வாங்கி வருவதில்!
ஆனால் –
வீட்டு வேலைகள் செய்வதில்?
ஆண்களை
தண்ணீர் தெளிக்கவா சொல்கின்றோம்?
கோலம் போடவா சொல்கின்றோம்?
பத்துத் தேய்க்கவா சொல்கின்றோம்!
வீட்டில்
சின்னச் சின்ன வேலைகளை
ஆண்கள் செய்தால் என்ன?
பெண்ணுரிமை பேசும் ஆண்களே
கொஞ்சம் எண்ணிப் பாருங்கள்!

சாதி, மத வித்தியாசமின்றி அனாதைக் குழந்தைகளுக்காக 'தீனபந்து ஆண்ட்ரூஸ்' ஆசிரமத்தை வாலாஜாவில் தோற்றுவித்தவர் கே.ஆர். கல்யாணராமையர். விடுதலைக்காகப் போராடியவர்.

இவர் தாழ்த்தப்பட்டோருக்காகத் தன்னையே அர்ப்பணித்தவர் – பலமுறை சிறை சென்றவர். காமராஜருக்கு உதவியவர்.

☆

உபயதுல்லா வேலூரில் பிறந்தவர். சிறந்த தேச பக்தர். விடுதலை முழக்கமிட்டுச் சிறை சென்றவர். டில்லி ராஜ்யசபை உறுப்பினராய்த் தொண்டாற்றியவர். உலகத் தலைவர்களால் பெரிதும் புகழப்பட்டவர்.

☆

கையை யதார்த்தமாகச் சொல்லி விடுவதாலேயே அது இலக்கியமாகி விடாது. ஒரு அசாதாரணமான மனித வாழ்க்கையை அசாதாரணமான நோக்கில் அதீதக் கற்பனையானாலும் மன்னிக்கத்தக்கதே என்ற பார்வையில் ஒரு படைப்பு உருவாகுமானால் அந்தப் படைப்பை இலக்கியம் என்று நான் ஒப்புக் கொள்வேன்...

"இருப்பனவற்றை இருப்பன மாதிரியே எழுதி விடுவது யதார்த்தம் என்றால் அது எனக்கு உடன்பாடில்லை. அதற்கு எழுத்தாளர் தேவையில்லை. புகைப் படக் கடைக்காரர் போதும்..."

"வரலாற்று நவீனங்களுக்கு எதிர்காலம் உண்டா?"

மார்பின் அடர்முடியை வலது கைவிரல்களால் அளைந்தவாறு, "ஆயிரம் புதுமையான கம்ப்யூட்டர்கள் வந்தாலும் உலக வரலாறு இருக்கும் வரை வரலாற்று நவீனங்களுக்கு எதிர்காலம் இருந்துகொண்டே இருக்கும். சமூக எழுத்துலகில் புற்றீசல்கள் மாதிரி எழுத்தாளர்கள் தோன்றிக் கொண்டிருக்கிறார்களே... அப்படியா வரலாற்று எழுத்துலகில் அன்றாடம் எழுத்தாளர்கள் தோன்றிக் கொண்டிருக்கிறார்கள்? ஏதோ ஒண்ணே ஒண்ணு கண்ணே ரெண்டு மாதிரி நானும், விக்கிரமனும் இருக்கிறோம். எங்களுக்குப் பின்னால் கௌதம நீலாம்பரன், முகிலன், ராஜகுரு... இன்னும் நீட்ட முடியவில்லை. எங்கள் எண்ணிக்கை இவ்வளவுதான். எங்கள் உலகத்தில் ஒரு கை விரல்களுக்குள் நாங்கள் அடங்கியிருக்கிறோம். அதனால் எங்கள் எதிர்காலம் ஒளிமயமாகவே இருக்கும்" என்றார்.

"'யாகசாலை' ஒரு சமூக நாவல்தானே?"

"விருது பெற்ற அந்த நாவலில் அசாதாரணமும் அதீதமும் அடங்கியிருக்கின்றன".

"ஏழைகளின் கண்ணீரையும், பசியையும் நீங்கள் எழுதுவதில்லையே?"

ஒரு மாதிரியாய்ச் சிரிக்கிறார்.

"எழுத முடியும். எழுதலாம். அதில் வரும் சன்மானத்தைக் கொண்டு பிரியாணியோ, விஸ்கியோ சாப்பிட நான் விரும்பவில்லை".

"சாகித்ய அகாடமியும், ஞானபீடமும் ஏன் உங்களுக்குக் கிடைக்கவில்லை?"

"பெயர் அடிபட்டு, அடிபட்டது போலவே சிதைந்து போயிற்று. விருது கொடுப்பதற்கே பயப்படுகிறார்கள். விருது கொடுத்தபின் இங்கே விமர்சனங்கள் தலைவிரித்தாடுகின்றன. அதனால்தான் நான் தமிழ்நாட்டில் பிறந்ததற்கு வெட்கப்படுகிறேன் என்றேன்!"

"தமிழ் நாட்டில் பிறந்ததற்கே வெட்கப்படும் தாங்கள் ஏன் தமிழில் எழுதுகிறீர்கள்?"

"நான் பிரார்த்திப்பதே எந்த நாட்டில் பிறந்தாலும் தமிழ் ரத்தத்திற்குப் பிறக்க வேண்டுமென்று..."

"தமிழ் வேறு தமிழ் நாடு வேறா?"

"தமிழ் என்பது தூயது. தமிழ்நாடு என்பது அந்தத் தூயதை உணராத பேயது...!" என்கிறார் கண்ணாடிக்குள்ளிருக்கும் கண்களை உருட்டியவாறு.

"சமஸ்கிருதத்திற்கு நீங்கள் வக்காலத்து வாங்குவது பற்றி..."

"யாதும் மொழியே! யாவரும் விழியே!"

தனக்கே உரிய ஒரு சிம்மச் சிரிப்பைச் சிந்துகிறார். ००



அந்த இரவு

அ. குலசேகரன்



"டாக்டர் சார் கதவைத் தெறங்க சார்! டாக்டர் சார் தயவு பண்ணிக் கதவைத் தெறங்க சார்!" என்று உரக்க சத்தமிட்டுக் கொண்டு, அந்தத் தனியார் மருத்துவமனையின் கதவுகளைத் தடதடவென்று தட்டினார் அந்தக் குழந்தையின் தந்தை. கதவைத் திறந்த வேலைக்காரன், அவர்களைப் பார்த்தவுடன், "யாருப்பா அது. ஐயா தூங்கறாரு. இப்ப யாரும் அவரைப் பார்க்க முடியாது" என்று கதவுகளை மூடிக் கொண்டான்.

"ஐயோ! இப்ப நான் என்னா பண்ணுவேன், கண்ணா! என்னெ விட்டுட்டுப் போயிடாதேடா... என்னெ விட்டுட்டுப் போயிடாதேடா..." ஓவென்று ஓலமிட்டு அழும் ஒரு பெண் குரல் வெளியே கேட்டது.

விஸ்கி பாட்டிலைக் கையிலெடுத்த டாக்டர் அதை அப்படியே கீழே வைத்துவிட்டார். "சே! இந்த ஜனங்களுக்கு நேரங் காலமே தெரியறதில்லே" என்று வெறுப்பாகவும், சற்றுக் கோபமாகவும் கதவைத் திறந்தார்.

"ஏம்மா! என்னாச்சி குழந்தைக்கு!" ஆறுதலோடு கேட்டார் டாக்டர் சுதாகர். அந்தப் பேச்சில் கோபம் இல்லை. அனுதாபம் இருந்தது.

"மத்தியானத்திலிருந்து வயித்துப் போக்கு இருந்துச்சி டாக்டர். இப்போ கொழந்தைக்குப் பேச்சு மூச்சே இல்லே. நான் என்னா பண்ணுவேன்" அந்தத் தாய் மீண்டும் அழ ஆரம்பித்தாள்.

"கொழந்தையை உள்ளே தூக்கிட்டு வாம்மா" என்று கூறிய டாக்டர், உதவியாளர் இராமனை அழைத்தார். இராமன் அவர் முன் வந்து நின்றான்.

"ஊசி போடணும். ஹீட்டரை கவனி"

பிறக்கவும் இல்லை... இறக்கவும் இல்லை!

நான் ஏறவும் இல்லை
அதனால் இறங்கவும் இல்லை
இங்கேயே தங்கிவிட்டேன்!



நான் நிற்கவும் இல்லை
நிலை சாயவும் இல்லை
எனவே அமர்ந்து விட்டேன்!

நான் அமரவும் இல்லை
இடுப்பு நிமிரவும் இல்லை
எனவே படுத்துவிட்டேன்!

நான் படுக்கவும் இல்லை
கனவில் துடிக்கவும் இல்லை
எனவே மரித்து விட்டேன்!

நான் மரிக்கவும் இல்லை
எனவே பிறக்கவும் இல்லை
இறையில் இணைந்து விட்டேன்!

— மா. செல்வகுமார்

ஹீட்டர் கொதிக்க ஆரம்பித்தது. கொதிநீரிலிருந்து ஊசி எடுக்கப்பட்டு, சிரிஞ்சில் பொருத்தப்பட்டு, மருந்து ஏற்றப்பட்டது. குழந்தையை மேசையில் கிடத்தி, அதன் இடுப்பில், வலது பக்கத்தில் டாக்டர் ஊசி போட்டார். சற்று நேரத்துக்கெல்லாம் குழந்தை மெல்லக் கண்களைத் திறந்து பார்த்தது.

"குழந்தைக்கு உடனே டிரிப்ஸ் ஏத்தனும். ராமா டிரிப்ஸுக்கு வேண்டியதை எடுத்து வை."

இராமன் விரைந்து செயல்பட்டான்.

டிரிப்ஸ் பாட்டிலில் பிளாஸ்டிக் குழாயைப் பொருத்தி, அதில் ஊசியைச் செருகினார். குழந்தையை மேசையில் படுக்க வைத்து, "ஆடாம அப்படியே புடிச்சிக்கிங்க" என்று அதன் அப்பாவிடம் சொன்னார். பின்னர் குழந்தையின் வலது கையிலிருந்த நரம்பைத் தேடிப் பிடித்தார். நரம்பில் பொருத்தப்பட்ட ஊசியின் மூலம் சொட்டுச் சொட்டாகக் குழந்தையின் உடலில் டிரிப்ஸ் ஏற ஆரம்பித்தது. முதல் பாட்டில் முடிந்தது. அதை அகற்றிவிட்டு இரண்டாம் பாட்டிலைப் பொருத்திவிட்டு, சற்று நிம்மதியோடு டாக்டர் பேச ஆரம்பித்தார்.

"இன்னும் ஒரு கால் மணி நேரம் கழிச்சி வந்திருந்திங்கன்னா குழந்தையை உயிரோடு பார்த்திருக்க முடியாது."

அந்தக் கிராமத்தைச் சுற்றியுள்ள பத்து கிராமங்கள் வரையிலும் டாக்டருடைய புகழ் பரவியிருந்தது. இவ்வளவு இருந்தும் என்ன பயன்? அந்தப் போதைப் பழக்கம், அவருடைய புகழுக்குக் களங்கம் கற்பித்துக் கொண்டு நிற்கிறதே! மருத்துவக் கல்லூரியில் விளையாட்டாக ஆரம்பித்த பழக்கம் இன்றுவரை நீடிக்கிறது.

✦ ✦ ✦

காலை எட்டு மணிக்குத் திறந்தால் இரவு ஒன்பது மணி வரை 'கௌரி கிளினிக்' சுறுசுறுப்பாக இயங்கும். இரவு ஒன்பது மணிக்கு அதன் கதவுகள் மூடப்பட்டுவிடும். "ஐயா தூங்கறாரு" என்று வேலைக்காரன் கூறினால், மது அருந்திவிட்டு டாக்டர் மயக்க நிலையில் இருக்கிறார் என்று அர்த்தம். அந்தக் கிராமத்திலிருந்த அனைவருக்கும் இது நன்றாகத் தெரியும்.

✦ ✦ ✦

"**இ**ப்போ நீங்க போகலாம். இந்த மருந்தை மூன்று வேளைக்குக் குடுங்க. நொய் கஞ்சியைத் தவிர வேறெ எதுவும் தராதிங்க."

டாக்டரைப் பார்த்தார் குழந்தையின் தந்தை.

"என்னப்பா... என்ன வேணும்?".

"கடவுள் மாதிரி வந்து எங்க கொழந்தையைக் காப்பாத்தினிங்க. அதுக்கு நாங்க..." இழுத்தார்.

"உங்கக் கையிலே எவ்வளவு இருக்கு?".

தன் வேட்டியில் முடிந்து வைத்திருந்த பணத்தை எடுத்து டாக்டரிடம் நீட்டினார் அந்தக் குழந்தையின் தந்தை. அவரை

ஏற இறங்கப் பார்த்த டாக்டர் நான்கு பத்து ரூபாய் நோட்டு களை மட்டும் எடுத்துக் கொண்டு மீதியை அவரிடமே திருப்பிக் கொடுத்துவிட்டார்.

✦ ✦ ✦

டைனிங் டேபிள் முன் அமர்ந்த டாக்டர் மனத்தில் மகிழ்ச்சியும், தெம்பும் நிறைந் திருந்தது. வழக்கத்திற்கு மாறாக அன்று சற்று அதிக மாகவே அவர் சாப்பாடு சாப் பிட்டார். விஸ்கி பாட்டிலைத் தொடவே இல்லை. படுத்தவர் தூங்கவே இல்லை. எதைப் பற்றியோ ஆழமாகச் சிந்தித் துக் கொண்டிருந்தார். கடைசி யில் தீர்க்கமான ஒரு முடி வோடு உறங்கிப் போனார்.

காலையில் எழுந்து வேலைக் காரனை அழைத்து அந்த விஸ்கி பாட்டிலைக் கொடுத்து, "இதை அந்த பிராந்திக் கடை யில் கொடுத்து விட்டு வா!" என்றார் டாக்டர்.

அர்த்த புஷ்டியோடு வேலைக்காரன் அவரை உற்றுப் பார்த்தான்.

"நைட் நான் குடிச்சிருந் தேன்னா அந்தக் குழந்தையின் உயிரைக் காப்பாற்றியிருக்க முடியுமா?" என்று அவர் கேட்ட போது வேலைக்காரன் நெகிழ்ந்து போனான்.

மணிமாலை

க. இராமலிங்கம்

ஐ.பி.எஸ். டி.ஐ.ஜி



பெரியார் மாவட்டத்தி லுள்ள அலங்காரியூர் என்ற குக்கிராமம்தான் இப்போது சேலம், தருமபுரி, வடார்க்காடு அம்பேத்கர், திருவண்ணா மலை சம்புவரையர் ஆகிய நான்கு மாவட்டங்களுக்கும் மாநிலக் காவல்துறை துணைத் தலைவராய்ப் பணியாற்றும் கு. இராமலிங்கம் ஐ.பி.எஸ். பிறப் பிடம்.

நான்கு மாவட்டங்களி லிருக்கும் காவல் துறையினரை மேற்பார்வையிடுதல், ஆய்வு செய்தல், அறிவுரை கூறுதல், கூட்டம் ஒழுங்கு காத்தல், பெரிய பிரச்னைகளைத் தீர்த்தல், சாதி, மதக் கலவரங்கள் எழா மலிருக்கச் செய்தல் போன்ற வற்றில் முழுக்கவனம் செலுத்து வதே துணைத் தலைவர் பதவியின் முக்கிய பணிகள்.

"காவல்துறை என்பதே கடினமானது. பொறுப்புச் சுமைகள் மிக்கது. வீதிப் பிரச்னையில்கூட விவேகத் தைப் பயன்படுத்த வேண்டிய அவசியமுள்ளது" என்று கூறும் இவர், இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் பொருளாதார வளர்ச்சி குன்றியிருப்பதால் தகராறுகள் அதிகமாய்க் காணப்படுவதைச் சுட்டுகிறார். கமுதி, முதுகுளத்தூர் போன்ற இடங்களில் தனக்கேற்பட்ட பல அனுபவங்களை அடுக்குகிறார்.

1978 – 80 களில் வேலூரில் மாவட்ட காவல்துறைக் கண் காணிப்பாளராயிருந்தபோது சந்தித்த மதக் கலவரத்தை, விவசாயப் போராட்டத்தை, நக்சலைட் பயங்கரவாதங்களை, வேலூர் ஜலகண்டேஸ்வரர் ஆலயத்தில் லிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்ட நிகழ்ச்சியை, அதையொட்டி நடந்த பொது மக்களின் பேரார்வ ஆர வாரத்தை இன்றும் மறக்க முடியவில்லை என்கிறார் இவர்.

"சாட்சி, தகவல் கூறுதல் போன்றவற்றில் காவல் துறை யினருடன் பொதுமக்கள் மேலும் ஒத்துழைக்க வேண்டும். அப் போதுதான் தற்போது 4000க்கும் மேற்பட்ட கொடிய குற்றங்கள் தேங்கியிருக்கின்ற நிலை ஒழியும். பொருட் குற்றங்கள், உடலுக்கு ஊறு விளைவிக்கும் குற்றங்கள் அழியும்..." என்று உருக்கமாய்ச் சொல்லுகிறார்.

காவலர்கள் எண்ணிக் கையைக் குறைத்து அலு வலர்கள் எண்ணிக்கையைக் கூட்டுதல் நல்லதாம். இத் துறை யினருக்குச் சுதந்திரம் மேலும் அவசியமாம். அதே சமயம் இத்துறையினர் பொது மக்க ளின் நம்பிக்கைக்குப் பாத்திர மானவர்களாய் நடக்க வேண்டு மாம்...

22 ஆண்டுகளாகக் காவல் துறையில் பணியாற்றுகிறார் இவர்.

தொடர்ந்து எந்தச் சூழலிலும் தன் கொள்கைகளிலிருந்து மாறாமல் தரத்தைக் காத்து வருவதில் தன்னிகரற்றது 'அமுதசுரபி' என்கிறார். டி.ஐ.ஜி. கு. இராமலிங்கம் ஐ.பி.எஸ்.



அருட்திரு. ஜான்வளர்காட்

பள்ளிகளின் மேலாளர்

கேரளாவைச் சேர்ந்த சேம்ப் லேன் கிராமத்தில் பிறந்தவர். வடார்க்காடு மாவட்டம் மற்றும் திருவண்ணாமலை சம்புவரையர் மாவட்டங்களிலுள்ள ஆர்.சி.எம். பள்ளிகளின் மேலாளர்; பாதிரியார். 10 ஆண்டுகளாக இப்பதவியில் உள்ளார் இவர்.

தன் மேலாண்மையின் கீழ் பணியாற்றும் 550 ஆசிரியர்களைத் தன் கண்களாகக் கருதி உதவிகள் பல புரிகிறார்.

ஆசிரியர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த மொபட், டி.வி., கிரைண்டர் போன்றவற்றைச் சுலபத் தவணைகளில் வாங்கித் தருகிறார். வீடு கட்டு திட்டமொன்றை ஆரம்பித்து 103 ஆசிரியர்கள் சொந்த வீட்டில் வாழ வழி அமைத்திருக்கிறார்.

ஆசிரியர்களுக்கு அரசு தரும் சலுகைகளைத் தவறாமல் பெற்றுத் தருவதிலும் தீவிரம் காட்டுகிறார்.

"தரமான கல்வி, உயர்ந்த ஒழுக்கம், சிறந்த சேவை இவையே எங்கள் பள்ளிகளின் தாரக மந்திரங்கள்" என்கிறார் இவர்.

சூரியனில் தீக்குளித்து...

—தமிழ்க்கனல்



சூரியனில் தீக்கு ளித்துச்
சுடர்ந்து வந்தவன் நான்! இங்கு
யாரிடமும் வாழ்வுக் காக
அடிப ணியேன் நான்!

விலங்கை வெட்டி நீட்டியதனில்
வேல்அடித் தவன் நான்! ஒளி
துலங்குகின்ற பதவிக் கூட்டில்
சுருண்டு கொளேன் நான்!

சீற்றரவின் நஞ்சை ஏற்றுச்
செரித்து வைத்தவன் நான்! எனையே
மாற்றியொரு விலைக்கு வாங்க
மயங்கி விடேன் நான்!

கொலு பொம்மைகள்!

—அ. இராணி

மானே மாடாய் உழைக்கிறது
மனைக்குப் பொருளைச் சேர்க்கிறது
மானை மானாய் நடத்தாமல்
மாடாய் நடத்தல் முறைதானோ?



கிளியைக் கூட்டில் அடைக்கின்றீர்!
கிளிஜோ சியமும் சொல்கின்றீர்!
கிளியால் பொருளைச் சேர்க்கின்றீர்!
கிளியின் உரிமை மறுக்கின்றீர்!

பெண்ணை ஆணுக் கிணையாகப்
பொருளைச் சேர்க்கச் செய்கின்றீர்!
பெண்ணைப் பெண்ணாய் நடத்தாமல்
பேசும் உரிமை மறுக்கின்றீர்!

அலுவ லகத்தில் பணிச்சுமைகள்
அகத்தில் கூடப் பணிச்சுமைகள்!
கொலுபொம் மைபோல் இருக்கும் ஆண்
கொஞ்சம் உதவி செய்தால் என்?



கோட்டைகள்

வாழ்ந்த கதைகள் சொல்லும் வடார்க்காடு அம்பேத்கர் மாவட்டக் கோட்டைகளில் எழில் கொஞ்சும் கோட்டை வேலூர்க் கோட்டை.

ஆழமும் அகலமும் கொண்ட அகழி இக்கோட்டையைச் சுற்றி உள்ளது.

சதுர வடிவம் கொண்டது. மேல்தளம், கீழ்த்தளம் கொண்டது. மேல் தளத்தில் ஒரு வாகனம் பயணிக்கத் தக்க நீண்ட மதில் உள்ளது. கிழக்குத் திசையைப் பார்த்த பிரதான வாயிலும், தெற்குத் திசையைப் பார்த்த சிறிய வாயிலும் கொண்டது.

பூசையும், புனஸ்காரமும் இனிதே நிறைவேறும் ஜலகண்டேஸ்வரர் கோயில் காணத் தக்க ஒன்று.

இக்கோயிலினுள் அதி அற்புதமான நானூறுக்கும் மேற்பட்ட சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த கல்யாண மண்டபம் உள்ளது.

இக்கோயிலிலிருந்து மார்க்கபந்தீஸ்வரர் குடியிருக்கும் திருவிரிஞ்சிபுரம் கோயிலுக்குச் சுரங்கப்பாதை ஒன்றுள்ளது.

நவாப் தாவூத்கான் கட்டிய ஆர்க்காடுக் கோட்டை மிகவும் சிதலமடைந்த நிலையில் உள்ளது. டெல்லிகேட், பச்சை மசூதி, இரண்டு குளங்கள், இன்னொரு மசூதி போன்றவையே எஞ்சி நிற்கும் கோட்டைப் பகுதி.

ஆங்கிலேயரின் அட்டகாசமான ஆர்க்காட்டு வீரர் ராபர்ட் கிளைவ் இக்கோட்டையில் தான் கொடி கட்டிப் பறந்தார்.

நீவா ஆற்றங்கரையில் இராணிப் பேட்டைக்கருகில் உள்ளது திருவலம். சோழன் வந்தியத் தேவனின் தலைநகரமாய் விளங்கியது இது. இங்கிருந்த கோட்டை சீரழிந்து போயிற்று.

பத்தாம் நூற்றாண்டில் பிரசித்தம் பெற்றிருந்த இக்கோட்டை இப்போது முற்றிலும் அழிந்து போய்விட்டது.

வள்ளிமலைக்கருகே மகிமண்டலத்தில் பெரிய பெரிய மதில் சுவர்களால் ஆன ஒரு கோட்டை உள்ளது.

ஆண்மையூர் என்றழைக்கப்பட்டது இப்போது ஆம்பூர் ஆகியுள்ளது. இவ்வூர்க் கோட்டை பாலாற்றின் தென்கரையில் உள்ளது.

ஆங்கிலப் படைகளை அதிரடித்தது; எளிதில் ஏற முடியாத இக்கோட்டை.

வேலூருக்குக் கிழக்குப் பகுதியில் மலைகளில் அமைந்துள்ள கோட்டைகள் மூன்றும் மராத்தியர்களால் கட்டப்பட்டவை.

◆ வேலூருக்கு மேற்கே பதின்மூன்றாவது கி.மீட்டர் தூரத்தில் உள்ளது விரிஞ்சிபுரம். இங்குள்ள சிவன் சுயம்பு. பிற்காலச் சோழர் காலத்தில் கட்டப்பட்டது இக்கோயில். சிவநேசன் எனும் வணிகனுக்குத் துணையாகச் சிவன் போனார் என்பது வரலாறு. மூன்று பிராகாரங்கள். உயரமான இராஜகோபுரம். கார்த்திகைக் கடை ஞாயிறன்று இங்குள்ள சிம்மக் குளத்தில் மூழ்கிக் கனவு வரும்வரை காத்திருந்து பலன் பெறுகிறார்கள் பிள்ளைப் பேறற்ற பெண்கள். மாவட்டத்திலேயே மிக உயரமான மதில்களைக் கொண்ட கோயில் இது.

திருப்பத்தூருக்குக் கிழக்குப் பகுதியில் 2500 அடி உயரம் உள்ள சந்தனம் மணக்கும் ஜவ்வாது மலை, திருப்பத்தூருக்கருகிலுள்ள ஏழைகளின் ஊட்டி ஏலகிரி மலை ஆகியவை பிரசித்தி பெற்றவை.

★

அந்த ஆட்டுக்குட்டி வீட்டிற்கு எதிரிலிருக்கும் மைதானத்தில் மேய்ந்து, துள்ளிக் குதித்து விளையாடும். அங்கிருக்கும் குழந்தைகளும் அதனுடன் விளையாடுவார்கள். அனிதா "ம்மே... ம்மே" என்று குரல் கொடுத்தால் போதும், மைதானத்தைவிட்டு, தெருவின் 'றுக்கே பாய்ந்து வேகமாய் ஓடிவரும். அனிதாவின் கை, கால்களை முகத்தால் தேய்த்துத் தேய்த்து, மெல்ல முட்டும். அனிதாவும் அதன் முகம், கழுத்து, முதுகு ஆகிய இடங்களை வருடி விடுவாள்.

பொழுது சாய்ந்தவுடன், தெருத் திண்ணையில் ஓரமாய் தினமும் வந்து படுத்துத் தூங்கும். ஆட்டுக்குச் சொந்தக்காரி சகுந்தலாம்மா ஆட்டைத் தேடிக் கொண்டு வருவாள். அவள் ஆட்டைத் தூக்கிக் கொண்டு போக முயற்சித்தாலும், கையிலிருந்து திமிறிக் கீழே இறங்கி ஓடி மீண்டும் திண்ணையில் போய்ப் படுத்துக் கொள்ளும். சகுந்தலாம்மாவிற்குக் குட்டியின் மீது கோபம் கோபமாக வரும். சரி, கிடக்கட்டுமென்று சலித்துக் கொண்டு, "அனிதா... அனிதா" என்பாள். அனிதா "என்னக்கா கூப்பிட்டீங்களா?" என்பாள்.

"ஏண்டி, ஆட்டுக்குட்டிக்கு என்னடி மந்திரம் போட்டே? உன்ன விட்டுப் பிரிஞ்சி எங்க வீட்டுக்கு வரவே மாட்டேங்குது."

"ஒண்ணுமில்லக்கா, ஆட்டுக் குட்டியோட தினமும் கொஞ்ச நேரம் விளையாடுவேன். நான் சாப்பிட்ட பின்னால அதுக்குக் கொஞ்சம் சோறு போடுவேன். வீட்லே கீரை வாங்கினா அம்மாவுக்குத் தெரியாம அதுக்குக் கொடுப்பேன். அதனாலே எங்கிட்டே அதுக்கு ரொம்பப் பிரியம்."

"என்னமோம்மா, ஆட்டைப் பத்திரமாப் பாத்துக்கோ. நான் வீட்டுக்குப் போய் வர்றேன்" என்று புறப்பட்டுவிடுவாள்.


இரண்டு மாதம் கழிந்து ஒருநாள் சகுந்தலாம்மாள் வீட்டுக்கு வந்தாள். அப்பொழுது அனிதா, அப்பாவிடம் அறிவியல் பாடத்தில் சந்தேகங்களைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"வாங்கக்கா, என்ன வேணும், சொல்லுங்க!" என்றாள் அனிதா.

"அனிதாக்கண்ணு, ஆட்டுக்குட்டி உன்னோட ரொம்பப் பிரியமா, பாசத்தோட பழகிக்கிட்டிருக்கு. அதை உங்கிட்டிருந்து பிரிக்கவே மனசு வரலே. நாங்க ஏழைங்க. இப்ப ஒரு மாசமா வேலையே சரியா இல்லே. ரொம்பக் கஷ்டம். ஆட்டுக் குட்டிய விக்கலான்னு..."

நேசம்

ந.க. துறைவன்



கே. ஆர். கமலநாதன்
(ஓய்வு டி.எஸ்.பி)



"ஒருவர் என்னிடம் நியாயம் கிடைக்கவில்லையென்று திரும்பினால் அவருக்கு யாரிடமும் நியாயம் கிடைக்காது" என்ற குறிக்கோளுடன் காவல் துறையில் 14 ஆண்டுகள் சப் இன்ஸ்பெக்டராகவும், 12 ஆண்டுகள் இன்ஸ்பெக்டராகவும், 11 ஆண்டுகள் டி.எஸ்.பி. யாகவும் பணியாற்றி சமீபத்தில் ஓய்வு பெற்றிருக்கிறார் கே.ஆர். கமலநாதன்.

இவருடைய பரம்பரையே நாட்டுக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட பரம்பரை. இவருடைய தாத்தா சுபேதார் பரசுராமன், தந்தை சுபேதார் மேஜர் ரத்தினம். இவருக்கும் இராணுவத்தில் சேரத்தான் ஆசையாயிருந்ததாம். காவல் துறையும் நாட்டுக்குச் சேவை செய்கின்ற ஒன்றுதானே என்று சேர்ந்தாராம்.

1982ஆம் ஆண்டில் காஞ்சி மாமுனி ஸ்ரீஜெயேந்திரர் தஞ்சை மாவட்டத்திற்குள் பிரவேசிப்பதைக் குறிப்பிட்ட ஒரு சாரார் விரும்பவில்லை. தீவிரமாய் எதிர்த்தார்கள். அந்த விடிகாலைப் பொழுதில் எதிர்ப்பாளர்களைத் துச்சமென மதித்து அவதாரப் புருஷரை தஞ்சைக்குள் பிரவேசிக்கச் செய்த அந்த மெய்சிலிர்க்கும் நிகழ்ச்சி வாழ்நாளில் என்றும் மறக்க முடியாதது என்கிறார் அப்போது அங்கே டி.எஸ்.பி. யாக இருந்த இவர்.

"சேவை உணர்ச்சி வேண்டும். மக்களுக்கு உண்மையாக உழைக்க வேண்டும். அவர்களின் உடைமைகளுக்கும், உயிர்களுக்கும் நாம்தான் பொறுப்பு என்ற பொறுப்பு வேண்டும்" என்று காவல் துறைக்கு ஆலோசனை கூறுகிறார்.

முதியோர் கல்வி, தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, பொதுத் தொண்டு போன்றவற்றில் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளார் இந்த ஓய்வு பெற்ற டி.எஸ்.பி.

◆ தமிழ்நாடு வெடி மருந்துத் தொழிற்சாலை காட்பாடிக் கருகில் 1986 பிப்ரவரி 9ஆம் நாள், 750 ஏக்கர் நிலப்பரப்பில் தொடங்கப்பட்டது. சுமார் 1200 பேர் இதில் பணியாற்றுகின்றனர்.

"மாட்டேன்... மாட்டேன்... குட்டியத் தூக்கிட்டுப் போகவிட மாட்டேன். அத இங்க வித்துட்டிங்கன்னா வாங்குறவன் வெட்டிக் கறியாக்கி வித்திடுவான். அப்புறமா என்னோட பிரியமா, சந்தோஷமா விளையாடின குட்டிய பார்க்கவே முடியாது" என்று சகுந்தலா அம்மாவைப் பார்த்துச் சொல்லிவிட்டு, விம்மி விம்மி அழத் தொடங்கினாள் அனிதா.

அனிதா அழுவதைப் பார்த்த சகுந்தலாம்மா மிகவும் வேதனைப்பட்டாள். சிறிது நேரம் யோசித்துவிட்டு, "அனிதா நாளைக்கு நான் வர்றேன். பொறுமையா யோசிச்சி பதில் சொல்லு" என்று வீட்டிற்குப் புறப்பட்டாள்.

அனிதா அன்று ராத்திரி முழுவதும் அழுதுகொண்டே இருந்தாள். காலையில் சகுந்தலாம்மாவைப் பார்த்தாள். உடனே அழ ஆரம்பித்து விட்டாள்.

"அழாதேம்மா, குழந்தெ! ஆட்டுக்குட்டியத் தூக்கிட்டுப் போகட்டுமா? சொல்லும்மா?" என்று அனிதாவிடம் கேட்டாள் சகுந்தலாம்மா.


அழுவதை நிறுத்திக் கண்களைத் துடைத்துக் கொண்ட அனிதா உள்ளே சென்றாள். சிறிது நேரம் கழித்துத் திரும்பி வந்தாள்.

"அக்கா... அக்கா... ஆட்டுக் குட்டிய எங்கிட்டிருந்து பிரிச்சிடாதீங்க. எவ்வளவு பணத்திற்கு விக்கப் போறீங்கன்னு சொல்லுங்க? அந்தப் பணத்தை நான் தந்துர்றேன்." சேமித்து வைத்திருந்த பணத்தை நீட்டினாள்.

அனிதா ஆட்டுக்குட்டியின் மீது வைத்திருந்த பிரியமும், பாசமும், சகுந்தலாம்மாவை மெய்சிலிர்க்க வைத்தது. என்ன சொல்வது என்று புரியாமல், தெரியாமல் தவித்தாள்.

"அனிதா, உன்னோட பாசத்துக்கு முன்னாலே நான் தோத்துட்டேம்மா. உன் காசு பணமெல்லாம் எனக்கு வேண்டாம். உன் அன்பு ஒண்ணே போதும்மா. ஆட்டுக்குட்டிய நீயே வளர்த்துக்க. இனிமே, நான் வந்து கேட்கவே மாட்டேன். நீ அழாதே. எப்பவும் போலப் பிரியமா குட்டியோட விளையாடிக்கிட்டிரு." கண்களில் துளிர்த்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு புறப்பட்டாள் சகுந்தலாம்மாள்.

ஜே.வி.நாதன்



"இன்னா தெகிரியம் இருந்தா இப்டிப் பண்ணு வான்? இன்னிக்கு ரெண்டுல ஒன்னு பாத்துடறேன்..." – வீரா வேசமாக உறுமினார் ரங்க சாமி.

"வேணாம்பா விடுங்க. என்னிக்கு என்னைப் புடிக்காம வேற ஓர்த்தியைக் கல்யாணம் கட்டிக்க அவரு மனசு துணிஞ் சுடுச்சோ, அதுக்கு மேல அவரைக் கட்டாயப் படுத்தி... உம்... எந் தலையெழுத்து, விட்டுடுங்க...!" என்று கண்ணீர் வடித்தபடி மகள் மல்லிகா அவருடன் நடந்தாள்.

"விட்டுட்றதா? நீ வாம்மா, பாத்துப்புடறேன். மனசில இன்னா நென்சினு கீரான் அவன்?"

அந்த வீட்டு வாசலில் போய் நின்று கத்தினார் ரங்கசாமி. "டேய் சம்முவம்! வெளில வாடா!"

அக்கம் பக்கத்து வீட்டு வாசல்களில் மனிதர்கள் முளைத்தார்கள்.


"இன்னா கெயவா, கல்ட்டா பண்ண வந்திருக்கியா...?" என்றபடி வெளியே வந்தான் சண்முகம். இவளைப் பார்த் ததும் "இன்னாம்மே உன் அப்பன்காரன் இன்னா உனக்கு வக்காலத்தா?"

கிழவர் அவனை நெருங்கி அவன் சட்டையைப் பிடித்தார். "எம் பொண்ணுக்கு இன்னாடா கொறை? ரதி மாதிரி கீறா. நீ வெறும் பயலா இருந்தும் உனக்கு எம் பென்ஷன், கிரா ஜுட்டி ரூபாயில கல்யாணம் பண்ணி வெச்சேனேடா – இப்ப அவளை உட்டுட்டு வேற ஒரு கல்யாணம் பண்ணிகினியாமே – இன்னா நெஞ்சுத் துணிச்சல்?" படபடப்பில் வார்த்தைகள் தடுமாறின.

கிழவரின் நெஞ்சில் கை வைத்துச் சண்முகம் ஒங்கித் தள்ள நடுத்தெருவுக்குப் போய் அலங்க மலங்க விழுந்தார் அவர். மல்லிகாவின் கையை முறுக்கிக் கன்னத்தில் ஒரு அறை விட்டான் சண்முகம்!


உள்ளிருந்து ஒரு பெண்ணின் முகம் எட்டிப் பார்த்தது. புதுத் தாலிச் சரடு பளபளக்க நின்ற தன் சக்களத்தியைப் பார்க்க மல்லிகாவின் மனசில் நெருப்பு குபீரிட்டது. "உனக்கு அந்தச் செல்லியம்மன்தான் கூலி கொடுக்கணும்!" என்று சபித் தாள்.

"தோ பாரு கெயவா நீயில்லை – எந்தக் கொம்பன்



வந்தாலும் என்னை அசைச் சுக்க முடியாது - போய் வேலையைப் பாரு..."


"வாம்மா, தாணாக்காரங்க கிட்டே போய்ப் பிராது கொடுக்கலாம்..."



சண்முகம் சிரித்தான். "போலீசுக்கா போறே போ போ!"

சண்முகத்தின் சொந்தக் காரர் ஒருவர் போலீஸ்காரராக உள்ளூரில் இருக்கும் மமதையில் அவன் பேசுவது மல்லிகா வுக்குப் புரிந்தது.

அக்கம் பக்கத்தில் உள்ள வர்களுக்குச் சண்முகத்தின் அக்கிரமம் தெரிந்தும் புரிந்தும் வாயைத் திறக்கப் பயம். 'பயில் வான்' என்று பெயரெடுத்தவன் அவன். உடற்பயிற்சிக் கூடம் ஒன்று வைத்திருந்தான். அதில் அவனுடைய சகாக்கள் நிறைய பேர் உள்ளனர். மல்லிகாவைச் சண்முகம் மணந்த ஆறு மாதத் திலேயே வெளியூருக்குச் சென்று வேறு ஒரு பெண்ணை மணந்து கொண்டு திரும்பியதை யும், மல்லிகாவை அடித்து விரட்டியதையும், இப்போது நியாயம் கேட்டு வந்த மல்லிகா வின் தகப்பனாரை நடுத் தெரு வில் பிடித்துத் தள்ளியதையும் பார்த்து மௌன சாட்சிகளாக நிற்கவே அவர்களால் முடிந் தது.



அப்பாவிடம், "மனசு சரி யில்லை. நீங்க முதல்ல ஊருக்குப் போங்கப்பா. என் தோழி ராமாயி வீட்டுக்குப் போயிட்டு அடுத்த பஸ்சில் வர்றேன்!" என்றாள் மல்லிகா. "சீக்கிரம் வந்து சேரும்மா..." என்றவர் அலுப்புடன் டவுன் பஸ்சில் ஏறினார்.

ராமாயி வீட்டுக்குப் போனாள். "இன்னாடி மல் லிகா சொல்றான், உம் புருசன்?" என்று கேட்டாள் ராமாயி.

"சொல்றாரு சுரைக்காய்க்கு உப்பு இல்லைன்னு. விடக்கா. ஆங்... ரேசன் கடையில கிஸ்னா யில் வாங்கி வைக்கச்

சொல்லிப் போனவாரம் பணம் கொடுத்தனுப்பிச்சேனே – வாங்கியாச்சாக்கா?"

"அப்பவே வாங்கியாச்சுடீ மல்லிகா. உனக்கு கிஸ்னாயில் கஷ்டம் எப்போ தீருமோ?"

"வர்றேங்கா... டவுன் பஸ் பூடும்". மண்ணெண்ணெய் கேனை எடுத்துக் கொண்டு பஸ் ஸ்டாப் பக்கம் போனாள். பஸ் வர நேரம் இருந்தது.

ஐம்பதடித் தொலைவில் பூட்டிக் கிடந்த இடிபாடடைந்த வீட்டின் பின்புறம் ஒதுங்கினாள். யாரும் பார்க்காதபடி மொத்த மண்ணெண்ணெயையும் தன் உடம்பில் ஊற்றிக் கொண்டாள். பத்திரமாகக் கைப்பையில் வைத்திருந்த தீப்பெட்டியை எடுத்துக்கொண்டு தூரத்தில் பார்த்தாள். பஸ் ஸ்டாப்பை ஒட்டி ஒரு சிவப்புக் கட்டடம்தெரிந்தது.

தீக்குச்சி சுடர் விட்டது. குபீரென்று ஜ்வாலை.

தபதபவென்று ஓடினாள்.

வாசலில் புல்லட் மோட்டர் சைக்கிள். உள்ளிருந்து வந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் அதில் ஏறப்போனவர், "ஐயோ!" என்ற கதறலைக் கேட்டுத் திரும்பி, தீ எரிய எரிய ஓடிவரும் மல்லிகாவைப் பார்த்து அதிர்ந்தார். "ஒன் நாட் எயிட்! செவன் ஜீரோ த்ரீ! ஓடியாங்கய்யா! ஓடியாங்கய்யா!" என்று கத்தினார்

கோணிச்சாக்கு கொண்டு வரப்பட்டு மல்லிகாவைச் சுற்றி உருட்டி தீ அணைக்கப்பட்டது. இருந்தாலும் தீ தன் கொடிய நாக்குகளால் அவளை வேக வைத்து விட்டிருந்தது.

மருத்துவமனை செல்ல டாக்ஸி பிடித்து வருமாறு உத்தரவுகள் பிறப்பித்தார் இன்ஸ்பெக்டர். கூட்டம் எராளமாகக் கூடிவிட்டது.

"என்னம்மா ஆச்சு...? என்ன நடந்தது?" இன்ஸ்பெக்டர் கேட்டார் – ஒரு தாளைப் பிரித்து வைத்துக் கொண்டு.

சுற்றிலும் போலீஸ்காரர்களும், அக்கம் பக்கத்துப் பெட்டிக் கடைக்காரர்களும் பொதுமனிதர்களும் சாட்சியமாக இருக்க மல்லிகா கஷ்டப்பட்டுத் தன் வாக்குமூலத்தை அளித்தாள்.

"என் சுயநினைவோடு சொல்றேன்யா. எம்புருசன் மேலத் தெருவுல உடற்பயிற்சிக் கூடம் வெச்சிருக்கும் கல்யாண ஆசாரி மகன் சண்முகம், என்னை ஆறு மாசத்துக்கு முந்தி கல்யாணம் செய்துக்கிட்டாரு. அப்பப்ப எங்கப்பா வீட்டுலேர்ந்து 5000 ரூபா கொண்டு வா, 10,000 ரூபா கொண்டு வா, கடை வைக்கணும்னு இம்சை பண்ணுவாரு எங்கப்பா ரிட்டயர்டு பள்ளிகூட வாத்தியாரு. பணவசதி ஏதுமில்லீங்கய்யா. போன வாரம் வெளியூருக்குப் போய் வேற ஒருத்தியைக் கல்யாணம் பண்ணி வீட்டுக்குள் கொணாந்து வெச்சுகினு என்னை வெரட்டிப்புட்டாரு. இன்னிக்கு நியாயம் கேக்க வந்த எங்கப்பாவை அடிச்சுப் போட்டாரு. எங்கப்பா வீட்டுக்குப் போகலாம்னு போனவாரம் வாங்கி வெச்ச கிஸ்னாயில் கேனை எடுத்துக்கினு பஸ் ஸ்டாப்புக்குப் போய்கினு இருந்தப்ப அவரு – சம்முவம் – வந்து வழி மறிச்சு கிஸ்னாயில் கேனைப் பிடுங்கி எம்மேல கொட்டி, தீ வைச்சுப்புட்டு, "என்னை எந்தக் கொம்பனாலயும் அசைக்க முடியாதுடி..."ன்னு சவால் விட்டுட்டுப் போயிட்டாருங்க... திரும்பிப் பார்த்தேன். டேசன் தெரிஞ்சுச்சு. ஓடியாந்தேன். நான் செத்துப்போனா அதுக்கு முழுக்காரணமும் சண்முகம் – என் புருசன்தாங்க.."

– இதற்கு மேல் பேச முடியாமல் மயக்கத்தில் கண் மூடினாள் மல்லிகா. இன்ஸ்பெக்டர் தான் எழுதிய மல்லிகாவின் வாக்குமூல அறிக்கையில் அங்கு நின்றவர்களிடம் சாட்சிக் கையெழுத்துகளை வாங்கத் தொடங்கினார்.

எம். கே. இராமசாமி

விடுதலை வீரர்

வேலூரில் வாழும் இவர் 'வெள்ளையனே வெளியேறு' என்று வீர முழக்கம் செய்து சிறை சென்றவர். வேலூர்ச் சிறையில் கல்லுடைத்தவர். அலிபுரம் சிறையில் அவதிகள் பட்டவர். காந்தி யடிகளை நேரில் கண்டு 'செய் அல்லது செத்து மடி' என்ற



மணிமாலை

கொள்கைக்குக் குரல் கொடுத்தவர். காமராஜர், உபயதுல்லாவுக்கு மிகவும் நெருக்கமாயிருந்தவர்.

1939 ஆம் ஆண்டிலிருந்தே விடுதலை இயக்கத்தில் பங்கேற்றவர்.

'ஜமதக்னி'தான் இவருக்கு அரசியல் குரு. 9 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்த குருவின் பிரதான சீடர்களில் தானும் ஒருவர் என்பதில் இவருக்குப் பெருமை அதிகம்.

வாலாஜாப்பேட்டை வேங்கடரமணர்

கே.ஆர்.கிருஷ்ணமாச்சாரி

சங்கீத உலகில் சிறு குழந்தையும் தியாகப்பிரம்மத்தின் திருப்பெயரை அறியும். அவரது பிரதம சீடர் ஒருவர் வாலாஜாப் பேட்டையில் தமது இறுதிக் காலத்தைக் கழித்தார். தியாகப் பிரம்மமும் தமது திருப்பதி யாத்திரையின்போது சீடரின் இந்த இல்லத்திற்கு வருகை தந்து சிறப்பித்துள்ளார்.

குரு தியாகப்பிரம்மம் திருவாரூரில் அவதரித்திருந்தாலும் வாழ்ந்தது திருவையாறு ஆனதால் திருவையாறு தியாகப் பிரம்மம் என்று குறிப்பிடப் படுவதுபோல் அவரது பிரதம சீடராக விளங்கிய ஸ்ரீமத் வேங்கடரமண பாகவத சுவாமிகள் தஞ்சை மாவட்டம் அய்யம்பேட்டையில் அவதரித்திருந்தாலும் தமது வாழ்வின் இறுதிக்காலத்தை வாலாஜாப் பேட்டையில் கழித்து அங்கு மறைந்ததால் வாலாஜாப் பேட்டை வேங்கடரமண பாகவதர் என்று குறிப்பிடப்படுகின்றார்.

'தியாகராஜரின் மாசிலா மணியான பாடல்களைக் காப்பாற்றி மக்களிடையே பரப்பியதன் மூலம் கர்நாடக சங்கீதத்திற்கே பெரும் பணியாற்றியுள்ளார்' என்று சென்னைப் பல்கலைக்கழக இசைத் துறைத் தலைவராக விளங்கிய பேராசிரியர் பி.சாம்பமூர்த்தி இவரைப் பற்றிப் பெருமிதத்துடன் தியாகராஜரின் வரலாற்று நூலில் குறிப்பிட்டுள்ளது முற்றிலும் உண்மையாகும்.

வேங்கடரமணர் (1781-1874) தமது ஜீவிய காலத்தில் கால் நூற்றாண்டு காலம் குருவுடனேயே காட்சியளித்தார். இதன் காரணமாக டாக்டர் பார்த்தசாரதி, டாக்டர் ராகவன் போன்ற இசை அறிஞர்கள் இவரைத் தியாகராஜரின் பாஸ்வெல் என்றே குறிப்பிட்டுள்ளனர். . குருவின் படைப்



ஸ்ரீமத் வேங்கடரமண பாகவத ஸ்வாமிகள்.
(வாலாஜாப்பேட்டை)



ஸ்ரீமத் தியாகராஜ ஸ்வாமிகள்.
(திருவையாறு)

புகள், பாதுகைகள், தம் பூராக்கள், பாராயணம் செய்த போதன கவி பாகவதம், வழிபட்ட ஸ்ரீராம விக்கிரகம், தியாகப்பிரம்மத்தின் ஜாதகக் குறிப்பு முதலானவற்றைப் பத்திரமாகப் பாதுகாத்து உலகிற்கு அளித்தவர் இவரே. அவை சங்கீத உலகினரால் 'வாலாஜாப்பேட்டை பொக்கிஷம்' (WALAJAPET MANUSCRIPTS) என்றே சிறப்பித்துக் கூறப்பட்டு இன்றும் மதுரை சௌராஷ்டிர சபையில் வைத்துப் பூஜிக்கப் பட்டு வருகின்றன. ஃ

'மணிமாலை'



சி. ஞானசேகரன்


வேலூர் - சட்டமன்ற உறுப்பினர்

குருகம்பத்தூர் தொடங்கி பெருமுகை முடிய தொழிற்சாலைகள் கொண்ட ஒரு தொழிற்பேட்டையை வேலூரில் அமைக்கத் துடித்துக் கொண்டிருக்கிறார் வேலூர் சட்டமன்ற உறுப்பினர் சி.ஞானசேகரன்.

1972 ஆம் ஆண்டு காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்தார். 1974 முதல் இன்று வரை வழக்கறிஞராயிருந்து பிரபலமாகியிருக்கிறார். தமிழ்நாடு சத்துணவுப் பணியாளர்கள் பேரவையின் மாநிலச் சட்ட ஆலோசகராய், தமிழ் நாடு வீட்டுவசதி வாரியக் குடியிருப்பு நல்வாழ்வுச் சங்கத்தின் தலைவராய் மற்றும் தமிழ்நாடு சட்டமன்ற உரிமைக்குழு உறுப்பினராய் உள்ளார். வேறு பல பொறுப்புகளையும் வகிக்கிறார்.

ஒரு அரசு மருத்துவக் கல்லூரி, ஒரு அரசு வேளாண்மைக் கல்லூரி, ஒரு அரசு கால்நடைக் கல்லூரி, ஒரு சட்டக் கல்லூரி, ஒரு அரசு பெண்கள் கல்லூரி என்று வரிசையாய் வேலூரில் ஏற்படுத்தியே தீரப்போகிறேன் என்கிறார். ஃ

ஆசியாவிலேயே சிறந்த அரைவையாளர்!



ந. நரசிம்மன்

வேலூரில் வெள்ளமாய் மக்கள் புரளுமிடம் லாங்கு பஜார்.

அங்குதான் ஸ்ரீபால கணேசர் மாவுமில் இருக்கிறது.

அருகில் நெருங்கும்போதே அதிவிநோதமான கர்ணகடூர மற்ற ஒரே சீரான ஒலி காதுகளை நாம் தொட்டுப் பார்த்துக் கொள்ளத் தூண்டுகிறது.

எட்டிப் பார்க்கிறோம்.

வரிசையாய் அல்லர்கள்.

பன்னிரண்டு அல்லர்கள் ஒரே சமயத்தில் இயங்குகின்றன.

தூள் கிளப்புவதற்குப் பதில் தூசு கிளப்புகின்றன.

தீராத ஒற்றைத் தலைவலிக்கு ஒரு காலத்தில் சித்த வைத்தியச் சிகிச்சை செய்து கொண்டிருந்த டாக்டர் ந. நரசிம்மன், இப்போது பரம்பரைத் தொழிலான மாவுமில் தொழிலில் முழுக்கவனம் செலுத்தி ஆசியாவிலேயே சிறந்த அரைவையாளராய்த் தன்னை உயர்த்திக் கொண்டிருக்கிறார் என்ற செய்தி நம்மைப் பிரமிக்க வைக்கிறது.

ஆசியாவிலேயே சிறந்த மருத்துவமனையான சி.எம்.சி. மருத்துவமனைக்கு அடுத்த படியாய் அதிகமான மின் சக்தியைப் பயன்படுத்தும் பெருமைக்குரியது என்ற முத்திரையைப் பதிக்கிறது இம் மாவுமில்.

இருபத்தைந்து தொழிலாளிகள் இங்கு பணியாற்றுகின்றனர்.

"ஓர் அரைவையாளரின் அனுபவங்கள் என்ற அரிய நூலை எழுதினேன். அதற்காக கலிபோர்னியா கலை மற்றும் பண்பாட்டுக் கழகம் எனக்குக் கௌரவ டாக்டர் பட்டம் கொடுத்திருக்கிறது..." முகத்தில் மகிழ்ச்சியை வரவழைத்துக் கொள்கிறார் அவர்.

அந்த நூலைப் புரட்டுகிறோம்.

படிக்கத் தூண்டும் கெட் அப்... உள்ளே அரைவை மெஷின் கண்டுபிடிப்பு, பொருள்கள் அரைக்கப்படும் விதம் முதல் அரைவை மில் தொழிலில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் வரை உள்ளன. ஒரு வித்தியாசமான நூல்தான்! ஃ

சந்தனமா சத்தியவாக்கா?

அ.ராம்குமார் ஐ.எஃப்.எஸ்.

சிவப்பு நிற எண்கள் இடப்பட்ட பெரிதும் சிறிதுமான சந்தனக் கட்டைகள் ஏராளமாய்க் குவிக்கப்பட்டிருந்த அந்த பங்களாவே மணத்தது.

வலப்பக்கம் நிறைய கார்கள்... லாரிகள்... அவற்றின்மீது படிந்திருந்த தூசுகளே, எவ்வளவு காலமாய் அங்கே அவை நிற்கின்றன என்பதைத் தெரிவித்தன.

துடிப்பும் வேகமும் கொண்ட 37 வயதே நிரம்பிய மாவட்ட வன அலுவலர் அ. ராம்குமார் ஐ.எஃப்.எஸ். தான் 11 ஆண்டுகளாய்ப் பணியாற்றும் வனத்துறை அனுபவங்களைக் கூறத் தொடங்கினார்.

வன ஆய்வு மற்றும் சமூகக் காடுகள் அபிவிருத்தி போன்றவற்றில் தான் அதிகம் ஈடுபட்டதாகக் கூறும்போது அவரது கூர்மையான பார்வையையே நாம் உற்று நோக்குகிறோம்.

"மரத்தை வெட்டாதே, வனப்பகுதிக்குள் பிரவேசிக்காதே, வனவிலங்குகளைக் கொல்லாதே... என்று கண்டிப்பதாலேயே வன அலுவலர்கள் எதிரிகளாய் விடுகின்றனர். இந்த நிலை மாற வேண்டும்.."

"மாற்ற முயற்சிகள் மேற்கொண்டீர்களா?"

"சமூகக் காடுகள் அபிவிருத்தியில் ஈடுபட்டிருந்தபோது கிராம மக்களுடன் சேர்ந்து பழகினேன். நிறைய செடிகள் வளர்த்தேன். அவர்களில் நான் ஒருவனாய் இருந்தேன். அதனால் அங்கே என்னை 'ஹீரோ'வாகக் கருதினார்கள்.."

"இப்போது?"

"இங்கே வில்லனாகக் கருதுகிறார்கள்"

வியந்து விழிக்கிறோம்.



"தலையில் பேன் ஓடுவது போல் வேலூரில் வாகனங்களில் சந்தனக் கட்டைகள் ஓடிய நிலையை நான் சென்ற ஆண்டு மே மாதம் இங்கே பொறுப்பேற்றபோது கண்கூடாகப் பார்த்தேன்.."

"அப்படியா!"

"ஜவ்வாது மலையிலிருந்து போளூர், சந்தவாசல், ஒடுக்கத்தூர், ஆம்பூர், அமிர்தி, வேலூர் வழியாகச் சந்தனக் கடத்தல்கள் சர்வ சாதாரணமாக நிகழ்ந்தன..."

"உடந்தைகள் இருந்ததால் தானே!"

"ஆமாம். செக்போஸ்டுகளைக் கடுமையாக்கினேன். வனவர்களை, சரகர்களை, வனக் காப்பாளர்களை, வனக் காவலர்களைத் தனித்தனியே அழைத்துச் சந்தனக் கடத்தலை முற்றிலும் ஒழித்தே தீர வேண்டும் என்று ஒத்துழைக்கக் கேட்டுக் கொண்டேன். மனம் விட்டுப் பேசி சத்தியவாக்குகள் வாங்கிக்கொண்டேன்.."

"சந்தனம் வென்றதா? சத்தியவாக்கு வென்றதா?"

"சந்தேகமில்லாமல் சத்தியவாக்குதான். கடத்தல் குற்றத்திற்காக இதுவரை 1400 பேர் கைதாயிருக்கிறார்கள். 46 பேர் குண்டா சட்டத்தில் தள்ளப்பட்டிருக்கிறார்கள். 70 வாகனங்களைப் பிடித்திருக்கிறோம். 425 வழக்குகளைப் பதிவு செய்திருக்கிறோம். 190 டன் கட்டைகள் கைப்பற்றியிருக்கிறோம். இச் செயல் மாநிலத்திலேயே முதன்மையானது.."

"அப்படியென்றால் முற்றிலும் கடத்தலை ஒழித்து விட்டீர்கள்...அப்படித்தானே?"

"95 விழுக்காடு ஒழித்து விட்டேன். அப்புக்கல், சோழவரம் போன்ற ஊர்கள் மலைக் காடுகளிலிருந்து சந்தனக் கட்டைகளைத் தலைமீது சுமந்து தம் பிழைப்பை நடத்தினர் அங்குள்ளோர். இப்போது அந்த ஊரார் வெயிலிலும், மழையிலும் உடலை வளைத்து உழைத்துச் சாப்பிடுகின்றனர். வெட்டுப்வர்களை, தூக்குபவர்களை வேவு சொன்னவர்களையெல்லாம் திருந்தச் செய்திருக்கிறோம்.." மலர்கிறார் வன அலுவலர்.

நாமும் மலர்கிறோம்.

"குடும்பத்தையே பணயம் வைத்துத்தான், பலத்த பாதுகாப்புகளுக்குள் பதுங்கியிருந்த பலே கடத்தல் பேர்வழிகளைப் பிடித்திருக்கிறேன். என்னோடு பணியாற்றும் அலுவலர்களும் எவ்வளவோ துன்பங்களை இன்றும் அனுபவிக்க நேரிடுகிறது. எப்படியோ சமுதாயத்திற்கு எங்களாலும் சேவை செய்ய முடிகிறது. அந்த ஆத்ம திருப்தியே எங்கள் சேவைக்குச் சம்பளம்..!"

கடத்தலைக் கடத்திய கனவானைச் சந்தித்த களிப்பு நம்மில் சந்தனமாய் மணக்கிறது. ்ஃ

ஒரு விருட்சத்தின் கதை

ஒரு காலத்தில் வேலூரைச் சுற்றியுள்ள கிராமங்களுக்குக் கால்நடையாகவே தலையில் பெரிய மூங்கிற்கூடை நிறையச் சொந்தமாய்த் தயாரித்த பிஸ்கெட்டுகளைச் சுமந்து திரிந்து விற்றவர் ஏ.எஸ்.அருணாசலம்.

அவரது அயராத உழைப்பினால் உருவானதுதான் இன்று மாவட்டத்தின் மூலை முடுக்கெங்கும் பெயர் பெற்றிருக்கின்ற ஏ.எஸ்.ஏ. பேக்கரி நிறுவனம்.

முப்பதாண்டுகளுக்கு முன்பு இம்மாவட்டத்தின் ஆட்சித் தலைவராயிருந்த தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான் அவர்களைத் தான் தலைவராயிருந்த இளங்கோ நாடக மன்றத்தில் நடிக்க வைத்தவர் ஏ.எஸ். அருணாசலம். அப்போதே திருப்பராய்த்துறை அனாதைக் குழந்தைகள் விடுதிக்காக நீதியரசர் மகாராசன் முயற்சியால் திருச்சியில் நாடகம் நடத்தி இரண்டு லட்சம் நிதி திரட்டித் தந்தவர்.

முயற்சியால் முன்னேறி சமுதாய மேடு பள்ளங்களை இட்டு நிரப்பத் தன் செல்வத்தைச் செலவழித்த இவருடைய ஒரே மகன்தான் இன்று 'வாழும் வள்ளல்' என்று வாய்நிறைய அழைக்கப்படும் ஏ.எஸ்.ஏ.பரமசிவம்!

இவரது சமயச் சேவையைக் கேட்டறிய வேண்டுமெனில் திருமுருக கிருபானந்தவாரியாரை, மயிலை குருஜியை, இரத்தினகிரி பாலமுருகனடிமையைத் தேடிப் போகலாம்.

காஞ்சி மாமுனிவர் சங்கராச்சாரியார் 25 ஆண்டுகளுக்கு முன் தம் திருக்கரத்தால் ஆரம்பித்து வைத்த இலவச வைத்தியசாலையின் தலைவர். மோட்டூர், கழிஞ்சூர், விருதம்பட்டு, ஜாப்ராப்பேட்டை மற்றும் சுற்றுப்புறக் கிராமத்தைச் சேர்ந்த சுமார் 200 நோயாளிகள் இங்கே இலவச சிகிச்சை பெறுகிறார்கள்.

காஞ்சி முனிவர் ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் 'ஜன கல்யாண்' இயக்கத்தின் வேலூர்ச் செயலாளர் இவர்.

ஜலகண்டேஸ்வரர் ஆலய தர்மஸ்தாபனத்தின் உபதலைவர்; பொருளாளர். இளங்கோ நாடக மன்றத் தலைவர். முன்னாள் ரோட்டரித் தலைவர். மேலும் பல நலச்சங்கங்களில் பொறுப்பு வகிப்பவர்.

ஆண்டுதோறும் ஜூன், ஜூலை மாதங்களில் லாங்கு பஜாரிலுள்ள இவரது பெரிய ரொட்டிக் கடையில் கணக்கற்ற மாணவக் குழந்தைகளுக்குத் தேவையான பலகை, புத்தகம், நோட்டு, எழுது பொருள் போன்றவை இலவசமாகக் கொடுக்கப்படும் காட்சியைக் கண்குளிரப் பார்க்கலாம்.

அவருடைய வீட்டுப் படியேறிய யாரும் புன்னகையை மறந்து திரும்பியதில்லை. வரையாது வழங்க இவரால் எப்படி முடிகிறது என்று நாம் அவரை அர்த்தத்தோடு பார்த்தால், தனக்கே உரிய ஒரு சிரிப்பைச் சிந்திவிட்டுக் கூறுவார்:

◆ இம்மாவட்டத்தில் தீக்குச்சித் தயாரிக்கும் தொழிற்சாலைகள் ஏராளம். சிவகாசிக்கு அடுத்த இடம் இதற்குத்தான்!



ஏ.எஸ். அருணாசலம்



ஏ.எஸ்.ஏ. பரமசிவம்

"நாங்கள் வியாபாரத்தில் தரம் என்ற ஒன்றிலிருந்து எப்போதும் தவறுவதில்லை. அந்தத் தரம் எங்களுக்கு நாணயத்தைச் சம்பாதித்துக் கொடுக்கிறது. அந்த நாணயம் 'அமுதசுரபி'யாய் நாணயத்தைக் குவிக்கிறது. எடுக்க எடுக்கக் குறைவதில்லை!"

ஏ.எஸ்.ஏ. பேக்கரியைத் தவிர வேறு வியாபாரங்களும் இவருக்குண்டு. ஆன்மீகவாதியான இவர் அரசியல்வாதி அல்லர்.

ஒரு மகனுக்கும், இரண்டு மகள்களுக்கும் தந்தையான இவரது துணைவியார் சாட்சாத் மகாலட்சுமிதான்!

'அக்கா, அக்கா' என்பதை மறக்காத அர்ச்சனா ஐ.பி.எஸ்.



பத்தாண்டுகளாய் மதுரை, சேலம், சென்னை, ஊட்டி போன்ற ஊர்களில் பணியாற்றிய அர்ச்சனா இராமசுந்தரம் ஐ.பி.எஸ்., 1991 நவம்பர் முதல் வாரத்திலிருந்து வேலூர், திருவண்ணாமலை, தர்மபுரி, சேலம் அடங்கிய மண்டலத்தின் மதுவிலக்கு அமல் பிரிவு கண்காணிப்பாளராய்ப் பணியாற்றி வருகிறார்.

மதுரையில் ஓராண்டு ஏ.எஸ்.பியாயிருந்ததைத் தன் வாழ்நாளில் எப்போதும் மறக்க முடியாது என்கிறார். அப்படி என்ன மதுரையில்?

பொதுமக்களுடன் நெருங்கிய தொடர்பு இருந்ததாம். குறிப்பாகப் பெண்கள் தினந்தோறும் தங்கள் பிரச்னைகள் தாங்கிய மனுக்களைத் தேடி வந்து நீட்டினார்களாம்.

கசிந்துருகி சம்பந்தப்பட்ட பெண்களின் இல்லங்களைத் தேடிப்போய் உடனடியாக வெறும் ஆறுதலும் தேறுதலும் கூறாமல் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டாராம்.

"ஊட்டியில் அரசினர் கலைக்கல்லூரி மாணவர்களுக்கும் ஒரு காவல்துறை அதிகாரிக்கும் நேர்ந்த தகராறில் தலையிட்டுத் தீர்த்து வைக்க முயல்கையில் "அக்கா, அக்கா" என்று அந்த மாணவர்கள் பந்தபாசத்துடன் என்னை அன்புடன் விளித்தது என் காதுகளில் இன்னும் ரீங்காரிக்கிறது" என்கிறார்.

"என் கணவர் (திரு.இராமசுந்தரம் ஐ.ஏ.எஸ்.) தமிழர் என்பதால் உத்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த எனக்குத் தமிழகம் பிடித்துப் போய் விட்டது என்று நினைத்து விடாதீர்கள். 1982லிருந்து தமிழகத்தில் பணியாற்றும் நான் பெண்களை மிகவும் கௌரவத்துடன் நடத்தும் தமிழர்களின் பண்பாட்டில் என்னையே இழந்துவிட்டேன். அதனாலேயே இங்கு கள்ளச் சாராய விற்பனையில் ஈடுபடும் பெண்களை ரெய்டின் போது பிடிக்கையில் வேதனைப்படுகிறேன்".

"அம்மா... எனக்கு அஞ்சி பசங்க. எம் புருஷன் சம்பாத்தியம் பத்தல. அதனால சாராயம் காய்ச்சிற எடத்தில கூலி வேலை செய்றேன் என்று கையெடுத்துக் கும்பிடும் பெண்களைப் பரிதாபத்துடன் அணுகி, அவர்கள் திருந்தக் கூடியவர்களாயின் கலெக்டரிடம் கூறி லோன் வாங்கித் தர முயற்சி எடுக்கிறேன். தக்கவாறு கள்ளச் சாராய ஈடுபாட்டால் ஏற்படும் தீமைகளை எடுத்துக் கூறுகிறேன். குடும்பக் கட்டுப்பாட்டையும் போகுமிடமெங்கும் வற்புறுத்துகிறேன்".

ஆறரை வயதில் கார்த்திகேயா என்ற ஒரே மகன்.

"ஜனவரியிலிருந்து மார்ச் வரை குண்டர் சட்டத்தில் 30 நபர்களைக் கைது செய்திருக்கிறேன். இச்செயலுக்காக இக்கோட்டத்திற்குக் காவல் துறைத் தலைவரின் கோப்பையைப் பரிசாகப் பெற்றுத் தந்திருக்கிறேன்..."

"கள்ளச் சாராயத்தை முற்றிலும் ஒழித்துவிட முடியுமென்ற நம்பிக்கை உங்களுக்குள்ளதா?"

"ஓ...! நம்பிக்கை நிறையவே இருக்கிறது. மண்டலம் முழுதும் தொடர்ந்து ரெய்டு மேற்கொள்கிறோம். என் சக அலுவலர்கள் அதிகமாகவே ஆதரவு தருகின்றனர். பொதுமக்களும் தங்கள் பங்குக்கு உதவுகின்றனர்".

"இரவென்றும் பகலென்றும் பாராமல் காவல் துறையில் உழைக்கும் உங்களால் குடும்பத் தலைவிக்குரிய பணிகளைச் செய்ய முடிகிறதா?"

"ஓரளவுக்கு முடிகிறது" சிரித்துக் கொள்கிறார்.

மாவட்ட நீதிபதியாய்ப் பணியாற்றிய தந்தை கே.வி. மிஸ்ராவின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யவே இத்துறைக்கு வந்ததாகக் கூறும் இவர், 34 வயதே நிரம்பியவர்!

சேவைக்கு ஒரு சங்கம்



அ. பேட்ரிக் ரொசாரியோ



அருட்திரு. ஆவுல.ஜோ.மரியசூசை

ஏந்த அரசும் மக்களின் எல்லா விதமான தேவை களையும் பூர்த்தி செய்துவிட முடியாது. அதனாலேயே பல தொண்டு நிறுவனங்கள் அரசுப் பணியைத் தாங்களே மன முவந்து செய்கின்றன.

அத்தகைய சீரிய பல்வேறு தொண்டுகளை ஏழை, எளிய, குறிப்பாகக் கிராம மக்க ளுக்குச் சத்தமில்லாமல் செய் கிறது வேலூரில் ஆபீஸர்ஸ் லைனிலுள்ள கத்தோலிக்க பிஷப்ஸ் ஹவுசில் இயங் கும் வேலூர் சமூக சேவைச் சங்கம்.

இச்சங்கத்தின் சேவை பக்கத்திலுள்ள திருவண்ணா மலை சம்புவராயர் மாவட்டத் திற்கும் பயன்படுகிறது.

விவசாய மேம்பாட்டுத் திட் டங்கள், சுயவேலை வாய்ப்புக் கான வங்கித் திட்டங்கள், பெண்கள் முன்னேற்றத் திட் டங்கள், தாயகம் திரும்பியோர் நல்வாழ்வுத் திட்டங்கள், சுய வேலை வாய்ப்புப் பயிற்சிகள், நிவாரணப் பணிகள், மக்க ளுக்கு விழிப்புணர்ச்சிக் கல்வி, தாய்சேய் நலப்பணி, கிராமச் சுகாதாரக் கல்வி போன்ற ஏராளமான பணிகளில் ஈடுபட் டுள்ளது இச்சங்கம்.

பல்லாலக்குப்பத்திலுள்ள குழந்தை இயேசு பட்டு நூல் முற்பு நிலையம்



திட்ட அலுவலர் அ.பேட்ரிக் ரொசாரியோ நம்மை அன்புடன் வரவேற்கிறார். 16 ஆண்டுக ளாக இச்சங்கத்தில் பணி புரியும் முதிர்ச்சியுற்ற பயிற்சித் தொண்டு அவருடைய பேச்சி லிருந்தே வெளிப்படுகிறது.

எதிரெதிர் வரிசைகளில் பணியாளர்கள்.

அலுவலக அமைப்பு மிகவும் வசீகரிக்கிறது.

நேர்த்தியான கண்ணாடி களால் ஆன ஓர் அறைக்குள் அழைத்துச் செல்கிறார் திட்ட அலுவலர்.

எழுந்து நின்று கனிவு நிரம்பி வழிய கைலாகு தரு கிறார், இளம் வயதுப் பாதிரி யார் ஆவுல.ஜோ.மரியசூசை.

1982 முதல் 87 வரை இச் சங்கத்தின் இணை இயக்குந ராக இருந்திருக்கிறார். கனடா வில் உள்ள ஒரு நிறுவனத் தில் 6 மாத காலம் பயற்சி பெற்றிருக்கிறார்.

1988 முதல் இச்சங்கத்தின் இயக்குநராய் இருந்து வரு கிறார்.

தனிமனிதனாய், பாதிரியாய், இயக்குநராய் எவ்வாறு உங்களால் ஒரே சமயத்தில் சரியாய்ப் பணியாற்ற முடிகிறது என்று கேட்கத் துடிக்கிறோம்

ஒட்டுமொத்தத்தில் சங்கச் சேவை கிராமங்களைச் சுற்றிச் சுற்றித்தான் என்பதைத் தெளிவுப்படுத்திக் கொண்டு குடியாத்தம் தாண்டியுள்ள பல்லாலக்குப்பம் கிராமத்திற்குப் புறப்படுகிறோம்.-

அங்குள்ள குழந்தை இயேசு பட்டுநூல் நூற்பு மையம் நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறது. ஏராளமான பெண்கள் நூற்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். சுயதேவைப் பூர்த்தியைக் கூட்டும் இதுபோன்ற 54 பெண்கள் அமைப்புகள் உள்ளனவாம்.

1991 இல் மட்டும் இச்சங்கம் செய்துள்ள பணிகளின் பட்டியல் பிரமிப்பூட்டுகிறது. உதாரணத்திற்கு ஒன்றிரண்டு – தாய் சேய் நலத்திட்டத்தில் 10,000 பேர், குடும்ப நலத்திட்டத்தில் 5000 பேர், மருத்துவ நலத் திட்டத்தில் 4175 குடும்பங்கள், கிராமப்புற சிறுவர் கல்வித் திட்டத்தில் 4000 பேர், ஆடு, மாடு வளர்ப்புத் திட்டத்தில் 180 குடும்பங்கள், வீடு கட்டும் திட்டத்தில் 140 குடும்பங்கள்... இன்னும் பல கிராமங்களில் பல்லாயிரம் பேர் இச்சங்கத்தால் பயனடைந்துள்ளனராம்.

— நீலவன்



எஸ். பரஞ்ஜோதி
(பேராசிரியர்)

பதினெட்டு ஆண்டுகளாகக் கணிதப் பேராசிரியராய்ப் பணியாற்றும் இவர் வேலூருக்கருகிலுள்ள கீழ்ரசம்பட்டுக் கிராமத்தில் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர்.

ரோட்டரிச் சங்கத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்த இவர், இப்போது புகை ஒழிப்புக் குழுத் தலைவராய் இருக்கிறார். இருதய அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கு இதுவரை 140 பாட்டில்கள் இரத்ததானம் செய்துள்ளார். தான் பணியாற்றும் அரசினர் கலைக் கல்லூரி இளைஞர் செஞ்சிலுவைச் சங்கத் தலைவர். ஏழு கிராமங்களில் ஏழு கிளைகளைக் கொண்ட ஜோதி அகாடமி மெட்ரிகுலேஷன் பள்ளியின் நிறுவனர். சென்ற மாதம் 1000 குழந்தைகளுக்கு இலவசமாகச் சீருடை வழங்கியிருக்கும் இவர் கிராமப்புற இளைஞர்களை ஊக்குவிப்பதில் தீவிரம் காட்டுகிறார். அவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதற்கென்றே ஒரு தொழிற்சாலையை நிறுவத் திட்டமிட்டிருக்கிறார். சுயதேவைப் பூர்த்திக்கான ஆலோசனை மையமொன்றையும் நடத்துகிறார். பணியிலிருந்து விலகி முழுநேரச் சேவையாளராய் மாற விரும்புகிறார்.



எஸ்.டி.இராஜேந்திரன்
மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர்

கலை ஆர்வமும் பேச்சார்வமும் கொண்ட இவர் 1971 ஆம் ஆண்டில் உதவி மக்கள் தொடர்பு அலுவலராய்ப் பணியில் சேர்ந்தார். 1974 ஆம் ஆண்டிலிருந்து மாவட்டப் பொறுப்பு வகித்து வருகிறார்.

சமயப் போதகரான – பரிசுத்தமான – தன் தந்தையின் பிரதிபலிப்பே தான் என்கிறார். ஒரு நூலைப் படித்து முடிக்கும்வரை ஓயாதவர் இவர்.

மாவட்டத்திலுள்ள அரசியல்வாதிகள், அரசு அலுவலர்கள், சேவையாளர்கள், பொதுமக்கள் எல்லாருக்கும் தெரிந்தவராகத் தான் இருப்பதை பெரும் பேறாய்க் கருதுகிறார்.

◆ வாலாஜாப்பேட்டையில் பிரம்பு நாற்காலிகள், டீப்பாய்கள் மிகவும் அழகாய்த் தயாரிக்கப்படுகின்றன. ●

இம்மாவட்டத்தில் வேலூர்க் கோட்டை, ஜவ்வாது மலை, ஏலகிரி மலை, அமிர்திக் காடு போன்றவை சுற்றுலாத் தலங்கள். ●

பூக்களைக் கிள்ளாதீர்!

எஸ்.குலசேகரன்





அந்த மனிதர் புனிதமாக அந்த மாணவர்கள் விடுதியை நிர்வகிக்கும் பணியில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டிருந்தார்.

'பறவைகள் சரணாலயம்' என்றால் அது அந்த மாணவர் விடுதிக்குத்தான் பொருந்தும். எங்கெல்லாம் இருந்து பறவைகள் ஆண்டிற்கொருமுறை சரணாலயத்தைத் தேடி விரும்பி வருமோ அப்படி ஆண்டிற்கொருமுறை அந்த விடுதியில் சேர மாணவர்கள் வருவர்.

அந்த மனிதருக்குக் குழந்தைகள் என்றால் உயிர். சமூகத்திலே அவர்கள் நல்லொழுக்கத்துடன் படித்துச் சிறந்து விளங்க வேண்டும் என்ற ஆர்வம், ஆசை.

அதற்காக அவர் தம் பணியில் இருந்து ஓய்வு பெற்றதும் தம் சொத்துக் களையெல்லாம் அந்த விடுதிக்கு எழுதி வைத்தார். அவரின் உண்மைச் சேவையை ஊர் உலகம் பாராட்டியது. பத்திரிகைகள் பாராட்டின. நண்பர்கள் பாராட்டினர்.

அப்படிப் பாராட்டியவர்களிலே வேதாசலம் ஒருவர். இவரைக் கண்டால் வேதாசலம் மிகவும் மதிப்பளிப்பார். தம் வாழ்க்கையே இவரிடம் அடங்கியுள்ளது எனப் பெருமை பேசுவார்.

அந்த மாமனிதர் மாணிக்கம் போன்றவர். பெயரும் மாணிக்க முதலியார். அந்த மாணிக்கத்தின் முன் கூழாங்கற்களாக இருந்தவர் பலர்.

ஆனால் வேதாசலம்? அவரை அந்த மாநகரமே பாராட்டியது. லயன்ஸ் கிளப், ரோட்டரி கிளப் எல்லாம் அவரைக் கூப்பிட்டுப் பாராட்டியது. நண்பர்களும் உறவினர்களும் அவருக்கு 'ஜே' போட்டனர். காரணம், வேதாசலத்தின் பள்ளி விழுக்காடு ஆண்டு தோறும் உயர்ந்து கொண்டே வந்ததுதான்!

மாணிக்க முதலியாரும் வேதாசலத்தின் கல்வித் தொண்டைச் சில இடங்களில் விஸ்தாரமாகவே ஆலாபிப்பார். தன் விடுதிப் பையன்கள் வேதாசலம் பள்ளியில்தான் கற்க வேண்டும் என விரும்புவார்.

வேதாசலம் பள்ளி விழாக்களில் மாணிக்க முதலியாருக்குத்தான் முதலிடம். 'பெரியவர் வருகிறார்... பெரியவர் வருகிறார்' என அவருக்கு மதிப்பளிப்பர்.

அப்படிப்பட்ட அந்தப் பெரியவரின் கரங்களிலேதான் ஒருநாள் அந்தக் கடிதம் – பெரியவரின் முகம் அந்தக் கடிதத்தைப் படித்துப் பெரிதும் வாடியது. வேதாசலமா இப்படி...?

"ஐயா... நீங்கள் போற்றிப் புகழும் திருவாளர் வேதாசலம் உங்களைப் போலச் சிறந்த கல்வித் தொண்டு புரிபவர் அல்ல. நீங்கள் உங்கள் சொத்துகளையெல்லாம் மாணவர் விடுதிக்கு எழுதி வைத்தீர். ஆனால் வேதாசலமோ 'டியூஷன்' பணத்தால் மன்மதலீலை பாட்டுப் பாட விரும்புகிறார். நீங்கள் தனிமரமாக நின்று மாணவர் உலகிற்குச் சேவை புரிய முன்வந்தீர். ஆனால் அவரோ தம் வீட்டிலேயே, தம் கீழ் பணியாற்றும் ஆசிரியை கட்கு 'டியூஷன்' சொல்லித் தருகிறார்.

முடிந்தால் பகல் ஒரு மணிக்குப் பள்ளி விடும் நேரத்தில் பக்கத்து வீட்டு மாடியில் நின்று வேதாசலம் எப்படி இளம் பூக்களைக் கிள்ளுகிறார். இளம் ஆட்டுக் குட்டிகளைப் போன்ற மாணவர்களை எப்படித் துன்புறுத்துகிறார் எனப் பாருங்கள்'

என்று எழுதிய கடிதத்தைப் படித்து மடித்து அதைத் தம் சட்டைப் பையில் வைத்துக் கொண்டார்.

அடுத்த நாள்... அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டபடியே பக்கத்து வீட்டு மொட்டை மாடியில் ஏறி வேதாசலத்தின் பள்ளிக் கூட வாயிற்புறத்தைப் பார்த்தார்.

முன்னால் அகன்ற வாயிற்படி. இரு கம்பிக் கதவுகள். அதன் வழியே மணியடித்தவுடன் சுமார் ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவ, மாணவியர் வெளியே வரவேண்டும். ஆனால் ஒரு கம்பிக் கதவு சாத்தப்பட்டு விட்டது. கீழே ஒரு கல் மற்றொரு கதவு திறக்காத படி இருந்தது.

பள்ளி மணி அடித்தது. சீருடை அணிந்த மாணவியர் பின்னே மாணவர்கள் 'திமு திமு'வென ஒருவரை ஒருவர் இடித்துத் தள்ளி வெளியே வந்தனர்.

சில மாணவர்கள் சைக்கிள்களை எடுக்கும்போது ஒருவரை ஒருவர் பிடித்துத் தள்ளினர். மாணவர்களுள் சிலர் கீழே விழுந்தனர். ஆட்டுக்குட்டியைப் போன்ற ஆறு வயதுச் சிறுமி இந்தக் களேபரங்களைப் பார்த்து 'மே' எனக் கத்தி அழுதது.

இந்த நிலை ஏன்?

வேதாசலம் சிலரிடம் சொல்லி இருக்கிறார். மாணவர்கள் ஒழுங்காக இருக்க, ஒழுங்காக நடக்க இந்தச் சிறிய வழியில் அவர்கள் பொறுமையுடன் சென்றாலே அவர்கட்குப் பொறுப்பும் கட்டுப்பாடும் வந்து விடுமாம்!

மாணிக்க முதலியார் குழந்தைகளைப் பூந்தோட்டத்து வண்ண மலர்களாக எண்ணுபவர். வேதாசலத்தின் சித்தாந்தங்களை அங்கீகரிப்பாரா?

தன் சட்டைப் பையில் இருந்த மொட்டைக் கடிதத்தைத் தொட்டுப் பார்த்தார். மாடியை விட்டுக் கீழே இறங்கும்போது, அவர் வந்திருப்பதை வேதாசலம் தெரிந்து கொண்டு அவரை வரவேற்க ஓடிவந்தார். கூடவே அவரின் அன்பிற்குரிய 'செல்வியர்' வந்தனர்.

"வேதாசலம்... நீ காலில் அடிபட்ட ஆட்டுக் குட்டியைத் தோளில் சுமந்து வந்த புத்தர் கதையைப் பற்றி அறிந்திருக்கிறாய் அல்லவா?" என்றார்.

வேதாசலம் விழித்தார். என்ன இது? நம்மைப் போய் இந்தக் கேள்வி கேட்கிறாரே என எண்ணினார்.

"நீ இனிமேல் பள்ளித் தலைவனாக இராதே... ஆடுகளைக் கசாப்புக் கடைக்காரனுக்கு விற்பனை செய்யும் விற்பனையாளனாக இரு" எனக் கூறி விட்டு வேகமாக நடந்தார்.

வேதாசலத்தின் பக்கத்திலே நின்றிருந்த அவரின் அபிமானச் 'செல்வியர்' பெரியவரின் சொற்களைக் கேட்டு, 'கிடக்கிறது கிழம்' எனக் கூறி ஏளனமாகச் சிரித்தனர்.

ஃ

என்ன செய்யப் போகின்றீர்?



எத்தனையோ பேய்களை
எப்படியெல்லாமோ ஓட்டிய
ஏ மனிதர்களே!

ஏற்றத் தாழ்வுப் பேயும்
எரிக்கும் வரதட்சணைப் பேயும்
வருத்தும் வறுமைப் பேயும்
துரத்தும் பொய்மைப் பேயும்

முறிக்கும் துன்பப் பேயும்
பறிக்கும் கொள்ளைப் பேயும்
உரிக்கும் மதுப் பேயும்
அரித்து அரித்து உருக்குலைக்கும்
வேலையில்லாத் திண்டாட்டப் பேயும்

இன்னும் இருக்கும் பேய்களும்
எத்தனையோ ஆட்டம் போட்டு
ஏய்க்கும் மனித குலத்தையே!

ஏ மனிதர்களே
இத்தனையும் ஓட்ட
என்ன செய்யப் போகின்றீர்?

— சுந்தரானந்த ராஜா

கங்காபுரிக் காவலன்

23. சிவபக்தருக்கு ஒரு சிலை

அந்த மரத்தடியில், சோழ இள வரசிகள் நால்வரும் சில பணிப்பெண் களும் அமர்ந்திருந்தனர். வயிறு நிறைந்த பகல் உணவிற்குப் பிறகு, உண்ட களைப் பால் விழிகள் சுழல சற்று உடலைக் கீழே சாய்க்கலாம் என்று எண்ணியவர்களுக்கு அரசியின் அபிநயம் நிறைந்த பேச்சு சுறு சுறுப்பை அளித்தது. அவர்கள் நிமிர்ந்து உட்கார்ந்தனர். பணிப்பெண் மடியில் தலை வைத்துக் காலை நீட்டி மெல்லக் கண்ணயர முயன்றவர்களும் ஆவலுடன் எழுந்து உட்கார்ந்தனர்.

இராசேந்திரனும், வீரமாதேவியும் பேசிக்கொண்டிருந்தவற்றை மறைந்திருந்து கண்டதை, கேட்டதை அரசி அப்படியே விவரிப்பதை அவர்கள் ரசித்தனர். அரசி யாரிடம் புதைந்துள்ள திறமை அவர்களிடம் பெரும் வியப்பை அளித்தது.

"இன்னும் ஏராளமாகச் சொல்ல இருக் கிறது. மூச்சு வாங்குகிறது - இன்று இவ் வளவுதான். எனக்குக் களைப்பாய் இருக் கிறது" என்றாள் அரசி தன் பேச்சை நிறுத்தி.

மற்றவர்கள் வியப்புடன் பார்த்தார்கள்.

'இதுவரையில் சொன்னவை சுவையாக இருக்கின்றன. இன்று இவ்வளவுதான் என்றால் இன்னும் இருக்கிறதா - ஆகா' என்று ஒருவருக்கொருவர் மகிழ்ச்சியுடன் அரசியை நோக்கினர்.

"நாளை வரையில் தாங்க முடியாது தேவி. சற்று நேரம் கண்ணயருங்கள். நாங்கள் சிறுதுயில் புரிகிறோம்" என்று அரசியின் செவிக்கருகே மெல்லக் கூறினாள் ஒருத்தி.

"யாரடி பெண்ணே, மயில் தோகை விசிறி எங்கே? எடுத்து வா, என்று கட்டளையிட்டாள் மீனவன்மாதேவி.

"அப்படியென்றால் இனி வீரமாதேவி வீரம்மாளாக ஆகிவிடுவாள் என்று சொல் லுங்கள்" என்று ஆவலுடன் செய்தியை முழுமையாக அறியக் கேட்டாள். பணிப் பெண்கள் செவியைக் கூர்மையாக்கிக் கொண்டனர்.

இராசேந்திரன் வீரமாதேவி இடையே நடந்த உரையாடலை மிகத் தெளிவாகக் கேட்ட அரசிக்கே அதிர்ச்சியாக இருந்த போது இன்னும் கற்பனை கலந்து அவள் கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்த மற்ற இளவரசியர்களுக்கு வியப்பு மேலிடாமல் இருக்குமா?

விக்கிரமன்

அரசிக்கு அந்தக் காட்சி வியப்பாக இருந்தது. அந்தத் தனி இடத்தில் இராசேந் திரனும், வீரமாதேவியும் சல்லாபத்தில் ஈடுபட்டிருக்கப் போகிறார்கள் என்று அவள் எதிர்பார்த்தாள். நீண்ட நாள்க ளாகச் சந்திக்காததால் விரகதாபம் மேலிட்டுக் காமன் கணைக்கு இரையாகி யிருப்பார் என்று நினைத்தாள். அழகின் மோக வலைவீச்சிற்கு அடிமையான அரசர், இப்போது மீண்டும் அவளைச் சந்திப்பதால் தன்வசம் இழந்து விடுவார் என நினைத்தாள்.

தஞ்சையிலுள்ள மற்ற இளவரசிகளிட மிருந்து அரசரைப் பிரிக்க இல்லாததை பொல்வாததை அவள் கூறி மனத்தை மாற்றி விடுவதற்கான அம்புகளை வீசு வாள் என நினைத்தாள்.

வீரம்மாளின் இளமைக் கனவில் வீழ்ந்துப் பொசுங்கும் அரசரின் நிலையை ஐயோ இந்தக் கண்ணால் பார்க்க நேரி டுமோ என்று வேதனைப்பட்டாள்.

இராசேந்திரன் அங்கே உள்ள, மரத் தால் செய்யப்பட்ட இருக்கை ஒன்றில் அமர்ந்தார். சுற்று முற்றும் பார்த்தார்.

சிற்பியுடன் பேசிவந்த பிறகு அவர் உள்ளத்தில் ஏற்பட்ட சிறு சலனத்தை முகம் பிரதிபலிக்காமல் மறைக்க முயல்வது தொடர்பற்று ஏதேதோ பேசுவதிலிருந்து தெரிந்தது.

அரசி நினைத்தாள்: "இவர் ஏன் அந்தக் குடிலைப்பற்றி வினவுகிறார்? இவர்தானே இந்தக் காட்டுப் பகுதியில் அவளை வசிக்கு மாறு செய்தவர்? இவர்தானே அவளுக்குக் குடில் அமைத்துக் கொடுத்தார்?"

அவர் குடிலைப் பற்றி வினவியது, அந்தச் சிற்பியின் குடிலை. சிற்பம் உருவா வதைப் பற்றி சிற்பி விவரித்ததைப் பற்றி வினவுகிறார்.

வீரமாதேவி ஏதோ சொல்கிறாள். வயது காரணமாக விளைவு செவியில் ஏற்பட்ட கோளாறுதான்.

வீரமாதேவி ஏதோ கூறுகிறாள். இராசேந்திரர் மௌனமாக இருக்கிறார். அவருடைய மௌனம் அவளுக்கு எரிச் சலை அளித்திருக்க வேண்டும்.

"தஞ்சாபுரிச் சிற்பங்களைவிட நான் மிகவும் மேன்மையான சிற்பங்களை இங்கே படைக்கப் போகிறேன்" என்று அவள் அழுத்தந்திருத்தமாகக் கூறியது மட்டும் சோழ அரசி பஞ்சவன்மாதேவியின் காது களில் வீழ்கிறது.

இராசேந்திர சோழர் ஏனோ நகைக் கிறார். "சிற்பியை நான் மதுரைக்கு அனுப்பப் போகிறேன்" என்கிறார்.

வீரமாதேவி திடுக்கிடுகிறாள்.

"சிற்பியை ஏன் மதுரைக்கு அனுப்ப முடிவு செய்துவிட்டீர்கள்?" வீரமாதேவி கேட்கிறாள்.

சிறு இடைவெளி வழியே பஞ்சவன் மாதேவியால் உற்றுப் பார்க்க முடிய வில்லை. தான் நோக்குவதைப் பிறர் பார்த்துவிடப் போகிறார்களே என்ற அச்சம் வேறு.

சில நொடிகள் கண்ணைக் கசக்கிவிட்டு மீண்டும் பார்த்தபோது, இராசேந்திரனும் வீரமாதேவியும் எதிர் எதிர் மூலையில் நின் றிருந்தனர். அப்படி அவர்கள் திடீரென ஊடல் கொண்டு நிற்கக் காரணம் என்ன என்று பஞ்சவன்மாதேவிக்குப் புரிய வில்லை. கண்ணைக் கசக்கிக் கொண்ட நேரத்தில் அவர்களிடையே ஏற்பட்ட பிணக்குதான் என்ன?

இராசேந்திரன், வீரமாதேவியை அணுகி மெல்லிய குரலில் ஏதோ சொல்கிறார். அவள் மறுமொழி கூறவில்லை. அவர் முகத்தில் ஏற்பட்ட மாறுதலை அவள் காண்கிறாள்.

அவள் ஏதோ சொல்கிறாள். பிறகு உறுதி நிறைந்த குரலில், "நான் இந்தக் காட்டுப் பகுதியைவிட்டு வரமாட்டேன். மாளிகையிலும், அந்தப்புரத்திலும் எனக்கு என்ன வேலை இருக்கிறது? இந்த வனபூமியைக் கலைப் பூமியாக்கும் வரையில் நான் இங்கிருந்து நகரமாட்டேன்" என் கிறாள்.

"இந்தக் காட்டுப்பகுதியைக் கலைக்கூட மாக்கும் உன் எண்ணத்தைப் பாராட்டு கிறேன். ஆனால் நீ தனியே இங்கு இருந்து என்ன செய்யப் போகிறாய்? சிற்பங்கள் அமைக்கும் பணியை மாணிக்க சேகரன் பார்த்துக் கொள்வார்" என்கிறார்.

"அவருக்கு நான் உதவியாக இருக்க வேண்டும். நான் அளிக்கும் உற்சாகத்தி லிருந்து அமர சிற்பங்களை அவர் படைக்கப் போகிறார்".

இதைக் கேட்டு இராசேந்திரன் மறு மொழி கூறவில்லை. பிறகு குறுக்கும் நெடுக்கும் உலவினார். அவர் மனத்தில் ஏற்பட்ட கடுமையை முகம் பிரதிபலித்தது.

சிற்பியுடன் அவள் தங்கியிருப்பதை அவர் விரும்பவில்லை என்பது தெரிந்தது.

"இந்த நாட்டுச் சக்கரவர்த்தியாக நான் அரியணையில் அமர்ந்த பிறகு, ஒரு நாளாவது நீ தஞ்சைபுரிக்கு வரவில்லை என்பதை நினைத்துப் பார்த்தாயா?"

இப்படி இராசேந்திரன் கேட்டவுடன் வீரமாதேவி திரும்பிப் பார்த்ததில் கடுமை தென்பட்டது. "தங்களுக்கு மகுடம் சூட்டு விழா எப்போது நடந்தது? அதைப் பற்றி அறியாத நான் தஞ்சைக்கு வந்தால் என் நிலை என்ன? என்னை உங்களுடன் சரிசமமாக அரியணையில் அமர வைப்பீர்

களா?'' என்றெல்லாம் அவளிடமிருந்து எழுந்த கேள்விக் கணைகளுக்கு இராசேந்திரன் உடனே விடை கூறாமல் திகைத்தார்.

"நான் சோழ சக்கரவர்த்தியாக முடிசூட்டப்பட்டது உனக்குத் தெரியாதா? மிகக் குறுகியகால அளவில் முடிவு செய்யப்பட்ட அந்த விழாவைப் பற்றி உனக்குத் தெரிவிக்கவில்லையா? எங்கோ தவறு நடந்திருக்கிறது வீரம்மா. முடிசூட்டு விழா அன்று என் விழிகள் உன்னைத் தேடின–" இப்படிக் கூறியாவாறு அரசர் அவளை மெல்ல அணைக்க முயன்றார். ஆனால் வீரம்மாள் விலகியவாறு –

''நான் நம்புகிறேன். ஆனால் ஏழு கடலுக்கு அப்பால் இருந்தாலும் தேடி அழைத்து வரக்கூடிய சக்தி உங்களிடமில்லையா? ஆள் படைப்பலம் இல்லையா? நான் வரவில்லை என்பது உங்களுக்குத் தெரியாதா?''

"எங்கோ தவறு நடந்திருக்கிறது என்று சொல்லிவிட்டேனே!"

"எங்கும் தவறு நடக்கவில்லை. தவறு உங்களிடம்தான்".

"சரி, ஏற்கிறேன். தவறு எங்கே நடந்திருக்கிறது என்பதைக் கண்டு பிடிக்கிறேன். அரச பதவிக்குரிய சில சடங்குகள், முறைகள், கட்டுப்பாடுகள் உடனே சூழ்ந்து விட்டன. அதனால் நான் கவனிக்கவில்லை. என்னுடன் தஞ்சைக்கு வருகிறேன் என்று சொல்".

"சொல்ல மாட்டேன். உங்களுடைய மற்ற இளவரசிகளின் போக்கு எனக்குப் பிடிக்கவில்லை. இந்தக் கானகத்திற்கு வந்ததிலிருந்து அவர்கள் நடந்து கொள்ளும் முறை பிடிக்கவில்லை. மொத்தத்தில் என்னை அவர்களுக்குப் பிடிக்கவில்லை",

"எப்படித் தெரியும்?"

"தொடக்கத்திலேயே தெரிந்துவிட்டதால் தான் நான் தஞ்சையினின்று இந்த இடத்திற்கு வந்தேன் என்பது தங்களுக்குத் தெரியாதா? தங்களிடம் தெரிவித்துவிட்டு வந்தேன்".

"இந்த இடத்தைத் தேர்ந்தெடுத்தவனே நான்தானே!"

"ஆம்; அந்த அரக்க மனம் படைத்தவர்களிடமிருந்து என்னைக் காப்பாற்றவே என்னை இங்கு அனுப்புவதை ஏற்றேன். அத்துடன் என் இலட்சியம் ஈடேறுவதற்கேற்ற சூழ்நிலை அமைந்ததற்கு மகிழ்ந்தேன்".

"நம் இலட்சியம் என்று சொல்".

"ஆம், நம் இலட்சியம்தான். ஆனால் இன்று இலட்சியத்திற்கு இடையூறாக நடக்க விரும்புகிறீர்கள்".

"இல்லை".

"ஆம்... ஆம்... என்னை இங்கிருந்து புறப்பட்டு வருமாறு வற்புறுத்துவதன் பொருள் வேறு என்ன?"

"அதற்காக இல்லை".

இராசேந்திரர் சற்று நிறுத்தி வீரமாதேவியைக் கூர்ந்து நோக்கினார்.

"எனக்குப் புரிந்துவிட்டது. சிற்பம் உருவாகும்போது நான் சிற்பியின் அருகே இருப்பதை நீங்கள் விரும்பவில்லை".

"ஆமாம்... நீ உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை".

"அதில் என்ன தவறு? பொறாமையால் சொல்கிறீர்கள்".

வீரமாதேவி இவ்வாறு கூறியது கேட்டு இராசேந்திரன் இதழ்களில் குறும்பு மிளிர, "ஆமாம்... எனக்குக் கிடைக்காதது மற்றவருக்குக் கிடைக்கக் கூடாது என்பதில் எனக்குப் பொறாமை" என்று கூறவும் வீரமாதேவி சீறினாள்.

"என்ன வார்த்தை சொல்லிவிட்டீர்கள். தங்களை உயர்தரமானவர் என்றும் மனிதர்களுக்கெல்லாம் மேம்பட்ட புருஷோத்தமன் என்றும் நான் நினைத்திருக்கிறேன். கலைக் காவலர் என்பதனால் அரசருக்குரிய வக்ர குணங்களிலிருந்து மாறுபட்டவர் என்று எண்ணியிருக்கிறேன். அதனால்தான் நான் என்னைச் சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாகவும் தங்களை அந்தப் பரமபுருஷனாகவும் எண்ணியிருக்கிறேன். காமத்திற்காகவும், உடல் ஆசைக்காகவும் தாங்கள் என்னை விரும்பவில்லை என்பதை உணர்ந்து தங்கள் கலை உள்ளத்தில் அமரச் சம்மதித்தேன். அழியக்கூடிய அற்ப உடலை மதிக்காமல் உங்கள் கலை ஜீவனைக் காதலித்தேன். அதற்கு என் உடலையும் ஆவியையும் அர்ப்பணிக்க முடிவு செய்திருந்தேன். என் வாழ்க்கையை இந்தக் காட்டுப் பகுதியில் கழித்து கானகத்தைக் கலைப் பூமியாக்க முடிவு செய்தேன். தஞ்சையை விடச் சிறந்த கோயிலை எழுப்பித் தங்கள் பெயரும் புகழும் என்றும் உலகில் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக நிலவச் செய்ய உறுதி பூண்டேன். என்னைப் பார்த்து இப்படிச் சொல்லிவிட்டீர்களே? என்ன வார்த்தை சொல்லிவிட்டீர்கள்?"

கோபத்தால் வெடித்த வார்த்தைகள் சிறிது சிறிதாகக் குறைந்தன. அவள் விம்மினாள். முகத்தை இரு கரங்களால் மூடிக்கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

மறைந்திருந்து தான் கேட்டவற்றையெல்லாம் அபிநயித்து அரசி கூறிவந்ததை மற்ற இளவரசிகள் ஆர்வமுடன் கேட்டு ரசித்தனர்.

"வீரம்மாள் அழுதாளா? நன்றாக அழட்டும். நம் அரசர் அவளைப் பற்றி முடிவு செய்திருந்ததை நானும் ஆமோதிக்கிறேன். சிற்பியும் இளம் வயது, இவளும் இளமை நிறைந்தவள். அழகி என்ற கர்வம் வேறு. அரசரை விட்டுப் பிரிந்து இந்தக் காட்டில் பஞ்சும் நெருப்பும் சேர்ந்து இருக்கலாமா? இவள் இங்கே என்ன செய்கிறாள்?" என்று மீனவன்மாதேவி கேட்டாள்.

"நாம்தானே வீரம்மாளைக் கண்காணாத இடத்திற்கு அனுப்ப வேண்டும் என்று முடிவு செய்தோம். வீரம்மா இங்கு இருப்பதே நல்லது. அரசர் வீரம்மாளைத் தஞ்சைக்கு வருமாறு வற்புறுத்தி விடுவாரோ என்று நான் அஞ்சினேன். அவள் தஞ்சைக்கு வந்தால் நம் நிலை என்னாகும்

என்று யோசித்தீர்களா?" என்றாள் பஞ்சவன்மாதேவி.

"அப்படியா? தஞ்சைக்கு அவள் வருவதை நாம் தடுத்து விடவேண்டும்".

"அந்தப் பொறுப்பு என்னுடையது" என்றாள் அரசி.

"உம்... அப்புறம் சொல்லுங்கள். வீரம்மாள் அழுதாள். அரசர் என்ன செய்தார்?" என்று இதுவரையில் பேசாமல் இருந்த அரிந்தவன்மாதேவி அறிந்து கொள்ளக் கேட்டாள்.

"நான் எப்படி வர்ணிப்பேன்... நம் தலைவருக்கு இன்னும் பெண் சபலம் போகவில்லை. வீரம்மாளைத் தன் அருகே இழுத்து அணைத்துக் கொண்டு..."


"அணைத்துக் கொண்டு..." என்று அரிந்தவன்மாதேவி கேட்கவும், மற்றவர்கள் இருந்த இடத்திலிருந்து ஆவலுடன் துடிக்கவும் அரசி கையை ஓங்கி, "ஆசையைப் பார் ஆசையை: எல்லாவற்றையும் என் வாய் மூலம் அறியத் துடிக்கும் உன் புத்தியை என்னவென்று சொல்வேன்..." என்று அதட்டினாள்.

"ஒன்று விடாமல் வர்ணிக்கிறீர்களே, இதையும் வர்ணிப்பீர்கள் என்று நினைத்துக் கேட்டேன்" என்று அவள் சமாதானம் சொல்லவும் மற்றவர்கள் ஆமோதித்து அரசியை வற்புறுத்தினர்.

சுற்றும் முற்றும் பார்த்து மெல்லிய குரலில், "அரசர் அவள் கண்ணீரைத் துடைத்தார். பிறகு அவளிடம் ஏதோ கூறினார். அங்கிருந்துப் புறப்பட்டார். நான் மறைந்திருந்துப் பார்ப்பதை யாராவது பார்த்துவிடப் போகிறார்கள் என்று நானும் அங்கிருந்துப் புறப்பட்டு விட்டேன்".

மற்றவர்களுக்கு ஏமாற்றம் ஏற்பட்டது.

"ஆ... நல்ல காட்சியைக் காணாமல் வந்துவிட்டீர்களே" என்று மீனவன்மாதேவி சொல்லவும் அங்கிருந்தவர்கள் 'ஹோஹோ' என்று சிரித்தனர்.



போர்ன்விடா புது அவதாரம்



'காட்பரி' நிறுவனத்தினர் நூறு ஆண்டுகளுக்கு மேலாகவே 'கோக்கோ'வினால் பொருட்களைத் தயாரித்து இந்திய மக்களுக்கு 'சாக்லேட்' மற்றும் பலவகை பானங்களைத் தயாரித்தளிப்பதில் முன்னோடியாக விளங்கியவர்கள். இப்போது அவர்கள் தயாரிப்பான 'போன்விடா'வில் கூடுதல் புரதம், விட்டமின்கள், தாதுப்பொருட்கள், மேலும் கார்போஹைடிரேட் சேர்த்துச் சுவைகூட்டி, புதுப்பொலிவுடன் விற்பனைக்கு வெளியிட்டார்கள். குழந்தைகளுக்கும், பள்ளிச் சிறார்களுக்கும் தற்போதுள்ள மிகுதியான உழைப்பிற்கு ஈடுகட்டவும், மனத்தெம்பிற்கும், கூடுதல் சக்தியுடன் 'போர்ன்விடா' புது அவதாரம் எடுத்திருப்பதை 'காட்பரி' நிறுவனத்தின் வியாபாரத்துறையின் துணைத் தலைவர் திரு. வினோத் தவான் கூறினார். தமிழ்நாடு, பாண்டிச்சேரி, கேரள மாநிலங்களின் கிளை மேலாளர் திரு. சுரேஷ் ஐயர் கூடுதல் சக்தி 'போர்ன்விடா' மேலும் 15 முதல் 20 சதவீதம் விற்பனையில் அதிகரிக்கும் எனக் கூறினார். ●

இராசேந்திர சோழர் அங்கு வந்து கொண்டிருந்தார். அவருடன் வீரமாதேவி வரவில்லை. சிற்பி மாணிக்க சேகரன் பயபக்தியுடன் அவர் பின் தொடர்ந்தான்.

சிற்பியின் தோள்களைத் தொட்டு, "சிற்பியாரே, உங்கள் கலைத் திறமையை மெச்சுகிறேன். சிற்பப் பணி தொடரட்டும். வீரமாதேவி தஞ்சை வருகிறாள். அதனால் சிற்பப் பணி தடைப்பட்டு விடக்கூடாது. இன்னும் சிற்பிகளை மதுரையினின்றும் மாமல்லையினின்றும் அழைத்து வாருங்கள்" என்றார்.

சிற்பி மாணிக்க சேகரன் ஏதோ சொல்ல வாயெடுத்தார். பிறகு வீரமாதேவியைச் சுட்டிக் காட்டி, "நேற்று தேவி ஒரு கதை சொன்னார்கள். சிவபெருமான் அருள் பெற்ற சண்டேசுவரருடைய கதை. அதைச் சிற்பமாக வடிக்கத் திட்டமிட்டேன். இந்தச் சமயத்தில்..." என்றான் தயக்கத்துடன்.

வீரமாதேவி குறுக்கிட்டு, "சிற்பியாரே! இன்று தஞ்சைபுரிக்குச் செல்கிறேன். விரைவில் திரும்பி வருவேன். நான் தனியே வரமாட்டேன் அரசருடன் வருவேன். நான் கூறியபடி, அந்தச் சண்டேசுவரர் வேறு யாருமல்லர். இவரேதான்" என்று அரசரைச் சுட்டிக் காட்டினாள். சிற்பி புரியாமல் திகைத்தார்.

"புரியவில்லையா? சிவபெருமானும் பார்வதிதேவியும் சண்டேசுவரருக்கு மலர் மாலை சூட்டுகிறார்கள். புவனம் புகழும் மாவீரர் நமது சோழச் சக்கரவர்த்தியின் பெருமையையும் வீரத்தையும் மெச்சி சிவபெருமான் மாலை அணிவிப்பதுபோல் அந்தச் சிற்பம் அமைய வேண்டும்.

"சோழர் குல நாயகன் வீரர் மட்டும் அல்லர்; அவர் சிறந்த சிவபக்தர் என்று உலகுக்கு அறிவிக்கும் காலம் வந்துவிட்டது. தன் பக்தருக்குச் சிவபெருமான் மாலை மரியாதை செய்வது நியாயந்தானே?" என்றாள்.

பிறகு தொடர்ந்து, "சிற்பியாரே ஞான சரஸ்வதி சிற்பம் பூர்த்தியாவதற்குள் நான் திரும்பி வருவேன். அரசருடன் வருவேன். பிறகு இந்தச் சிற்பப் பணி தொடங்கலாம்".

பிறகு அரசரை நோக்கினாள். அருகிலிருந்த அரசியாரை நோக்கினாள். இளவரசியர்களை அலட்சியமாகப் பார்த்தாள்.

'ஆ! வீரமாதேவி தஞ்சை வரப் போகிறாளா? திரும்பவும் அரசருடன் இங்கு வரப் போகிறாளா?' என்று கவலையும், அதிர்ச்சியும் நிறைந்த பார்வையை அரசியின் பக்கம் அவர்கள் செலுத்தினர்.

'அதெல்லாம் நடக்காது. நான் பார்த்துக் கொள்கிறேன்' என்பதுபோல் பஞ்சவன் மாதேவி கம்பீரமாகத் தலையசைத்தாள்.

(தொடரும்)

சென்னை - 2 உள்ள ஆர்.ஜே. ப்ராசஸ் ஆப்செட் அச்சகத்தில் அச்சிட்டவர் : ஆர். ஜனார்த்தனன், ஸ்ரீராம் டிரஸ்ட், சென்னை - 600 001 சார்பில் வெளியிட்டவர் : ஏ.வி. எஸ். ராஜா, ஆசிரியர் - விக்கிரமன், நிர்வாக